நமச்சிவாய வாழ்க

# கரு முதல் திரு வரை

( பன்னிரு திருமுறைகளின் தொகுப்பு )

தொகுத்து வெளியிடுவோர்

**சிவனடியார் திருக்கூட்டம் அறக்கட்டளை**

483, காவேரி வீதி, திருநணா ( பவானி ) – 638 301.
ஈரோடு மாவட்டம்.

*அலைபேசி - 94437 - 36238*

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| தலைப்பு | – | கரு முதல் திரு வரை |
| ஆசிரியர் | – | திருமுறை ஆசிரியர்கள் இருபத்து எழுவர் |
| வெளியீட்டு எண் | – | 1 |
| எழுத்து | – | 12 புள்ளிகள் |
| பக்கங்கள் | – | 260 பக்கங்கள் |
| படிகள் | – | 1000 |
| விலை | – | டாஃ 50 /- |
| ஒளி அச்சுக் கோர்வை | – | **திரு கிராஃபிக்ஸ்**<br>பவானி – 638 301.<br>அலைபேசி : 98425 - 10562. |
| அச்சிட்டோர் | – | **லவ்லி ஆப்செட் பிரிண்டர்ஸ் ( பி ) லிட்,**<br>சிவகாசி. |



அருட்குருநாதர் ஒளியகம் **சிவத்திரு. ந.ரா. ஆடலரசு** அவர்கள்
அருட்குருநாதர் **சிவத்திரு. ந. ஒளியரசு** அவர்கள்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

குருவே சிவம் எனக் கூறினன் நந்தி
குருவே சிவம் என்பது குறித்து ஓரார்
குருவே சிவனுமாஃக் கோனுமாஃ நிற்கும்
குருவே உரையுணர்வு அற்றதோர் கோவே.



**ஈர்த்தெம்மை ஆட்கொண்ட எந்தை பெருமான்**
**அருள்தரும் பண்ணார் மொழியம்மை உடனமர்**
**அருள்மிகு திருநணாவுடையார்**

திருச்சிற்றம்பலம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓர் ஊரும் நீ
துஃஷ்பனவும் உஃஷ்பனவும் தோற்றுவாஃ நீ
துணையாஃ என் நெஞ்சம் துறப்பிப்பாஃ நீ
இப்பொன் நீ இம் மணி நீ இம் முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

# கரு முதல் திரு வரை

( பன்னிரு திருமுறைகளின் தொகுப்பு )

## பொருளடக்கம்

### 1. குழந்தைப் பேறு


நன்மக்கட்பேறு அடைய ( கண்காட்டு நுதலானும்..... ) 26
கருக் கலையாமல் பாதுகாக்க ( முத்திலங்கு..... ) 28
சுகப்பிரசவம் இனிதே நடைபெற ( நன்றுடையானை..... ) 30
சுகப்பிரசவம் இனிதே நடைபெற ( மட்டுவார்..... ) 32


### 2. குருவருள்


திருஞானசம்பந்தர் ( தோடுடைய..... ) 34
திருநாவுக்கரசர் ( கூற்றாயினவாறு..... ) 36
திருசுந்தரர் ( பித்தா பிறை சூடி..... ) 39
திரு மாணிக்கவாசகர் ( நமச்சிவாய வாழ்க..... ) 42


### 3. வினை நீக்கம்


பிறந்த பயனைப் பெற ( தலையே நீ..... ) 47
ஒன்பது கோள் நலிவிலிருந்து நீங்க ( வேயுறு தோளி..... ) 49
ஒன்பது கோள்களால் ஏற்படும் துன்பம் நீங்க ( நாளாய ) 53
சனிக்கிரக தாக்குதல் நீங்க ( போகமார்த்த..... ) 55
இடர் நீங்கி இன்பம் பெற ( மறையுடையாஃ.... ) 57
செஃவினையும் தீவினையும் நீங்க ( அவ்வினைக்கு..... ) 59
கேட்டார் வினை கெடுக்கும் பதிகம் ( பந்தார் விரல்..... ) 61
நல்லாராஃ வாழ ( கற்றாங்கு எரியோம்பி..... ) 63

## 4. நோயிலிருந்து பாதுகாப்பு


| | |
|---|---|
| தீராத நோய்கள் தீர ( மந்திரமாவது நீறு..... ) | 66 |
| முடக்குவாத நோய் நீங்க ( துணிவளர் திங்கள்..... ) | 68 |
| எலும்பு முறிவு சம்பந்தமான நோய்கள் தீர ( விங்கு..... ) | 72 |
| உடைந்த எலும்புகள் ஒன்று சேர ( மட்டிட்ட புன்னை..... ) | 76 |
| பலவகை உடற்பிணிகள் அகல ( மின்னுமா..... ) | 78 |
| பாம்பு விடம் நீங்க ( ஒன்றுகொலாம்..... ) | 81 |
| வலக்கண் பார்வை பெற ( மீளா அடிமை..... ) | 83 |
| இடக்கண் பார்வை பெற ( ஆலந்தான்..... ) | 87 |
| ஊமை, திக்குவாய் நீங்க ( பூசுவதும் வெண்ணீறு..... ) | 91 |
| எம பயம் நீக்கும் திருப்பதிகம் ( கண்டு கொள்ளரி..... ) | 95 |


## 5. கல்விச் செல்வம்


| | |
|---|---|
| கல்வியில் சிறந்து விளங்க ( ஒருருவாயினை..... ) | 98 |
| கல்வி பெற ( துஞ்சலும் துஞ்சல்..... ) | 100 |
| கல்வி பெற ( காதலாகி கசிந்து..... ) | 102 |
| கல்வி பெற ( சொற்றுணை வேதியன்..... ) | 104 |
| கல்வி பெற ( மற்றுபற்று எனக்கு..... ) | 106 |
| கல்வி பெற ( இரும்பு தரு மனத்தேனை..... ) | 110 |


## 6. செல்வம்


| | |
|---|---|
| மழை பெறும் பதிகம் ( நீறு சேர்வதொர்..... ) | 113 |
| மழை பெறும் பதிகம் ( கருத்தன் கடவுள்..... ) | 115 |
| தீராத வழக்குகள் தீர ( வாசி தீரவே..... ) | 117 |
| தேவைக்கேற்ற பணம் பெற ( இடரினும் தளரினும்..... ) | 118 |
| கடன் சுமை நீங்க ( மெய்யை முற்றப்..... ) | 121 |
| பொன்னும் பொருளும் பெற ( நெய்யும் பாலும்..... ) | 124 |

பொன்னும் பொருளும் பெற ( தம்மையே புகழ்ந்து..... ) 127
பொன்னும் பொருளும் பெற ( பத்தூர் புக்கிரந்து..... ) 131
தொடங்கும் செயல் நிறைவேற ( வேத வேள்வியை..... ) 135
பகைவரை அடக்கி வெற்றி பெற ( வளைந்தது..... ) 138
என்றும் உணவு கிடைக்க ( அன்னம் பாலிக்கும்..... ) 141
வையகந் துயர் தீர ( வாழ்க அந்தணர்..... ) 143
களவு போன பொருட்கள் கிடைக்க ( கொடுகு ..... ) 145
பொன்னும் பொருளும் பெற ( பொன்செஃத மேனி..... ) 148


## *7. திருமணம்*


திருமணம் கைகூட ( நீறுவரி ஆடரவொடு..... ) 153
தடைபட்ட திருமணம் நிறைவேற ( சடையாஃ.... ) 155
கணவன் மனைவி ஒற்றுமையுடன் வாழ ( அயிலாரும்..... ) 157
திருமணம் கைகூட ( பட்ட நெற்றியர்..... ) 159
மங்களப் பதிகம் ( மண்ணில் நல்ல..... ) 161
பாவநாசத் திருப்பதிகம் ( பற்றற்றார் சேர்..... ) 163


## *8. திருத்தலச் செலவு*


திருக்ஷேத்திரக் கோவை – திருஞானசம்பந்தர் 168
திருக்ஷேத்திரக் கோவை – திருநாவுக்கரசர் 171
ஊர்த்தொகை – சுந்தரர் ( காட்டூர்க் கடலே ) 175
யாத்திரைப் பத்து – மாணிக்கவாசகர் ( பூவார் சென்னி ) 177


## *9. திருமேனி காண்டல்*


வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும் 181
வானவன் காண் வானவர்க்கு மேல் ஆனான் 185
நீறேறு திருமேனி உடையான் கண்டாஃ 188

முன்னோன் காண்க முழுதோன் காண்க 191
இருநிலனாய்த் தீயாகி நீருமாகி 193
ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே 196
உம்பர்கட்கு அரசே ஒழிவற நிறைந்த 200
அரவணையான் சிந்தித்து அரற்றும் அடி 203
புவம் வளி கனல் புனல் புவி கலை உரை மறை 206

## *10. இறைவனைப் போற்றிப் பரவுதல்*

எல்லாஞ் சிவனென்ன நின்றாய் போற்றி 211
கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி 214
வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி 217
பொறையுடைய பூமி நீரானாய் போற்றி 220
பாட்டான நல்ல தொடையாய் போற்றி 223

## *11. அடியார்களை வழிபாடு செ தல்*

திருத்தொண்டத் தொகை 228
பெரிய திருத்தாண்டகம் ( தில்லை ) 232

## *12. வீடு பேறு*

கல்லூர்ப் பெருமணம் – சம்பந்தர் 236
எண்ணுகேன் என் சொல்லி – அப்பர் 238
தானெனை முன் படைத்தான் – சுந்தரர் 241
முத்தி நெறி அறியாத – மாணிக்கவாசகர் 243

திருமுறை ஆசிரியர்கள் 27 பேர் பாடல் 245
பன்னிரு திருமுறை 253

இந்த புத்தகம் கிடைக்கும் இடம் - விபரம் 259

# பதிப்புரை

கருவிலிருந்து திரு வரை இந்நூல் நம்முடைய தேவைகளை முறைப்படுத்தி, அவற்றைப் பெற்று வாழத் திருவருட்பாங்கின் வண்ணம் அமைந்துள்ளது. மனிதராகப் பிறந்த நாம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து இறைவன் திருவடியில் ஆனந்தமாஃ இருக்க வேண்டும். நம் வாழ்வில் சந்திக்கும் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கைப் பகுதிகளைப் பன்னிரண்டு பகுதிகளாகப் பிரித்து அவற்றிற்கேற்ப இந்நூல் **கரு முதல் திரு வரை** எனத் தொகுக்கப்பட்டுள்ளது.

*அவை பின்வருமாறு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன :*

1. குழந்தைப் பேறு
2. குருவருள்
3. வினை நீக்கம்
4. நோயிலிருந்து பாதுகாப்பு
5. கல்விச் செல்வம்
6. செல்வம்
7. திருமணம்
8. திருத்தலச் செலவு ( திருத்தலப் பயணங்கள் )
9. திருமேனி காண்டல்
10. இறைவனைப் போற்றிப் பரவுதல்
11. அடியார்களை வழிபாடு செஃதல்
12. வீடு பேறு

மனிதராகப் பிறந்த ஒருவர் எவ்வாறு வாழ்வை அமைத்துக் கொள்ளவேண்டும் எனில்

நம் வாழ்க்கையில் பெறும் பேறுகளில் தலையாய பேறு மக்கட்பேறு. அதுவும் திருவருளைச்சிந்திக்கும் ஞானக் குழந்தையைப் பெறல் வேண்டும். ஞானமுள்ள அக்குழந்தைக்கு ஏழு வயதில் முறைப்படி குருநாதரிடம் தீக்கை பெறுவது. அவ்வாறு பெறுவதன் மூலம் திருவருளை எளிதில் பெறலாம்.

குருவுபதேசத்தின் பயனாகக் குழந்தையின் வினை நீக்கம் செய்யப்படுகிறது. வினை நீக்கத்தின் பயனாக உடலில் ஏற்படும் நோய்கள் நீக்கப்படுகின்றன. நோயிலிருந்து நீக்கப்பட்ட குழந்தைக்கு நல்ல கல்வி கிடைக்கப் பெறுவது நன்கு கற்றுத் தேறி வாலிபப் பருவத்தில் நேர்மையாய் உழைத்துச் செல்வத்தைச் சேர்ப்பது.

சேர்த்த செல்வத்தைக் கொண்டு நல்ல இல்வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்வது, திருமணத்தின் பின்பு தான் தேடிய செல்வத்தின் பயனாக இல்லாளொடு திருத்தலச் செலவுகள் மேற்கொள்வதன் பயனாக இறைவனது திருமேனியைக் கண்டு வழிபடுவது, திருமேனியைக் கண்ட ஆனந்தத்தில் அன்பால் போற்றுவது, திருவடியைப் போற்றியதன் பயனாக அவனடி மறவாத திருத்தொண்டர்களைச் சிவமாகவே ( சிவனடியார்களை ) கண்டு அவர்களை உள்ளும் புறமும் போற்றுவது.

அடியார்கள் நடுவுள் இருக்கும் அருளைப் பெற்றதின் பயனாக இறுதியில் சிவபெருமானின் திருவடியை அடைவது என வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வழிகாட்டியாக இந்நூல் பன்னிரு திருமுறைகளைக் கொண்டு திருவருளால் தொகுக்கப் பட்டிருக்கிறது.

நம்மைப் பெற்ற தாயைவிட மிகச் சிறந்தவர் நமது சிவபெருமான். நாமும் சிவமாம் தன்மை பெறவேண்டும் என்பதற்காக அவர் ஒன்றாஃ உடனாஃ வேறாஃ இருந்து இடையறாது அருள் செஃதுகொண்டே இருக்கிறார். நாம் எத்தகைய குற்றம் செஃதிருப்பினும் மனம் திருந்தி உண்மையான அன்போடு சென்று அவருடைய திருவடியை வணங்கி சரணடைந்து ஓம் நமசிவாய, சிவாய நம, சிவ சிவ எனச் சொல்லி வழிபட்டால் அக்குற்றங்களிலிருந்து நம்மைக் காப்பாற்றுவார், மேலும் இனிமேல் நாம் தவறுகள் செஃயாமலும் தடுப்பார்.

" தேவா சிறியோம் பிழையைப் பொறுப்பாஃ பெரியோனே
ஆவா என்று அங்கு அடியார் தங்கட்கு அருள் செஃவாஃ "
– திருஞானசம்பந்தர்

" பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணி நின்று அறுப்பது நமச்சிவாயவே " – திருநாவுக்கரசர்

" பின்னை என் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாம் தவிரப் பணிப்பானை " – சுந்தரமூர்த்தி நாயனார்

" பிழைத்தால் பொறுக்க வேண்டாவோ " – மாணிக்க வாசகர்

" மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையின்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும் "
– பெரியபுராணம்

இந்நூல் பன்னிரு திருமுறைகளைப் போற்றும் முகத்தானாகப் பன்னிரு தலைப்புகளை உள்ளடக்கியும் எழுபத்து மூன்று திருப்பதிகங்களை உள்ளடக்கியதாகவும்

பன்னிரு திருமுறைகளை அருளிய இருபத்து ஏழு அருளாளர்களைப் போற்றும் முகத்தானாக இருபத்து ஏழு தனிப்பாடல்களை உடையதாகவும் தொகுக்கப்பட்டிருக்கிறது.

இந்நூல் தொகுப்பிற்கு எங்களுக்கு ஆலோசனைகள் வழங்கியும், பிழை திருத்தம் செய்தும் உதவிய ஈரோடு சித்தம் அழகியார் வழிபாட்டு மன்றத்து அம்மையார் **சைவத்திரு. மீனாட்சி அம்மையார்** அவர்களுக்கும், இந்நூலை செம்மையான முறையில் வடிவமைத்துக் கொடுத்த பவானி திரு கிராஃபிக்ஸ் உரிமையாளர் **சிவத்திரு சி. மா. ஜானகிராமன்** அவர்களுக்கும், நன்முறையில் அச்சிட்டுக் கொடுத்த **லவ்லி ஆப்செட் பிரிண்டர்ஸ் ( பி ) லிமிடெட், சிவகாசி நிறுவனத்திற்கு**ம், எங்களோடு பலவகைகளில் பல்லாற்றானும் உதவிய அத்துணைச் சிவநேயச் செல்வர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளை அவர்களது திருவடிக்கீழ்ச் செலுத்துகிறோம்.

இந்நூலின் அட்டைப் படத்தில் நாங்கள் பயன்படுத்தியுள்ள அம்மையப்பர் படம் **ஓவியர் திருமிகு மணியம் செல்வன்** அவர்கள் வரைந்தது. இப்படம் இந்நூல் சென்ற இடங்களிலெல்லாம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. சைவ உலகிற்கு நல்லதொரு திருவுருவப் படத்தை அளித்தமைக்கும் இந்நூலில் இப்படத்தை நாங்கள் பயன்படுத்திக் கொண்டமைக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை ஓவியர் திரு ம.செ. அவர்களுக்கு உரித்தாக்குகிறோம்.

இந்நூல் யாவருக்கும் புரியும் வகையில் பாடல்கள் பிரித்து அச்சிடப்பட்டுள்ளன. சீர், அசை, தளை, பா வகை ஆகியவற்றை மூல நூலில் கண்டு கொள்ள வேண்டுகிறோம்.

இதில் ஏதேனும் பிழை இருப்பின் " பொறுப்பரன்றோ பெரியோர் சிறு நாய்கள் தம் பொய்யினையே " என்ற மணிவாசகரின் வாக்கிற்கு ஏற்ப எங்களது பிழை பொறுத்து அருள வேண்டுகிறோம்.

# முன்னுரை

ஆதியாஃ நடுவும் ஆகி, அளவிலா அளவும் ஆகிச் சோதியாஃ உணர்வும் ஆகித் தோன்றிய பொருளுமாகிப் பேதியா ஏகம் ஆகிப், பெண்ணுமாஃ ஆணுமாகிப், போதியா நிற்கும் தில்லைப் பெருமானின் கருணையினால் மானிடராஃ நாம் பிறந்துள்ளோம்.

இந்த மானிடப் பிறப்புக்கு முன் நாம் என்னவாக இருந்தோம் ? அடுத்த பிறவியில் நாம் என்னவாகப் பிறக்கப் போகிறோம் என்ற ஆஃவு ஒவ்வொரு நெறியிலும் ( சமயத்திலும் ) நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. இந்த ஆராஃச்சியை நம் அறிவினால் காணவோ கணக்கிடவோ முடியாது. சிவபெருமானின் கருணையினால்தான் காணவும் கணக்கிடவும், உணரவும் முடியும் என்பது அருளாளர்களின் முடிந்த முடிவு. அவ்வாறு அருளாலே உணர்ந்த அருளாளர்களால் அருளப்பட்டவையே பன்னிரு திருமுறையும், பதினான்கு சாத்திரங்களும் ஆகும்.

உயிரோடு கலந்து நிற்கும் ஆணவ மலத்தை அடக்கும் பொருட்டுச் சிவபெருமான் தம் கருணை நோக்கால் உயிர்களை பிறப்பு இறப்புக்கு உட்படுத்துகின்றார். அவ்வாறு உயிர் பிறக்கும் போது நான்கு வகைத் தோற்றமும், ஏழு வகைப் பிறப்பும், எண்பத்து நான்கு இலட்சம் யோனி பேதமாகப் பிறந்து இறந்து உழல்கின்றது.

நான்கு வகைத் தோற்றம் என்பது உயிர்கள் பிறப்பதற்குரிய முட்டையில் தோன்றுவது, வேர்வையில் தோன்றுவது, வித்தில் தோன்றுவது, கருப்பையில் தோன்றுவது என்று எண்ணப்படும்.

முட்டையில் தோன்றுபவை – பாம்பு, தவளை, முதலை, ஆமை, அரணை, உடும்பு, மீன், பறவை, பல்லி போன்றவை.

வேர்வையில் தோன்றுபவை – கிருமி, பேன், விட்டில் பூச்சி போன்றவை

வித்துகளில் மற்றும் வேர்களில் தோன்றுபவை – மரம், செடி, கொடி, புல், பூண்டு போன்றவை

கருப்பையில் தோன்றுபவை – நான்கு கால் விலங்குகள், மனிதர், தேவர் முதலானோர்.

இந்த நான்கிலிருந்து தோன்றும் ஏழுவகைப் பிறப்பு என்பது **1.** தேவர், **2.** மனிதர், **3.** விலங்கு, **4.** பறவை, **5.** ஊர்வன, **6.** நீர் வாழ்வன, **7.** தாவரம் என்பனவாகும்.

இந்த ஏழுவகைப் பிறப்பில் உயிர்க்கு உண்டாகும் உறுப்புப் பேதம் எண்பத்து நான்கு இலட்சமாகும். அவைகளின் விபரம் :

| | | |
|---|---|---|
| தாவரங்கள் | 19 | இலட்சம் |
| ஊர்வன | 15 | இலட்சம் |
| தேவர்கள் | 11 | இலட்சம் |
| நீர் வாழ்வன | 10 | இலட்சம் |
| பறவைகள் | 10 | இலட்சம் |
| விலங்குகள் | 10 | இலட்சம் |
| மனிதர்கள் | 9 | இலட்சம் |
| ஆக மொத்தம் | 84 | இலட்சம் |

ஆக இத்துணைப் பிறப்புகளில் மானிடப் பிறவியைப் பெற்றுவிட்டால் அப்பேறு " கடலைக் கையால் நீந்தினன் காரியம் காண் " என்று அருள்நந்தி சிவம், சிவஞான சித்தியாரில் குறிப்பிடுகிறார்.

மானிடப் பிறவியிலும் சைவ நெறி சார்ந்து திருநெறிய தமிழால் கோகழி ஆண்ட குருமணியைப் போற்றுவது என்பது நமது மேலைத் தவத்தால் அன்றிக் கிட்டா. உயிர் ஒவ்வொரு பிறவியிலும் தான் செய்த முன்வினைகளுக்கு ஏற்ப இன்ப துன்பங்களை அனுபவிக்கிறது.

வினை இரு கூறாகப் பிரிக்கப்படும்.

**வினை**

| | |
|---|---|
| **நல்வினை** | **தீ வினை** |
| ↓ | ↓ |
| **புண்ணியம்** | **பாவம்** |
| ↓ | ↓ |
| **இன்பம்** | **துன்பம்** |

நாம் செய்த வினைகளை ஒரே பிறவியில் அனுபவித்துக் கழிக்கும் ஆற்றல் உயிருக்கு இல்லை. எனவே மாதொருபாகன் நம்மீது கொண்ட கருணையினால் நம்முடைய வினை முழுவதையும் ஒரே பிறவியில் கொடுக்காமல், நம்முடைய வினைத்தொகுதியில் இருந்து ஒரு சிறிதளவே எடுத்து நம்மைப் பிறவிக்கு அனுப்புகிறார். அவ்வாறு நாம் கொண்டுவந்த வினைத்தொகுதி பிராரர்த்த வினை ( நிகழ்வினை ) எனப்படும்.

நாம் கொண்டுவந்தது போக மீதமுள்ள வினைத்தொகுதி சஞ்சித வினை ( பழ வினை ) எனப்படும். நிகழ்வினையைக் கொண்டு நாம் செய்யும் வினை ஆகாமியம் ( வரும் வினை ) எனப்படும். நம்முடைய பழவினை குருவிடம் உபதேசம் ( தீக்கை ) பெறும் போது முற்றிலுமாக நீங்கிவிடுகிறது. ஏகனாகி இறைபணியில் நிற்றல் மூலமாக ஆகாமிய வினை ( வரும் வினை ) ஏறாமல் செய்யும்.

நாம் கொண்டு வந்த பிராரர்த்த வினையினை நீக்க நம்முடைய அருளாளர்கள் அருளிச்செஃத பன்னிரு திருமுறைகளை ஓதியுணர்தலே வழி. நம்முடைய திருமுறைகள் திருவருளோடு ஒன்றி, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கப் பாடி வழிபடும்போது, நம்முடைய நிகழ்வினை ( பிராரர்த்த வினை ) மெலிந்தும், வாடியும், நீங்கவும் செஃகிறது. மேலும் நம்முடைய பழவினையையும், வருவினையையும் நீக்கவல்ல ஆற்றலுடையன தாம் நமது பன்னிரு திருமுறைகள்.

நம்முடைய காழி வள்ளல் தனது பதிகத்தில் " ஓதி நாளும் நின்னையே ஏத்தும் என்னை வினை அவலம் வாதியாமே வந்து நல்காஃ வலிவலம் மேயவனே " என்று அருளிச் செஃதிருக்கிறார். எம்பிரான் திருஞானவமுதுண்ட பிள்ளையாரின் திருப்பதிகங்கள் முழுவதிலும் பதிகத்தைப் பாராயணம் செஃதால் கிடைக்கும் பயன்களில் 75% சதவீதத்திற்கும் மேலாக வினை நீக்கம் பற்றியே அருளியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

" திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே " ( 1-11 )

" ஞானசம்பந்தன் வாஃ நவிற்றிய தமிழ்மாலை ஆதரித்து இசை
கற்று வலார், சொலக் கேட்டு உகந்தவர் தம்மை, வாதியா வினை
மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்து அடையாவே " ( 2-11 )

"பாடல் வல்லார்க்கு அறும் நீடு அவலம் அறும் பிறப்புத்தானே."( 1-11 )

" பாடல் பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே. " ( 1-11 )

" உடைய தமிழ் பத்தும் உணர்வார் அவர்கள்
தொல்வினைகள் ஒல்கும் உடனே " ( 1-11 )

" வினையாயின நீங்கிப்போஃ விண்ணவர் வியனுலகம்
நிலையாக முன்னேறுவர் நிலமிசை நிலையிலரே " ( 3-11 )

" நமச்சிவாய பத்தும் ஏத்தவல்லார் தமக்கு
இடுக்கண் இல்லையே " – அப்பர் ( 4-10 )

" நாணனைத் தொண்டன் ஊரன் சொல் இவை
சொல்லுவார்க்கு இல்லைத் துன்பமே " – சுந்தரர் ( 7-10 )

எனவே நம்முடைய துன்பத்தை நீக்க ஞானமே வடிவான பன்னிரு திருமுறைகளை அன்றிப் பிறிதொன்றால் ஆகா. " இன்பம் வேண்டில் இராப்பகல் நின்று ஏத்துமின் " என்பது அப்பர் பெருமான் திருவாக்கு.

தாயின் கருப்பைக்கு நாம் வரும்போது, நமக்கு முன்பே, காயக் கருக்குழியில் காத்திருந்து நம்மை கண்ணுதல் பெருமான் கருவிலேயே ஆட்கொள்கிறார். ஆட்கொண்டதன் பயனாக நமக்கு ஊனுடம்பைக் கொடுத்து நம்மைக் கருவாக்கி உருவாக்கி உலகத்தில் உலவச் செஃதுள்ளார்.

நம்மைக் கருவாக்கி உருவாக்கிய திருவுடையானைப் போற்றிப் பரவுவதே நம்முடைய நன்றிக் கடனாகும். திருவைப் பரவுவதற்கு வயது தடையில்லை. இதனை நம் திருநாவுக்கரசு சுவாமிகள் அழகாக அருளியுள்ளார். நம்முடைய பருவத்தைக் குழந்தை, சிறுவன், வாலிபம், வாலிபம் கடந்த நிலை என நான்காகப் பிரித்து அந்தந்தப் பருவத்தில் நாம் விரும்புவனவற்றைக் குறிப்பிட்டு அவற்றை விட இனியவன் தன்னடைந்தார்க்கு இடைமருதனே என அருளுவதைக் கண்டு நாம் தெளிவுபட வேண்டும்.

குழந்தை விரும்பும் கனியினும் இனியன் இடைமருதனே
சிறுவர்கள் விரும்பும் கரும்பினும் இனியன் இடைமருதனே
வாலிபர்கள் விரும்பும் கன்னியர்களையும் விட இனியன்
இடைமருதனே
வாலிபம் கடந்த நிலையில் விரும்பும் பதவிகளைக் காட்டிலும்
இனியன் தன்னடைந்தார்க்கு இடைமருதனே

ஆகக் கனியினும், கட்டி பட்ட கரும்பினும், கோதை மாரினும், ஆளும் அரசினும் இனியன் இடைமருதனே என்று அருளிச் செஃதிருப்பது சிந்தித்தற்குரியது. ஆக நாம் விரும்பும் நிலைகளைவிடக் கோடி மடங்கு இன்பம் தருபவன் நமது சிவபெருமான் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

நாம் இல்லறத்தில் இருந்துகொண்டே துறவியர் பெறும் வீடுபேற்றை அடைய முடியும் என்பது தமிழர் கண்ட நெறி. இக்கருத்தை நம் பட்டினத்து அடிகள் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் அருளிச் செஃதிருக்கிறார்.

துறவிகள் வீடு, மனைவி, மக்கள், சுற்றம் துறந்து, காட்டிற்குச் சென்று உணவைத் துறந்து இலையை உண்டு, காற்றைப் புசிபித்து ஐந்தெழுத்தைச் சொல்லித் தவம் செஃது முடிவில் வீடு பேறு அடைகின்றார்கள். ஆனால் நாமோ வீட்டில் இருந்துகொண்டே அழகான மனைவி, அன்பான குழந்தை, அருமையான சுற்றம், தங்குவதற்கு மாளிகை, ஏவல் செஃயப் பணியாள் எனச் சுகமாக வாழ்கிறோம். அவ்வாறு வாழும்போது வாயிடை மறவாமல் ஐந்தெழுத்தைச் சொல்லிவந்தால் போதும் வீடுபேற்றை இழந்திலோம் என்று அருளியிருக்கிறார். இதற்கு உவமையாகப் பலசாலி ஒருவன் தன் சக்தி எல்லாவற்றையும் திரட்டி வான்நோக்கிக் கல்லை எறிந்தாலும் அக்கல் மிக உயரே சென்றுவிட்டுச் சிறிது நேரத்தில் பூமி நோக்கி விழும். அதுபோன்றே பலமில்லாத ஒருவன் வான் நோக்கிக் கல் எறிந்தாலும் சிறிது தூரமே சென்ற அக்கல்லும் பூமி நோக்கியே விழும். இதுபோன்றுதான் துறவியானாலும், இல்லறத்தான் ஆனாலும் மறவாது ஐந்தெழுத்தைச் சொல்லும் ஒருவர் நிச்சயமாஃ வீடுபேறு ( முத்தி ) பெறலாம் என்பது திண்ணம்.

" வல்லான் ஒருவன் கைம் முயன்று எறியினும் மாட்டா ஒருவன்
வாளா எறியினும் நிலத்தின் வழா அக் கல்லே போல
நலத்தின் வழார் நின் நாமம் நவின்றோரே "

– பட்டினத்தார் அருளிச்செஃத 11 ஆம் திருமுறை

நம்முடைய பிறப்பில் இருந்து இறைவன் திருவடியை அடையும் வரை நமக்கு ஏற்படும் இன்னல்களை நீக்க அவனருளாலே அவன் தாள் வணங்கி நின்று திருமுறைகளைப் பாடிப் பரவுவதைத் தவிர வேறு வழியில்லை. நாம் நம்முடைய தேவைகளைத் திருவருட்டுணையுடன் திருமுறைகளின் மூலம் பெற்று, திருவருளை மறவாமல் அனுபவிப்பதே சிறந்த சிவானுபவம் ஆகும். இவ்வுலகிற்குத் தேவையான பொருளையும், அருள் உலகிற்குத் தேவையான அருளையும் ஒருசேரத் தருவது நமது திருமுறைகள் ஒன்றே என்பது திண்ணம்.

கருவாகிப் பின் உருவாகிப் பிறவியில் உழன்று கொண்டிருக்கும் நாம் மீண்டும் கருவாகாமல் உருவாகாமல் இருக்க ஒரே வழிதான் உண்டு. அது அறமார் புனல் தில்லை அம்பலத்தே ஆடுவான் மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குதலே ஆகும். நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனை வாழ்த்தவும், வணங்கவும், அவர் நமக்குத் தந்த அருட்கொடையே திருமுறைகள்.

ஒன்பான் கோள்களால் ( நவக்கிரகங்களால் ) நட்சத்திரங்களால், திசைத் தெஃவங்களால், காலனால் ( எமனால் ), காமனால், கொடு நோஃகளால், பூதங்களால், யானை, பாம்பு, தேள்களால், வாதத்தால், பித்தத்தால் ஏற்படும் கேடுகளை நீக்கவல்லன நமது பன்னிரு திருமுறைகள்.

நமது தலையில் பிரமன் எழுதிய தலையெழுத்தையே மாற்றவல்லது நமது திருமுறைகள். கருவானதால் உருவான நாம் சிவபெருமானின் திருவடியை அடையும் வரை திருமுறைகளைப் பாடுவோம், பாடி ஆடுவோம்.

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும் பன்னிரு திருமுறையே ! திருமுறைகள் அன்றி வேறில்லை !

திருமுறைகளே நமது வேதம் ! திருமுறைகளே நமது நாதம் !

இன்னணம். **சிவ. அ. தியாகராசன்,**

தலைவர், சிவனடியார் திருக்கூட்டம் அறக்கட்டளை, பவானி.

# சிவனருள் பெற செ ய வேண்டுவன

சைவ சமயக் கோளரிகளான எம்பிரான் நால்வர் , அறுபத்து மூவர் மற்றும் கருணைக் கடலாம் பார்வதியம்மையுடனமர் சிவபெருமான் திருவுருவப் படம் ஒவ்வொருவருடைய இல்லத்திலும் பூசையறையில் கட்டாயம் இருக்க வேண்டும். சிவபெருமான் திருவுருவப் படம்தான் மற்ற தெஃவப் படங்களுக்கு மேல் இருக்க வேண்டும்.

வழிபாட்டின் போது திருவிளக்கு ஏற்றி , கீழே அமராமல் ஆசனத்தில் வடக்கு திசை நோக்கி அமர்ந்து திருமுறைகளைப் பாராயணம் செஃய வேண்டும்.

ஒவ்வொரு நாளும் ஐந்தெழுத்தை ( நமசிவாய, சிவாய நம ) மறவாது எண்ணல் வேண்டும்.

ஒவ்வொரு நாளும் இறைவனது புகழை யாராவது ஒருவரிடமாவது பேச வேண்டும்.

ஒருநாளுக்கு ஒருமுறையேனும் சிவாலயத்திற்கு சென்று கட்டாயம் வழிபாடு செஃய வேண்டும்.

நாம் காலையில் உணவு உண்பதற்கு முன் இறைவருக்கு மலர் பறித்து இட்டே உண்ண வேண்டும்.

அருநோஃகளை நீக்கும் ஆற்றலுடைய திரு ஆலவாயான் திருநீற்றை எப்போதும் மங்காமல் பூசுதல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்



## நால்வர் பெருமக்கள் துதி

பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல் மிதப்பில் அணைந்த பிரான் அடி போற்றி
வாழி திருநாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத ஊரர் திருத்தாள் போற்றி.

## திருமுறை ஆசிரியர்கள் 27 பேர் துதி

திருஞானசம்பந்தர் நாவரசர் சுந்தரர்
திருவாதவூரர் மற்றைத்
திருமாளிகைத் தேவர் சேந்தனார் கருவூரர்
தெள்ளு பூந்துருத்தி நம்பி
வருஞான கண்டராதித்தர் வேணாட்டடிகள்
வாஃந்த திருவாலியமுதர்
மருவு புருடோத்தமர் சேதிராயர் மூலர்
மன்னு திரு ஆலவாயார்
ஒரு காரைக்காலம்மை ஐயடிகள் சேரமான்
ஒளிர்கீரர் கல்லாடனார்
ஒண்கபிலர் பரணர் மெஃயுணர் இளம்பெருமானோடு
ஓங்கும் அதிரா அடிகளார்
திருமேவு பட்டினத்து அடிகளோடு நம்பியாண்டார் நம்பி
சேக்கிழாரும் சிவநெறித்
திருமுறைகள் பன்னிரண்டு அருள்செஃத
தெஃவீகத் தன்மையோரே.

## தெ வச் சேக்கிழார் துதி

தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார் பதம் போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர் சேக்கிழார் அடி போற்றி.

## சந்தானக் குரவர் துதி

ஈராண்டில் சிவஞானம் பெற்றுயர்ந்த
மெஃகண்டார் இணைத்தாள் போற்றி
நாராண்ட பல் அடியார்க்கு அருள் புரிந்த
அருள் நந்தி நற்றாள் போற்றி
நீராண்ட கடந்தை நகர் மறைஞான சம்பந்தர்
நிழல் தாள் போற்றி
சீராண்ட தில்லை நகர் உமாபதியார்
செம்பதுமத் திருத்தாள் போற்றி.

## திருமுறைகளின் சிறப்பு

திருமுறையே சைவநெறிக் கருவூலம்
தென்தமிழின் தேன்பாகாகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான்
செவிமடுத்த செந்தமிழ்வேதம்
திருமுறையே நடராசன் கரம்வருந்த
எழுதியருள் தெஃவ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாஃ
மலர்ந்தருளும் சிறப்பிற் றாமால்.



## ஐங்கரப் பெருமான் துதி

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடி கணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.



## முருகப் பெருமான் துதி

அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல் என வேல் தோன்றும் – நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்றோதுவார் முன்.



உருத்தெரியாக் காலத்தே உள் புகுந்தென் உளம் மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள் தில்லை கண்டேனே.

– எம்பிரான் மணிவாசகப் பெருமான்.



# குழந்தைப் பேறு

நம் பழந்தமிழர் கண்ட நெறி இல்லறத்தில் இருந்துகொண்டு அறம் செஃது இன்பம் நுகர்ந்து வீடு பேறு அடைதல் ஆகும். அவ்வாறு அமையப் பெற்ற இல்வாழ்க்கையில் நல்ல சிவ ஞானமுடைய குழந்தையைப் பெறுதல் அவ் இல்லத்திற்கு அணி. இதனை நம் திருவள்ளுவர்,

**பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**
**மக்கட்பேறு அல்ல பிற. — என்று அருளுகிறார்.**

திருவெண்காடு திருத்தலத்தில் ஒப்பரு ஞானம் உண்ட திருஞானசம்பந்தர் அருளிய இந்த பதிகத்தை தெஃவச் சேக்கிழார் **" செப்பரும் பதிக மாலை "** என்று போற்றுகிறார். இந்த திருவெண்காட்டுப் பதிகத்தைப் பாடித்தான் நம் சைவ சித்தாந்த ஞானக்களிறு ஆகிய " மெஃகண்டார் " அவதரித்தார் என்பது ஓர் வரலாற்றுச் சான்று.

எனவே நன்மக்கட்பேறு அடைய விரும்புபவர்கள் திருவெண்காடு சென்று அங்குள்ள முக்குள நீராடி, வெண்ணீறு தரித்து அன்போடு சிவபெருமானை இப் பதிகம் பாடி வழிபட்டால் சிவஞானக் குழந்தை பிறப்பது நிச்சயம்.

# நன்மக்கட் பேறு அடைய

திருவெண்காடு திருஞானசம்பந்தர்
பண் – சீகாமரம் 2 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கண் காட்டு நுதலானும் கனல் காட்டும் கையானும்
பெண் காட்டும் உருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண் காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் கொடியானே. 1

பேயடையா பிரிவெஃதும் பிள்ளையினோடு உள்ள நினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குள நீர்
தோஃவினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீ வினையே. 2

மண்ணொடு நீர் அனல் காலோடு ஆகாயம் மதி இரவி
எண்ணில் வரும் இயமானன் இகபரமும் எண்திசையும்
பெண்ணினொடு ஆண் பெருமையொடு சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர் கோன் வழிபட வெண்காடு இடமா விரும்பினனே.

விடமுண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் தண்புறவின்
மடல்விண்ட முடத்தாழை மலர் நிழலைக் குருகென்று
தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூ மறையக்
கடல் விண்ட கதிர்முத்த நகைகாட்டும் காட்சியதே. 4

வேலைமலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக் கீழ்
மாலைமலி வண் சாந்தால் வழிபடு நன் மறையவன் தன்
மேலடர் வெங் காலனுயிர் விண்ட பினை நமன் தூதர்
ஆலமிடற்றான் அடியார் என்று அடர அஞ்சுவரே. 5

தண்மதியும் வெஃபரவும் தாங்கினான் சடையினுடன்
ஒண்மதிய நுதலுமையோர் கூறுகந்தான் உறைகோயில்
பண் மொழியால் அவன் நாமம் பல ஓதப் பசுங்கிள்ளை
வெண்முகில் சேர் கரும்பெணை மேல் வீற்றிருக்கும் வெண்காடே.6

சக்கரம் மாற்கு ஈந்தானும் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரை மேல் அசைத்தானும் அடைந்த அயிராவதம் பணிய
மிக்கதனுக்கு அருள் சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளம் நன்கு உடையானும் முக்கணுடை இறையவனே. 7

பண்மொஃத்த இன்மொழியாள் பயமெஃத மலையெடுத்த
உன்மத்தன் உரம் நெரித்தன்று அருள் செஃதான் உறைகோயில்
கண்மொஃத்த கரு மஞ்ஞை நடமாடக் கடல் முழங்க
விண்மொஃத்த பொழில் வரி வண்டு இசைமுரலும் வெண்காடே. 8

கள்ளார் செங்கமலத்தான் கடல் கிடந்தான் என இவர்கள்
ஒள்ளாண்மை கொளற் கோடி உயர்ந்தாழ்ந்தும் உணர்வரியான்
வெள்ளானை தவஞ்செஃயும் மேதகு வெண்காட்டான் என்று 9
உள்ளாடி உருகாதார் உணர்வுடைமை உணரோமே.

போதியர்கள் பிண்டியர்கள் மிண்டு மொழி பொருளென்னும்
பேதையர்கள் அவர் பிறிமின் அறிவுடையீர் இது கேண்மின்
வேதியர்கள் விரும்பிய சீர் வியன் திருவெண்காட்டான் என்று 10
ஓதியவர் யாதுமொரு தீதிலர் என்று உணருமினே.

தண்பொழில் சூழ் சண்பையர் கோன் தமிழ் ஞானசம்பந்தன்
விண்பொலி வெண் பிறைச்சென்னி விகிர்தனுறை வெண் காட்டைப்
பண்பொலி செந்தமிழ் மாலை பாடிய பத்திவை வல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர் போஃவான் பொலியப் புகுவாரே. 11

**இறைவி** : பிரமவித்யா நாயகி – **இறைவர்** : வெண்காட்டு நாதர்

# கருவுற்ற தாஃமோர்களின் கரு வேலைப் பளுவினாலோ, பயணத்தாலோ, விதி வசத்தாலோ கலையாமால் பாதுகாத்துத் தரும் அற்புதப் பதிகம்.

திருக்கருகாவூர் — திருஞானசம்பந்தர்
பண் : கௌசிகம் — **3** ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

முத்திலங்கு முறுவல் உமை அஞ்சவே
மத்த யானை மறுகவ்வுரி வாங்கியக்
கத்தை போர்த்த கடவுள் கருகாவூர் எம்
அத்தர் வண்ணம் அழலும் அழல் வண்ணமே. 1

விமுத வல்ல சடையான் வினை உள்குவார்க்கு
அமுத நீழல் அகலாததோர் செல்வமாம்
கமுதம் முல்லை கமழ்கின்ற கருகாவூர்
அமுதர் வண்ணம் அழலும் அழல் வண்ணமே. 2

பழகவல்ல சிறுத்தொண்டர் பாவின் இசைக்
குழகரென்று குழையாவழை யாவரும்
கழல்கொள் பாடலுடையார் கருகாவூர் எம்
அழகர் வண்ணம் அழலும் அழல் வண்ணமே. 3

பொடிமெஃபூசி மலர்கொஃது புணர்ந்துடன்
செடியர் அல்லா உள்ளம் நல்கிய செல்வத்தர்
கடிகொள் முல்லை கமழுங் கருகாவூர் எம்
அடிகள் வண்ணம் அழலும் அழல் வண்ணமே. 4

மையலின்றி மலர் கொஃது வணங்கிடச்
செஃய உள்ளம் மிக நல்கிய செல்வத்தர்
கைதன் முல்லை கமழுங் கருகாவூர் எம்
ஐயர் வண்ணம் அழலும் அழல் வண்ணமே. 5

மாசில் தொண்டர் மலர் கொண்டு வணங்கிட
ஆசையார அருள் நல்கிய செல்வத்தர்
காஃசினத்த விடையார் கருகாவூர் எம்
ஈசர் வண்ணம் எரியும் எரி வண்ணமே. 6

வெந்த நீறு மெஃ பூசிய வேதியன்
சிந்தை நின்றருள் நல்கிய செல்வத்தன்
கந்த மௌவல் கமழுங் கருகாவூர் எம்
எந்தை வண்ணம் எரியும் எரி வண்ணமே. 7

பண்ணின் நேர்மொழி யாளையோர் பாகனார்
மண்ணு கோலம்முடைய அம்மலரானொடும்
கண்ணன் நேட அரியார் கருகாவூர் எம்
அண்ணல் வண்ணம் அழலும் அழல் வண்ணமே. 8

போர்த்த மெஃயினர் போது உழல்வார்கள் சொல்
தீர்த்தமென்று தெளிவீர் தெளியேன்மின்
கார்த்தண் முல்லை கமழுங் கருகாவூர் எம்
ஆர்த்தர் வண்ணம் அழலும் அழல் வண்ணமே. 9

கலவ மஞ்ஞை உலவுங் கருகாவூர்
நிலவு பாடல் உடையான் தன நீள்கழல்
குலவு ஞானசம்பந்தன் செந்தமிழ்
சொல வலாரவர் தொல்வினை தீருமே. 10

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : கருக் காத்த நாயகி — **இறைவர்** : கர்ப்பபுரீஸ்வரர்



## நன்மக்கட் பேறு ( சுகப் பிரசவம் ) இனிதே நடைபெற

திருச்சிராப்பள்ளி — திருஞானசம்பந்தர்
பண் – குறிஞ்சி — 1 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நன்றுடையானைத் தீயதிலானை நரை வெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூற என்னுள்ளம் குளிரும்மே. 1

கைம்மக ஏந்திக் கடுவனொடு ஊடிக் கழைபாஃவான்
செம்முக மந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முக வேழத்து ஈருரி போர்த்த விகிர்தா நீ
பைம்முக நாகம் மதியுடன் வைத்தல் பழியன்றே. 2

மந்தம் முழவம் மழலை ததும்ப வரை நீழல்
செந்தண் புனமுஞ் சுனையுஞ் சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம் மலர்கள் சடை மேலுடையார் விடையூரும்
எந்தம் அடிகள் அடியார்க்கு அல்லல் இல்லையே. 3

துறைமல்கு சாரற் சுனைமல்கு நீலத்திடை வைகிச்
சிறைமல்கு வண்டும் தும்பியும் பாடுஞ் சிராப்பள்ளிக்
கறைமல்கு கண்டன் கனல் எரியாடுங் கடவுள் எம்
பிறைமல்கு சென்னியுடையவன் எங்கள் பெருமானே. 4

கொலைவரையாத கொள்கையர் தங்கள் மதில் மூன்றும்
சிலைவரையாகச் செற்றனரேனுஞ் சிராப்பள்ளித்
தலைவரை நாளும் தலைவரல்லாமை உரைப்பீர்காள்
நிலவரை நீலமுண்டதும் வெள்ளை நிறமாமே. 5

வெஃயதண் சாரல் விரிநிற வேங்கைத் தண்போது
செஃய பொன்சேருஞ் சிராப்பள்ளி மேய செல்வனார்
தையலொர் பாகம் மகிழ்வர் நஞ்சுண்பர் தலையோட்டில்
ஐயமுங் கொள்வர் ஆரிவர் செஃகை அறிவாரே. 6

வேயுயர் சாரல் கருவிரலூகம் விளையாடும்
சேயுயர் கோயில் சிராப்பள்ளி மேய செல்வனார்
பேயுயர் கொள்ளி கை விளக்காகப் பெருமானார்
தீயுகந்து ஆடல் திருக்குறிப்பாயிற்று ஆகாதே. 7

மலைமல்கு தோளன் வலிகெடவூன்றி மலரோன் தன்
தலை கலனாகப் பலி திரிந்துண்பர் பழியோரார்
சொலவல வேதஞ் சொலவல கீதஞ் சொல்லுங்கால்
சிலவல போலும் சிராப்பள்ளிச் சேடர் செஃகையே. 8

அரப்பள்ளியானும் மலருறைவானும் அறியாமைக்
கரப்பள்ளி நாடிக் கண்டிலரேனுங் கல்சூழ்ந்த
சிரப்பள்ளி மேய வார்சடைச் செல்வர் மனைதோறும்
இரப்புள்ளிளீர் உம்மை ஏதிலர் கண்டால் இகழாரே. 9

நாணாது உடை நீத்தோர்களுங் கஞ்சி நாட்காலை
ஊணாப் பகல் உண்டு ஓதுவோர்கள் உரைக்குஞ் சொல்
பேணாது உறுசீர் பெறுதும் என்பீர் எம்பெருமானார்
சேணார் கோயில் சிராப்பள்ளி சென்று சேர்மினே. 10

தேனயம் பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல் சங்கேறும் கழுமல ஊரிற் கவுணியன்
ஞானசம்பந்தன் நலம் மிகு பாடல் இவை வல்லார்
வான சம்பந்தத்தவரோடு மன்னி வாழ்வாரே. 11

**இறைவி** : மட்டுவார் குழலியம்மை – **இறைவர்** : தாயுமானேசுவரர்

## நன்மக்கட் பேறு ( சுகப் பிரசவம் ) இனிதே நடைபெற

திருச்சிராப்பள்ளி — திருநாவுக்கரசர்
திருக்குறுந்தொகை — 5 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மட்டுவார் குழலாளொடு மால்விடை
இட்டமா உகந்தேறும் இறைவனார்
கட்டு நீத்தவர்க்கு இன்னருளே செயும்
சிட்டர் போலும் சிராப்பள்ளிச் செல்வரே. 1

அரி அயன் தலை வெட்டி வட்டாடினார்
அரி அயன் தொழுதேத்தும் அரும்பொருள்
பெரியவன் சிராப்பள்ளியைப் பேணுவார்
அரி அயன் தொழ அங்கிருப்பார்களே. 2

அரிச்சிராப் பகல் ஐவரால் ஆட்டுண்டு
சுரிச்சிராது நெஞ்சே ஒன்று சொல்லக்கேள்
திருச்சிராப்பள்ளி என்றுலும் தீவினை
நரிச்சிராது நடக்கும் நடக்குமே. 3

தாயுமாஃ எனக்கே தலை கண்ணுமாஃ
பேயனேனையும் ஆண்ட பெருந்தகை
தேய நாதன் சிராப்பள்ளி மேவிய
நாயனார் என நம் வினை நாசமே. 10

திருச்சிற்றம்பலம்

***இப்பதிகத்தில் 4, 5, 6, 7, 8, 9 ஆம் செ யுட்கள் கிடைத்தில.***

**இறைவி :** மட்டுவார் குழலியம்மை – **இறைவர் :** தாயுமானேசுவரர்



# குருவருள்

ஆன்மா தான் திருவருள் பெறவேண்டுமானால் ஒரு நல்ல குருவினை அடைய வேண்டும். நம்முடைய குருமார்கள் நமது நால்வர் பெருமக்களும், அறுபத்து மூன்று நாயன்மார்களும், சந்தானக் குரவர்களுமே ஆவர். அவர்கள் அருளிச்செய்துள்ள திருமுறைகளைப் பாடிப் பரவி வந்தாலே நமக்கு இந்த பூவுலகில் ஒரு நல்ல குரு கிடைப்பார். குருவின் அருட்பார்வையால் மல நீக்கமும் சிவப்பேறும் கிட்டும். " **குருவே சிவம் எனக் கூறினன் நந்தி** " என்பது திருமூலர் திருவாக்கு.

எம்பிரான் திருஞானசம்பந்தப் பெருமானின் குருவருள் அவருடைய திருமணத்திற்கு வந்திருந்தவர்களுக்கும், பணி செய்தவர்களுக்கும் முத்திப் பேறு கிடைக்கச் செய்தது. எம்பிரான் திருநாவுக்கரசரைக் குருவாகக் கொண்டு அப்பூதி அடிகள் முத்திப் பேறடைந்தார். எம்பிரான் சுந்தரமூர்த்தி நாயனாரைக் குருவாகக் கொண்டு பெருமிழலைக் குறும்ப நாயனார் முத்திப் பேறடைந்தார். எம்பிரான் மாணிக்க வாசகனாருடைய திருவாசகம் முத்திப் பேறு அளிக்கும் ஆற்றலுடையது என்பதும் கண்கூடு.

# குருவருள் பரிபூரணமாஃ பெற

திருப் பிரமபுரம் திருஞானசம்பந்தர்
பண் : நட்டபாடை 1 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண் மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட் பணிந்தேத்த அருள் செஃதே
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே. 1

முற்றலாமை இள நாகமோடு ஏன முளைக் கொம்பவை பூண்டு
வற்றலோடு கலனாப் பலி தேர்ந்து எனது உள்ளங் கவர் கள்வன்
கற்றல் கேட்டல் உடையார் பெரியார் கழல் கையால் தொழுதேத்தப்
பெற்றம் ஊர்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே. 2

நீர் பரந்த நிமிர்புன்சடை மேலோர் நிலா வெண்மதி சூடி
ஏர்பரந்த இனவெள்வளை சோர என் உள்ளங் கவர் கள்வன்
ஊர்பரந்த உலகின் முதலாகிய ஓ ரிது வென்னப்
பேர் பரந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே. 3

விண்மகிழ்ந்த மதில் எஃததுமன்றி விளங்குதலை ஓட்டில்
உண்மகிழ்ந்து பலிதேரிய வந்து எனது உள்ளங் கவர் கள்வன்
மண் மகிழ்ந்த அரவம் மலர்க்கொன்றை மலிந்தவரை மார்பிற்
பெண் மகிழ்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே. 4

ஒருமை பெண்மையுடையன் சடையன் விடையூரும் இவனென்ன
அருமையாக உரை செஃய அமர்ந்து எனது உள்ளங் கவர் கள்வன்
கருமை பெற்ற கடல் கொள்ள மிதந்ததோர் காலம் இது வென்னப்
பெருமை பெற்ற பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே. 5

மறைகலந்த ஒலி பாடலோடு ஆடலராகி மழுவேந்தி
இறைகலந்த இனவெள்வளை சோர என் உள்ளங் கவர் கள்வன்
கறை கலந்த கடியார் பொழில் நீடுயர் சோலைக் கதிர் சிந்தப்
பிறைகலந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே. 6

சடைமுயங்கு புனலன் அனலன் எரி வீசிச் சதிர்வெஃதே
உடைமுயங்கும் அரவோடு உழிதந்து எனது உள்ளங் கவர் கள்வன்
கடல் முயங்கு கழிசூழ் குளிர் கானல் அம் பொன்னஞ் சிறகன்னம்
பெடை முயங்கு பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே. 7

வியரிலங்கு வரையுந்திய தோள்களை வீரம் விளைவித்த
உயர் இலங்கையரையன் வலிசெற்று எனது உள்ளங் கவர் கள்வன்
துயரிலங்கும் உலகிற் பல ஊழிகள் தோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்கு பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே. 8

தாணுதல் செஃதிறை காணிய மாலொடு தண்டாமரையானும்
நீணுதல் செஃதொழியந் நிமிர்ந்தான் எனது உள்ளங் கவர் கள்வன்
வாணுதல் செஃமகளீர் முதலாகிய வையத்தவர் ஏத்தப்
பேணுதல் செஃபிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே. 9

புத்தரோடு பொறியில் சமணும் புறங்கூற நெறி நில்லா
ஒத்த சொல்ல உலகம் பலிதேர்ந்து எனது உள்ளங் கவர் கள்வன்
மத்த யானை மறுகவ்வுரி போர்த்ததோர் மாயம் இது வென்னப்
பித்தர் போலும் பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே. 10

அருநெறிய மறைவல்ல முனியகன் பொஃகை அலர் மேய
பெருநெறிய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன்தன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரை செஃத
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே. 11

**இறைவி** : திருநிலைநாயகி – **இறைவர்** : பிரமபுரீசுவரர்

# குருவருள் பரிபூரணமாஃ பெற

திரு அதிகை வீரட்டானம் — திருநாவுக்கரசர்
பண் : கொல்லி — 4 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கூற்றாயினவாறு விலக்ககிலீர்
கொடுமை பல செஃதன நானறியேன்
ஏற்றாஃ அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 1

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந்தறியேன்
வஞ்சம் இது ஒப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலும் என்னீர் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 2

பணிந்தாரன பாவங்கள் பாற்ற வல்லீர்
படு வெண்டலையில் பலி கொண்டுழல்வீர்
துணிந்தே உமக்காட் செஃது வாழலுற்றால்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார் பொடி கொண்டு மெஃ பூசவல்லீர்
பெற்ற மேற்றுகந்தீர் சுற்றும் வெண்டலை கொண்டு
அணீந்தீர் அடிகேள் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 3

முன்னம் அடியேன் அறியாமையினால்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னை அடியேன் உமக்காளும் பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னை அடைந்தார் வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங் கடன் ஆவதுதான்
அன்னநடையார் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 4

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரை நின்றவர் கண்டுகொள் என்று சொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன்
வார்த்தையிது ஒப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார் புனலார் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 5

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்
நலந் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையில் பலி கொண்டுழல்வாஃ
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாஃ
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 6

உயர்ந்தேன் மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர் தலை காவல் இலாமையினால்
வயந்தே உமக்காட் செஃது வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தே என் வயிற்றின் அகம்படியே
பறித்துப் புரட்டி அறுத் தீர்த்திட நான்
அயர்ந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 7

வலித்தேன் மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
 வஞ்சம் மனம் ஒன்றும் இலாமையினால்
சலித்தால் ஒருவர் துணை யாருமில்லைச்
 சங்க வெண்குழைக் காதுடை எம்பெருமான்
கலித்தே என் வயிற்றின் அகம்படியே
 கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்து தின்ன
அலுத்தேன் அடியேன் அதிகைக் கெடில
 வீரட்டானத்துறை அம்மானே. 8

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
 புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணி என்று இவற்றை
 நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
என்போலிகள் உம்மை இனித்தெளியார்
 அடியார் படுவது இதுவேயாகில்
அன்பே அமையும் அதிகைக் கெடில
 வீரட்டானத்துறை அம்மானே. 9

போர்த்தாயங்கோர் ஆனையின் ஈருரிதோல்
 புறங்காடரங்கா நடம் ஆடவல்லாஃ
ஆர்த்தான் அரக்கன்தனை மால்வரைக்கீழ்
 அடர்த்திட்டருள் செஃத அது கருதாஃ
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
 என் வேதனையான விலக்கியிடாஃ
ஆர்த்தார் புனல்சூழ் அதிகைக் கெடில
 வீரட்டானத்துறை அம்மானே. 10

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : திரிபுரசுந்தரி — **இறைவர்** : திருவதிகை நாதர்

# குருவருள் பரிபூரணமாஃ பெற

திரு வெண்ணெஃ நல்லூர் சுந்தரமூர்த்தி நாயனார்
பண் : இந்தளம் 7 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பித்தா பிறை சூடீ பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாஃ பெண்ணைத் தென்பால் வெண்ணெஃ நல்லூர் அருட்டுறையுள்
அத்தா உனக்கு ஆளாஃ இனி அல்லேன் எனல் ஆமே. 1

நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துன்னைப்
பேயாஃத் திரிந்தெஃத்தேன் பெறலாகா அருள் பெற்றேன்
வேயார் பெண்ணைத் தென்பால் வெண்ணெஃ நல்லூர் அருட்டுறையுள்
ஆயா உனக்கு ஆளாஃ இனி அல்லேன் எனல் ஆமே. 2

மன்னே மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னைப்
பொன்னே மணிதானே வயிரம்மே பொருதுந்தி
மின்னார் பெண்ணைத் தென்பால் வெண்ணெஃ நல்லூர் அருட்டுறையுள்
அன்னே உனக்கு ஆளாஃ இனி அல்லேன் எனல் ஆமே. 3

முடியேன் இனிப் பிறவேன் பெறின் மூவேன் பெற்றம் ஊர்தீ
கொடியேன் பல பொஃயே உரைப் பேனைக் குறிக் கொள் நீ
செடியார் பெண்ணைத் தென்பால் வெண்ணெஃ நல்லூர் அருட்டுறையுள்
அடிகேள் உனக்கு ஆளாஃ இனி அல்லேன் எனல் ஆமே. 4

பாதம் பணிவார்கள் பெறும் பண்டம் அது பணியாஃ
ஆதன் பொருள் ஆனேன் அறிவில்லேன் அருளாளா
தாதார் பெண்ணைத் தென்பால் வெண்ணெஃநல்லூர்
அருட்டுறையுள்
ஆதீ உனக்கு ஆளாஃஇனி அல்லேன் எனல் ஆமே. 5

தண்ணார் மதி சூடி தழல் போலும் திருமேனி
எண்ணார் புரமூன்றும் எரி உண்ண நகை செஃதாஃ
மண்ணார் பெண்ணைத் தென்பால் வெண்ணெஃநல்லூர்
அருட்டுறையுள்
அண்ணா உனக்கு ஆளாஃஇனி அல்லேன் எனல் ஆமே. 6

ஊனாஃஉயிர் ஆனாஃஉடல் ஆனாஃஉலகானாஃ
வானாஃநிலன் ஆனாஃகடல் ஆனாஃமலை ஆனாஃ
தேனார் பெண்ணைத் தென்பால் வெண்ணெஃநல்லூர்
அருட்டுறையுள்
ஆனாஃஉனக்கு ஆளாஃஇனி அல்லேன் எனல் ஆமே. 7

ஏற்றார் புரம் மூன்றும் எரி உண்ணச் சிலை தொட்டாஃ
தேற்றாதன சொல்லித் திரிவேனோ செக்கர் வானீர்
ஏற்றாஃபெண்ணைத் தென்பால் வெண்ணெஃநல்லூர்
அருட்டுறையுள்
ஆற்றாஃஉனக்கு ஆளாஃஇனி அல்லேன் எனல் ஆமே. 8

மழுவாள் வலன் ஏந்தீ மறை ஓதீ மங்கை பங்கா
தொழுவார் அவர் துயர் ஆயின தீர்த்தல் உனதொழிலே
செழுவார் பெண்ணைத் தென்பால் வெண்ணெஃநல்லூர்
அருட்டுறையுள்
அழகா உனக்கு ஆளாஃஇனி அல்லேன் எனல் ஆமே. 9

கா ர் புனல் எஃதிக் கரை கல்லித் திரைக் கையால்
பா ர் புகழ் எஃதித் திகழ் பன்மாமணி உந்திச்
சீ ர் பெண்ணைத் தென்பால் வெண்ணெஃநல்லூர்
அருட்டுறையுள்
ஆரூரன் எம் பெருமாற்கு ஆள் அல்லேன் எனல் ஆமே. 10

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : மங்களாம்பிகை – **இறைவர்** : அருட்துறை நாதர்



# குருவருள் பரிபூரணமாஃ பெற

சிவபுராணம் — மாணிக்கவாசகர்

திருப்பெருந்துறையில் அருளியது — **8** ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சின் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெஃகழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும் மோய உரைப்பன் யான்

கண்ணுதலான் தன் கருணைக் கண் காட்ட வந்தெஃதி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காஃ விளங்கொளியாஃ
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாஃப் புழுவாஃ மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாஃப் பாம்பாகிக்
கல்லாஃ மனிதராஃப் பேயாஃக் கணங்களாஃ
வல்லசுரராகி முனிவராஃத் தேவராஃச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெஃயே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உஃய என் உள்ளத்துள் ஓங்காரமாஃ நின்ற
மெஃயா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெஃயாஃ தணியாஃ இயமானனாம் விமலா
பொஃயாயின எல்லாம் போயகல வந்தருளி
மெஃஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெஃச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாஃ அனைத்துலகும்
ஆக்குவாஃ காப்பாஃ அழிப்பாஃ அருள்தருவாஃ
போக்குவாஃ என்னைப் புகுவிப்பாஃ நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாஃ சேயாஃ நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெஃ கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாஃ விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாஃ எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செஃய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள்ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாஃக் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராஃ உருக்கி என் ஆருயிராஃ நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாஃ அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெஃ ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காஃ நின்ற
தோற்றச் சுடர் ஒளியாஃ சொல்லாத நுண்ணுணர்வாஃ

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொஃ கெட்டு மெஃயானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென் பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



# வினை நீக்கம்

நமது துன்பத்திற்கு காரணம் நாம் செஃத முன்வினையே என்று அறிந்துள்ள நாம் அதிலிருந்து விடுபட முயற்சிக்காதது நம்முடைய குற்றமே. அன்போடு மலர்பறித்திட்டு தொண்டு செஃது சிவபெருமான் திருவடியை போற்றுவதன் மூலம் முன்வினை நீங்குவதோடு செஃவினையும் தீண்டாது என்பது உண்மை.

நம்முடைய திருமுறைகளில் பெரும்பாலான பதிகங்கள் வினை நீக்கம் பற்றியே அருளப்பட்டவை. வினை கழிய என்ன செஃவது என்று நமது அருளாளர்களே குறிப்பிட்டுள்ளார்கள். அது கைவினை செஃது எம்பிரான் கழல் போற்றுவதே ஆகும்.

கைவினை செஃதல் என்றால், திருக்கோயில்களில் அலகிடுதல், மெழுகுதல், பூப் பறித்தல், பூத் தொடுத்தல், பாமாலை பாடுதல், தலையார கும்பிடுதல், கூத்தாடுதல் போன்ற தொண்டுகளை செஃது இறைவன் திருவடியை போற்றிப் பரவுவதன் மூலம் வினைகளிலிருந்து நாம் நீக்கம் பெறலாம் என்பது தெளிவு.

## பிறந்த பயனைப் பெற
## உடலுறுப்புகள் நலமடைய ஓதவேண்டிய பதிகம்

திரு அங்கமாலை — திருநாவுக்கரசர்
பண் : சாதாரி — 4 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தலையே நீ வணங்காய் –
தலை மாலை தலைக்கு அணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனைத்
தலையே நீ வணங்காய் 1

கண்காள் காண்மின்களோ –
கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்தோள் வீசி நின்று ஆடும் பிரான் தன்னைக்
கண்காள் காண்மின்களோ 2

செவிகாள் கேண்மின்களோ –
சிவன் எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான் திறம் எப்போதும்
செவிகாள் கேண்மின்களோ 3

மூக்கே நீ முரலாய் –
முது காடுறை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய் 4

வாயே வாழ்த்து கண்டாய் –
மத யானை உரிபோர்த்துப்
பேய் வாழ் காட்டகத்து ஆடும் பிரான் தன்னை
வாயே வாழ்த்து கண்டாய் 5

நெஞ்சே நீ நினையாய் –
நிமிர் புன்சடை நின்மலனை

மஞ்சாடும் மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாஃ 6

கை காள் கூப்பித் தொழீர் –
கடி மாமலர் தூவி நின்று
பைவாஃப் பாம்பரை ஆர்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர். 7

ஆக்கையால் பயன் என் –
அரன் கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ்
ஆக்கையால் பயனென். 8

கால்களால் பயன் என் –
கறைக் கண்டன் உறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக்
கால்களால் பயன் என். 9

உற்றார் ஆர் உளரோ –
உயிர் கொண்டு போம் பொழுது
குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்கு
உற்றார் ஆர் உளரோ 10

இறுமாந் திருப்பன்கொலோ –
ஈசன் பல்கணத்து எண்ணப் பட்டுச்
சிறுமான் ஏந்தி தன் சேவடிக் கீழ்ச்சென்றங்கு
இறுமாந் திருப்பன் கொலோ 11

தேடிக் கண்டு கொண்டேன் –
திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என் உள்ளே
தேடிக் கண்டு கொண்டேன். 12

திருச்சிற்றம்பலம்

# ஒன்பது கோள் நலிவு நீக்கும் கோளறு திருப்பதிகம்

கோளறு திருப்பதிகம் — திருஞானசம்பந்தர்
பண் : பியந்தைக் காந்தாரம் — 2 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாஃ புதன் வியாழம் வெள்ளி
சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல 1
அடியார் அவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடு ஆமை இவை மார்பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றோடு ஏழு பதினெட்டொடு ஆறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல 2
அடியார் அவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளி நீறணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்

திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெஃவமான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 3

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடு நோஃகள் ஆன பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 5

வாள்வரி அதளதாடை வரிகோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாஃ
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலை யானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 6

செப்பிள முலைநன் மங்கை ஒரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெஃதன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாஃ
வாண்மதி வன்னி கொன்றை மலர் சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன் தனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரன் நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசையோனும் மாலும் மறையோடு தேவர்
வருகாலமான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியு நாகம் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்

புத்தரோடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொள் ஆலை விளை செந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெஃ
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : யாழைப் பழித்த மொழியம்மை
**இறைவர்** : மறைக்காட்டீசுவரர்



# ஒன்பது கோள்களால் ஏற்படும் துன்பம் நீங்க

திருக்கோளிலி — திருஞானசம்பந்தர்
பண் : பழந்தக்கராகம் — 1 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்பு செஃவோம் மட நெஞ்சே அரன் நாமம்
கேளாஃ நம் கிளை கிளைக்கும் கேடுபடாத் திறம் அருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலி எம் பெருமானே. 1

ஆடரவத்து அழகாமை அணிகேழல் கொம்பார்த்த
தோடரவத்து ஒருகாதன் துணைமலர் நற் சேவடிக்கே
பாடரவத்து இசை பயின்று பணிந்தெழுவார் தம் மனத்தில்
கோடரவம் தீர்க்குமவன் கோளிலி எம் பெருமானே. 2

நன்று நகு நாண்மலரால் நல்லிருக்கு மந்திரங் கொண்டு
ஒன்றி வழிபாடு செயலுற்றவன் தன் ஓங்குயிர் மேல்
கன்றி வரு காலனுயிர் கண்டவனுக்கு அன்றளித்தான்
கொன்றை மலர் பொன்திகழுங் கோளிலி எம் பெருமானே. 3

வந்த மணலால் இலிங்கம் மண்ணியின் கட் பாலாட்டும்
சிந்தை செஃவோன் தன்கருமந் தேர்ந்து சிதைப்பான் வருமத்
தந்தை தனைச் சாடுதலுஞ் சண்டீசன் என்றருளிக்
கொந்தணவு மலர் கொடுத்தான் கோளிலி எம் பெருமானே. 4

வஞ்ச மனத்து அஞ்சொடுக்கி வைகலும் நற் பூசனையால்
நஞ்சமுது செஃதருளும் நம்பியெனவே நினையும்
பஞ்சவரில் பார்த்தனுக்குப் பாசுபதம் ஈந்துகந்தான்
கொஞ்சு கிளி மஞ்சணவுங் கோளிலி எம் பெருமானே. 5

தாவியவன் உடனிருந்துங் காணாத தற்பரனை
ஆவிதனில் அஞ்சொடுக்கி அங்கணன் என்றாதரிக்கும்
நாவியல் சீர் நமிநந்தி அடிகளுக்கு நல்குமவன்
கோவியலும் பூவெழுகோற் கோளிலி எம் பெருமானே. 6

கல்நவிலு மால் வரையான் கார்திகழு மாமிடற்றான்
சொல்நவிலும் மாமறையான் தோத்திரஞ் செஃவாயிலுளான்
மின்நவிலும் செஞ்சடையான் வெண்பொடியான் அங்கையினில்
கொன்னவிலுஞ் சூலத்தான் கோளிலி எம் பெருமானே. 7

அந்தரத்தில் தே ரும் அரக்கன் மலை அன்றெடுப்பச்
சுந்தரத் தன் திருவிரலால் ஊன்ற அவன் உடல் நெரிந்து
மந்திரத்த மறைபாட வாள் அவனுக்கு ஈந்தானும்
கொந்தரத்த மதிச் சென்னிக் கோளிலி எம் பெருமானே. 8

நாணமுடை வேதியனும் நாரணனும் நண்ணவொணாத்
தாணு எனையாளுடையான் தன்னடியார்க்கு அன்புடைமை
பாணன் இசை பத்திமையால் பாடுதலும் பரிந்தளித்தான்
கோணல் இளம் பிறைச் சென்னிக் கோளிலி எம் பெருமானே.

தடுக்கமருஞ் சமணரொடு தர்க்க சாத்திரத்தவர் சொல்
இடுக்கண் வரும் மொழி கேளாது ஈசனையே ஏத்துமின்கள்
நடுக்கமிலா அமருலகந் நண்ணலுமாம் அண்ணல் கழல்
கொடுக்ககிலா வரங் கொடுக்கும் கோளிலி எம் பெருமானே.

நம்பனை நல் அடியார்கள் நாமுடை மாடென்றிருக்கும்
கொம்பனையாள் பாகன் எழிற் கோளிலி எம் பெருமானை
வம்பமருந் தண்காழிச் சம்பந்தன் வண்தமிழ் கொண்டு
இன்பமர வல்லார்கள் எஃதுவர்கள் ஈசனையே. 11

**இறைவி** : வண்டமர் பூங்குழலி – **இறைவர்** : கோளிலி நாதர்

## சனிக்கிரகத் தாக்குதலுக்கு அஞ்சுவோர் ஓதத்தக்க பச்சைப் பதிகம்

திருநள்ளாறு — திருஞானசம்பந்தர்
பண் : பழந்தக்கராகம் — 1 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண் வெள்ளேற்று அண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின் மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 1

தோடுடைய காதுடையன் தோலுடையன் தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோடு ஏழ்கடலுஞ் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே. 2

ஆன் முறையால் ஆற்ற வெண்ணீறாடி அணியிழையோர்
பான்முறையால் வைத்த பாதம் பத்தர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவுஞ் சூலமும் பற்றியகை
நான்மறையான் நம்பெருமான் மேயது நள்ளாறே. 3

புல்கவல்ல வார்சடைமேல் பூம்புனல் பெஃதயலே
மல்கவல்ல கொன்றைமாலை மதியோடுடன் சூடிப்
பல்கவல்ல தொண்டர் தம் பொற்பாத நிழற்சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே. 4

திங்களுச்சி மேல்விளங்குந் தேவன் இமையோர்கள்
எங்களுச்சி எம் இறைவன் என்று அடியே இறைஞ்சத்
தங்களுச்சியால் வணங்கும் தன் அடியார்கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே. 6

வெஞ்சுடர் தீ அங்கை ஏந்தி விண்கொண் முழவதிர
அஞ்சிடத்தோர் ஆடல் பாடல் பேணுவதன்றியும் போஃச்
செஞ்சடைக்கோர் திங்கள் சூடித் திகழ் தரு கண்டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 7

சிட்டமார்ந்த மும்மதிலும் சிலைவரைத் தீ அம்பினால்
சுட்டுமாட்டிச் சுண்ண வெண்ணீறு ஆடுவதன்றியும் போஃய்
பட்டமார்ந்த சென்னி மேலோர் பால் மதியஞ் சூடி
நட்டமாடும் நம்பெருமான் மேயது நள்ளாறே. 8

உண்ணல் ஆகா நஞ்சு கண்டத்து உண்டு உடனே ஒடுக்கி
அண்ணல் ஆகா வண்ண நீழல் ஆரழல் போலுருவம்
எண்ணல் ஆகா உள் வினை என்று எள்க வலித்து இருவர்
நண்ணல் ஆகா நம்பெருமான் மேயது நள்ளாறே. 9

மாசு மெஃயர் மண்டைத் தேரர் குண்டர் குணம் இலிகள்
பேசும் பேச்சை மெஃயென்று எண்ணி அந்நெறி செல்லன்மின்
மூசுவண்டார் கொன்றை சூடி மும்மதிளும் உடனே
நாசம் செஃதே நம்பெருமான் மேயது நள்ளாறே. 10

தண்புனலும் வெண்பிறையும் தாங்கிய தாழ்சடையன்
நண்பு நல்லார் மல்கு காழி ஞானசம்பந்தன் நல்ல
பண்பு நள்ளாறேத்து பாடல் பத்தும் இவைவல்லார்
உண்பு நீங்கி வானவரோடு உலகில் உறைவாரே. 11

**இறைவி** : போகமார்த்த பூண்முலையாள் – **இறைவர்** : தர்ப்பாரண்யேசுவரர்

# இடர் நீங்கி இன்பம் பெற

திருநெடுங்களம் திருஞானசம்பந்தர்
பண்: பழந்தக்க ராகம் 1 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மறையுடையாஃ தோல் உடையாஃ வார்சடை மேல் வளரும்
பிறையுடையாஃ பிஞ்ஞகனே என்று உனைப் பேசின் அல்லால்
குறையுடையார் குற்றம் ஓராஃ கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர் களையாஃ நெடுங்களம் மேயவனே. 1

கனைத்தெழுந்த வெண் திரை சூழ் கடலிடை நஞ்சு தன்னைத்
தினைத்தனையா மிடற்றில் வைத்த திருந்திய தேவ நின்னை
மனத்தகத்தோர் பாடல் ஆடல் பேணி இராப் பகலும்
நினைத்தெழுவார் இடர் களையாஃ நெடுங்களம் மேயவனே. 2

நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என்னடியான் உயிரை வவ்வேல் என்றடற் கூற்றுதைத்த
பொன்னடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும்
நின்னடியார் இடர் களையாஃ நெடுங்களம் மேயவனே. 3

மலை புரிந்த மன்னவன் தன் மகளையோர் பால் மகிழ்ந்தாஃ
அலைபுரிந்த கங்கை தங்கும் அவிர் சடை ஆ ரா
தலை புரிந்த பலி மகிழ்வாஃ தலைவ நின் தாள் நிழல் கீழ்
நிலை புரிந்தார் இடர் களையாஃ நெடுங்களம் மேயவனே. 4

பாங்கினல்லார் படிமம் செஃவார் பாரிடமும் பலி சேர்
தூங்கி நல்லார் பாடலோடு தொழு கழலே வணங்கித்
தாங்கி நில்லா அன்பினோடும் தலைவ நின் தாள் நிழல் கீழ்
நீங்கி நில்லார் இடர் களையாஃ நெடுங்களம் மேயவனே. 5

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர் நான்கு உணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ் சடைமேல் கரந்தாஃ
அருத்தனாய ஆதி தேவன் அடியிணையே பரவும்
நிருத்தர் கீதர் இடர் களையாஃ நெடுங்களம் மேயவனே. 6

கூறுகொண்டாஃ மூன்றும் ஒன்றாக் கூட்டியோர் வெங்கணையால்
மாறு கொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறு கொண்டாஃ சாந்தம் ஈது என்று எம் பெருமான் அணிந்த
நீறு கொண்டார் இடர் களையாஃ நெடுங்களம் மேயவனே. 7

குன்றின் உச்சி மேல் விளங்கும் கொடி மதில் சூழ் இலங்கை
அன்றி நின்ற அரக்கர் கோனை அருவரைக் கீழ் அடர்த்தாஃ
என்று நல்ல வாஃ மொழியால் ஏத்தி இராப் பகலும்
நின்று நைவார் இடர் களையாஃ நெடுங்களம் மேயவனே. 8

வேழ வெண்கொம்பு ஒசித்த மாலும் விளங்கிய நான்முகனும்
சூழ எங்கும் நேட ஆங்கோர் சோதியுள் ஆகி நின்றாஃ
கேழல் வெண்கொம்பு அணிந்த பெம்மான் கேடிலாப் பொன்னடியின்
நீழல் வாழ்வார் இடர் களையாஃ நெடுங்களம் மேயவனே. 9

வெஞ் சொல் தம் சொல்லாக்கி நின்ற வேடமிலாச் சமணும்
தஞ்சம் இல்லாச் சாக்கியரும் தத்துவம் ஒன்று அறியார்
துஞ்சல் இல்லா வாஃ மொழியால் தோத்திரம் நின்னடியே
நெஞ்சில் வைப்பார் இடர் களையாஃ நெடுங்களம் மேயவனே. 10

நீடவல்ல வார் சடையான் மேய நெடுங்களத்தைச்
சேடர் வாழும் மாமறுகில் சிரபுரக் கோன் நலத்தால்
நாட வல்ல பனுவன் மாலை ஞான சம்பந்தன் சொன்ன
பாடல் பத்தும் பாட வல்லார் பாவம் பறையுமே. 11

**இறைவி** : ஒப்பிலா நாயகி – **இறைவர்** : நித்திய சுந்தரேசுவரார்

# செய்வினையும் தீவினையும் குளிர்காய்ச்சலும் நீங்க

திருநீலகண்டப்பதிகம் திருஞானசம்பந்தர்
பண் : வியாழக்குறிஞ்சி **1** ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம். 1

காவினை இட்டும் குளம்பல தொட்டும் கனி மனத்தால்
ஏவினையால் எயில் மூன்றெரித்தீர் என்று இருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம். 2

முலைத்தடம் மூழ்கிய போகங்களும் மற்றெவையும் எல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டெமை ஆண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும் மழுவும் இவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 3

விண்ணுலகாள்கின்ற விச்சாதரர்களும் வேதியரும்
புண்ணியர் என்று இருபோதும் தொழப்படும் புண்ணியரே
கண் இமையாதன மூன்றுடையீர் உம் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 4

மற்றிணை இல்லா மலை திரண்டன்ன திண் தோளுடையீர்
கிற்றெமை ஆட்கொண்டு கேளாதொழிவதும் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்து உன் திருவடியே அடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 5

மறக்கும் மனத்தினை மாற்றி எம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக்கீழ் பிழையாத வண்ணம்
பறித்த மலர்க்கொடு வந்துமை ஏத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 6

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்தும் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை ஏத்துதும் நாமடியோம்
செருவில் அரக்கனைச் சீரில் அடர்த்து அருள் செஃதவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 8

நாற்றமலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெஃது
தோற்றமுடைய அடியும் முடியும் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குதும் நாமடியோம்
சீற்றமதாம் வினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 9

சாக்கியப் பட்டும் சமண் உருவாகி உடை ஒழிந்தும்
பாக்கியமின்றி இருதலைப் போகமும் பற்றும் விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர் அடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 10

பிறந்த பிறவியில் பேணி எம் செல்வன் கழல் அடைவான்
இறந்த பிறவி உண்டாகில் இமையவர்கோன் அடிக்கண்
திறம்பயில் ஞானசம்பந்தன செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடும் கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்

*குறிப்பு : இப்பதிகத்தில் 7 ஆம் செ யுள் கிடைத்தில.*

# கேட்டார் வினை கெடுக்கும் திருப்பதிகம்

திருநணா ( பவானி ) திருஞானசம்பந்தர்
பண் : காந்தாரம் 2 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பந்தார் விரல்மடவாள் பாகமா நாகம் பூண்டு எருது ஏறி
அந்தார் அரவணிந்த அம்மானிடம் போலும் அந்தண்சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டுபாடச்
செந்தேன் தெளி ஒளிரத் தேமாங்கனி உதிர்க்கும் திருநணாவே. 1

நாட்டம் பொலிந்திலங்கு நெற்றியினான் மற்றொரு கை வீணையேந்தி
ஈட்டும் துயரறுக்கும் எம்மானிடம் போலும் இலைசூழ்கானில்
ஓட்டம் தரும் அருவி வீழும் விசைகாட்ட முந்தூழோசைச்
சேட்டார் மணிகள் அணியும் திரைசேர்க்கும் திருநணாவே. 2

நன்றாங்கிசை மொழிந்து நன்னுதலாள் பாகமாஃஞாலமேத்த
மின்தாங்கு செஞ்சடையெம் விகிர்தர்க்கிடம் போலும் விரைசூழ்வெற்பில்
குன்றோங்கி வன்திரைகள் மோத மயிலாலுஞ் சாரற்செவ்வி
சென்றோங்கி வானவர்கள் ஏத்தி அடிபணியும் திருநணாவே. 3

கையில் மழுவேந்திக் காலில் சிலம்பணிந்து கரித்தோல் கொண்டு
மெஃயில் முழுதணிந்த விகிர்தர்க்கிடம் போலுமிடைந்து வானோர்
ஐயரவர் எம் பெருமான் அருளென்று என்று ஆதரிக்கச்
செஃய கமலம் பொழில் தேன் அளித்தியலும் திருநணாவே. 4

முத்தேர் நகையாள் இடமாகத் தம்மார்பில் வெண்ணூல் பூண்டு
தொத்தேர் மலர்ச்சடையில் வைத்தாரிடம் போலும் சோலை சூழ்ந்த
அத்தேன் அளியுண் களியால் இசைமுரல ஆலத்தும்பி
தெத்தே என முரலக் கேட்டார் வினை கெடுக்கும் திருநணாவே. 5

வில்லார் வரையாக மாநாகம் நாணாக வேடம் கொண்டு
புல்லார் புரமூன்றும் எரித்தார்க்கிடம் போலும் புலியும் மானும்
அல்லாத சாதிகளும் அங்கழல்மேல் கைகூப்ப அடியார்கூடிச்
செல்லா அருநெறிக்கே செல்ல அருள் புரியும் திருநணாவே. 6

கானார் களிற்றுரிவை மேல்மூடி ஆடரவொன்று அரைமேற்சாத்தி
ஊனார் தலையோட்டில் ஊணுகந்தான் தானுகந்த கோயிலெங்கும்
நானா விதத்தால் விரதிகள் நல்நாமமே ஏத்தி வாழ்த்தத்
தேனார் மலர் கொண்டு அடியார் அடி வணங்கும் திருநணாவே. 7

மன்னீரிலங்கையர் தங்கோமான் வலிதொலைய விரலால் ஊன்றி
முந்நீர்க் கடல் நஞ்சை உண்டார்க்கிடம் போலும் முனைசேர்சீயம்
அன்னீர்மை குன்றி அழலால் விழிகுறைய வழியுமுன்றிற்
செந்நீர் பரப்பச் சிறந்து கரியொளிக்குந் திருநணாவே. 8

மையார் மணிமிடறன் மங்கையோர் பங்குடையான் மனைகள் தோறும்
கையார் பலியேற்ற கள்வன் இடம்போலும் கழல்கள் நேடிப்
பொஃபா மறையானும் பூமியளந்தானும் போற்ற மன்னிச்
செஃபார் எரியா  உருவமுற வணங்குந் திருநணாவே. 9

ஆடை ஒழித்தங்கமணே திரிந்துண்பார் அல்லல்பேசி
மூடுருவம் உகந்தார் உரையகற்றும் மூர்த்தி கோயில்
ஓடு நதிசேரும் நித்தலமும் மொஃத்தகிலுங் கரையிற் சாரச்
சேடர் சிறந்தேத்தத் தோன்றி ஒளி பெருகும் திருநணாவே. 10

கல்வித் தகத்தால் திரைசூழ் கடற் காழிக் கவுணிசீரார்
நல்வித்தகத்தால் இனிதுணரும் ஞானசம்பந்தன் எண்ணும்
சொல்வித்தகத்தால் இறைவன் திருநணா ஏத்துபாடல்
வல்வித்தகத்தான் மொழிவார் பழியிலர் இம் மண்ணின் மேலே. 11

**இறைவி** : பண்ணார் மொழியம்மை – **இறைவர்** : திருநணாவுடையார்

# நல்லாராஃ வாழ

கோயில் ( சிதம்பரம் ) திருஞானசம்பந்தர்
பண் : குறிஞ்சி 1 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. 1

பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
பிறப்பில் பெருமானைப் பின்தாழ் சடையானை
மறப்பிலார் கண்டீர் மையல் தீர்வாரே. 2

மையா ரொண்கண்ணார் மாட நெடுவீதிக்
கையாற் பந்தோச்சுங் கழிசூழ் தில்லையுள்
பொஃயா மறைபாடல் புரிந்தான் உலகேத்தச்
செஃயான் உறைகோயில் சிற்றம் பலந்தானே. 3

நிறை வெண்கொடிமாட நெற்றி நேர்தீண்டப்
பிறைவந் திறைதாக்கும் பேரம் பலந்தில்லை
சிறைவண் டறையோவாச் சிற்றம் பலமேய
இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே. 4

செல்வ நெடுமாடஞ் சென்று சேண்ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே. 5

வருமாந் தளிர் மேனி மாதோர் பாகமாந்
திருமாந் தில்லையுட் சிற்றம் பலம்மேய
கருமான் உரியாடைக் கறைசேர் கண்டத்தெம்
பெருமான் கழலல்லாற் பேணா துள்ளமே. 6

அலையார் புனல்சூடி யாகத் தொருபாகம்
மலையான் மகளோடு மகிழ்ந்தான் உலகேத்தச்
சிலையால் எயில் எஃதான் சிற்றம் பலந்தன்னைத்
தலையால் வணங்குவார் தலையா னார்களே. 7

கூர்வாள் அரக்கன்றன் வலியைக் குறைவித்துச்
சீராலே மல்கு சிற்றம் பலமேய
நீரார் சடையானை நித்தல் ஏத்துவார்
தீரா நோயெல்லாந் தீர்தல் திண்ணமே. 8

கோணா கணையானுங் குளிர்தா மரையானுங்
காணார் கழலேத்தக் கனலாஃ ஓங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம் பலம்ஏத்த
மாணா நோயெல்லாம் வாளா மாயுமே. 9

பட்டைத் துவராடைப் படிமங் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர்வாழ் தில்லைச் சிற்றம் பலம்மேய
நட்டப் பெருமானை நாளுந் தொழுவோமே. 10

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலம்மேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே. 11

**இறைவி** : சிவகாம சுந்தரி அம்மை – **இறைவர்** : ஆனந்தமா நடரசாப் பெருமான்



# நோயிலிருந்து பாதுகாப்பு

வினையின் காரணமாகத்தான் உயிர் பல்வகைப் பிணிகளில் பட்டு உழல்கின்றது. பிணி 1. உடல் பிணி 2. பிறவிப் பிணி என இருவகைப்படும். இந்த இரு பிணிகளையும் நீக்கும் மருத்துவர் எல்லாம் வல்ல நம் வைத்திய நாதப் பெருமானே.

எம்பிராட்டி திலகவதியார் அளித்த திருநீறே எம்பிரான் திருநாவுக்கரசருடைய சூலைநோயைத் தீர்த்தருளியது.

எம்பிரான் திருஞானசம்பந்தப் பெருமான் அளித்த திருநீறே கூன்பாண்டியனது வெப்பு நோயை நீக்கியது.

எம்பிரான் சுந்தர மூர்த்தி நாயனார் தாம் வேண்டிய யாவையும் பெற மருந்தாஃ அமைந்தது திருமுறையே !

எம்பிரான் மணிவாசகப் பெருமானுடைய திருவாசகமே ஊமைப் பெண்ணைப் பேச வைப்பதற்கு மருந்தாஃ அமைந்தது.

ஆக திருநீறும், திருமுறையும், கண்டிகையும், ஐந்தெழுத்துமே நமது உடல்பிணி, பிறவிப் பிணி ஆகிய இரண்டையும் நீக்க வல்லது.

# தீராத நோஃகள் தீர உதவும் திருநீற்றுத் திருப்பதிகம்

திரு ஆலவாஃ ( மதுரை ) திருஞானசம்பந்தர்
பண் : காந்தாரம் 2 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே. 1

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதம் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே. 2

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே. 3

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே. 4

பூச இனியது நீறு புண்ணியமாவது நீறு
பேச இனியது நீறு பெருந் தவத்தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திரு ஆலவாயான் திருநீறே. 5

அருத்தமதாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தமதாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே. 6

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே. 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவணமாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
அரா வணங்கும் திருமேனி ஆலவாயான் திருநீறே. 8

மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெஃயது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலமது உண்ட மிடற்று எம் ஆலவாயான் திருநீறே. 9

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும் கூடக்
கண் திகைப்பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப்பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே. 10

ஆற்றல் அடல்விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

**இறைவி** : மீனாட்சி அம்மை – **இறைவர்** : சொக்கநாதர்

## முயலக நோய் என்னும் முடக்குவாத நோய் நீங்க ஓத வேண்டிய பதிகம்

திருப்பாச்சிலாச்சிரமம் திருஞானசம்பந்தர்
பண் : தக்கராகம் **1** ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ் சூழ
வாரிடமும் பலி தேர்வர்
அணிவளர் கோலமெலாஞ் செய்து பாச்சி
லாச்சிராமத்து உறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே. 1

கலைபுனை மானுரி தோலுடை ஆடை
கனல் சுடரால் இவர் கண்கள்
தலையணி சென்னியர் தாரணி மார்பர்
தம்மடிகள் இவர் என்ன
அலைபுனல் பூம்பொழில் சூழ்ந்தமர் பாச்சி
லாச்சிராமத்து உறைகின்ற
இலைபுனை வேலரோ ஏழையை வாட
இடர் செய்வதோ இவர் ஈடே. 2

வெஞ்சுடர் ஆடுவர் துஞ்சிருள் மாலை
வேண்டுவர் பூண்பது வெண்ணூல்
நஞ்சடை கண்டர் நெஞ்சிடமாக
நண்ணுவர் நம்மை நயந்து

மஞ்சடை மாளிகை சூழ்தரு பாச்சி
லாச்சிராமத்து உறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி வாடச்
சிதை செஃவதோ இவர் சீரே. 3

கனமலர்க் கொன்றை அலங்கல் இலங்கக்
கனல்தரு தூமதிக் கண்ணி
புனமலர் மாலை அணிந்து அழகாய
புனிதர் கொலாம் இவரென்ன
வனமலி வண்பொழில் சூழ்தரு பாச்சி
லாச்சிராமத்து உறைகின்ற
மனமலி மைந்தரோ மங்கையை வாட
மயல் செஃவதோ இவர் மாண்பே. 4

மாந்தர் தம் பால் நறுநெஃ மகிழ்ந்தாடி
வளர்சடை மேல் புனல் வைத்து
மோந்தை முழாக்குழல் தாளமொர் வீணை
முதிர ஓர் வாஃமூரி பாடி
ஆந்தை விழிச்சிறு பூதத்தர் பாச்சி
லாச்சிராமத்து உறைகின்ற
சாந்தணி மார்பரோ தையலை வாடச்
சதுர் செஃவதோ இவர் சார்வே. 5

நீறு மெஃபூசி நிறைசடை தாழ
நெற்றிக் கண்ணாலுற்று நோக்கி
ஆறது சூடி ஆடர வாட்டி
ஐவிரல் கோவண ஆடை
பாறரு மேனியர் பூதத்தர் பாச்சி
லாச்சிராமத்து உறைகின்ற
ஏறது ஏறியர் ஏழையை வாட
இடர் செஃவதோ இவர் ஈடே. 6

பொங்கிள நாகமொர் ஏகவடத்தோடு
ஆமை வெண்ணூல் புனை கொன்றை
கொங்கிள மாலை புனைந்தழகாய
குழகர் கொலாமிவரென்ன
அங்கிள மங்கையோர் பங்கினர் பாச்சி
லாச்சிராமத்து உறைகின்ற
சங்கொளி வண்ணரோ தாழ்குழல் வாடச்
சதிர் செய்வதோ இவர் சார்வே. 7

ஏவலத் தால் விசயற்கு அருள் செய்து
இராவணன் தன்னை யீடழித்து
மூவரிலும் முதலாய் நடுவாய
மூர்த்தியை அன்றி மொழியாள்
யாவர்களும் பரவும் எழிற் பாச்சி
லாச்சிராமத்து உறைகின்ற
தேவர்கள் தேவரோ சேயிழை வாடச்
சிதை செய்வதோ இவர் சேர்வே. 8

மேலது நான்முகன் எய்தியது இல்லை
கீழது சேவடி தன்னை
நீலது வண்ணனும் எய்தியது இல்லை
என இவர் நின்றது மல்லால்
ஆலது மாமதி தோய் பொழிற் பாச்சி
லாச்சிராமத்து உறைகின்ற
பாலது வண்ணரோ பைந்தொடி வாடப்
பழிசெய்வதோ இவர் பண்பே. 9

நாணொடு கூடிய சாயினரேனும்
நகுவர் அவர் இருபோதும்
ஊணொடு கூடிய வுட்கு நகையால்
உரைகள் அவை கொள வேண்டா

ஆணொடு பெண் வடிவாயினர் பாச்சி
        லாச்சிரமத்து உறைகின்ற
பூண் நெடு மார்பரோ பூங்கொடி வாடப்
        புனை செஃவதோ இவர் பொற்பே. 10

அகமலி அன்பொடு தொண்டர் வணங்க
        ஆச்சிராமத்து உறைகின்ற
புகைமலி மாலை புனைந்து அழகாய
        புனிதர் கொலாமிவ ரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தரு காழி
        நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிவை ஏத்தச்
        சாரகிலா வினை தானே. 11

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : பாலாம்பிகை — **இறைவர்** : மாற்றறிவரதர்



# முன்வினைகள் நீங்கவும் எலும்பு முறிவு முதலியன குணமடையவும் ஓதவேண்டிய பதிகம்

திருமாகறல் — திருஞானசம்பந்தர்
பண் : சாதாரி — 3 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை ஆடல் அரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி
நீடுபொழில் மாகறலுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர்
திங்களணி செஞ்சடையினான்
செங்கண் விடை அண்ணலடி சேர்பவர்கள்
தீவினைகள் தீரும் உடனே. 1

கலையினொலி மங்கையர்கள் பாடல் ஒலி
ஆடல்கவின் எஃதியழகார்
மலையின் நிகர் மாடமுயர் நீள்கொடிகள்
வீசும் மலி மாகறலுளான்
இலையின் மலி வேல்நுனைய சூலம் வலன்
ஏந்தி எரி புன்சடையினுள்
அலைகொள் புனலேந்து பெருமான் அடியை
ஏத்த வினையகலுமிகவே. 2

காலையொடு துந்துபிகள் சங்கு குழல்
யாழ்முழவு காமருவு சீர்
மாலை வழிபாடு செஃது மாதவர்கள்
ஏத்தி மகிழ் மாகறலுளான்

தோலையுடை பேணியதன் மேலொர் சுடர்
நாகமசையா அழகிதாப்
பாலையன நீறு புனைவான் அடியை
ஏத்த வினை பறையுமுடனே. 3

இங்கு கதிர் முத்தினொடு பொன்மணிகள்
உந்தியெழில் மெஃயுளுடனே
மங்கையரும் மைந்தர்களும் மன்னு புனலாடி
மகிழ் மாகறலுளான்
கொங்கு வளர் கொன்றை குளிர் திங்கள் அணி
செஞ்சடையினான் அடியையே
நுங்கள் வினை தீர மிக ஏத்தி
வழிபாடு நுகரா எழுமினே. 4

துஞ்சு நறு நீலம் இருள் நீங்க ஒளி
தோன்று மதுவார் கழனிவாஃ
மஞ்சுமலி பூம்பொழிலில் மயில்கள் நடம்
ஆடமலி மாகறல் உளான்
வஞ்சமத யானை உரி போர்த்துமகிழ்
வானொர் மழுவாளன் வளரும்
நஞ்சமிருள் கண்டமுடை நாதன் அடியாரை
நலியா வினைகளே. 5

மன்னு மறையோர்களொடு பல்படிம
மாதவர்கள் கூடியுடனாஃ
இன்ன வகையால் இனிதிறைஞ்சி
இமையோரிலெழு மாகறலுளான்
மின்னைவிரி புன்சடையின் மேல்மலர்கள்
கங்கையொடு திங்கள் எனவே
உன்னுமவர் தொல்வினைகள் ஒல்கவுயர்
வானுலகம் ஏறல் எளிதே. 6

வெஃபவினை நெறிகள் செல வந்தணையும்
மேல்வினைகள் வீட்டலுறுவீர்
மைகொள் விரி கானல் மது வார்கழனி
மாகறலுளான் எழிலதார்
கைய கரி கால்வரையின் மேலதுரி
தோலுடைய மேனியழகார்
ஐயனடி சேர்பவரை அஞ்சி
அடையா வினைகள் அகலுமிகவே. 7

தூசுதுகில் நீள்கொடிகள் மேகமொடு
தோஃவன பொன்மாடம் மிசையே
மாசுபடு செஃகை மிக மாதவர்கள்
ஓதிமலி மாகறலுளான்
பாசுபத விச்சைவரி நச்சரவு
கச்சையுடை பேணியழகார்
பூசுபொடி ஈசன் என ஏத்த வினை
நிற்றல் இல போகுமுடனே. 8

தூயவிரி தாமரைகள் நெஃதல்
கழுநீர் குவளை தோன்ற மது உண்
பாயவரி வண்டுபல பண்முரலும்
ஓசைபயில் மாகறலுளான்
சாயவிரல் ஊன்றிய இராவணன்
தன்மைகெட நின்ற பெருமான்
ஆய புகழ் ஏத்தும் அடியார்கள்
வினையாயினவும் அகல்வதெளிதே. 9

காலினல பைங்கழல்கள் நீள்முடியின்
மேலுணர்வு காமுறலினால்
மாலும் மலரானும் அறியாமை எரியாகி
உயர் மாகறலுளான்

நாலுமெரி தோலுமுரி மாமணிய
நாகமொடு கூடியுடனாஃ
ஆலும் விடையூர்தியுடை அடிகள்
அடியாரை அடையா வினைகளே. 10

கடைகொள் நெடுமாட முகவோங்கு கமழ்
வீதிமலி காழியவர் கோன்
அடையும் வகையால் பரவி அரனையடி
கூடு சம்பந்தன் உரையால்
மடைகொள் புனலோடு வயல் கூடுபொழில்
மாகறல் உளான் அடியையே
உடைய தமிழ் பத்தும் உணர்வார் அவர்கள்
தொல்வினைகள் ஒல்கும் உடனே. 11

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : திரிபுவன நாயகி – **இறைவர்** : திருமாகறலீசுவரர்



## எலும்பு சம்பந்தப்பட்ட நோய்கள் குணமாக உடைந்த எலும்புகள் ஒன்றுசேரவும் ஓதவேண்டிய பதிகப்

திருமயிலாப்பூர் திருஞானசம்பந்த
பண் : சீகாமரம் 2 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மட்டிட்ட புன்னையங் கானல் மட மயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய் 1

மைப்பயந்த ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவும் காணாதே போதியோ பூம்பாவாய் 2

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச்சரத்தான் தொல் கார்த்திகை நாள்
தளத்தேந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய் 3

ஊர்திரை வேலை உலாவும் உயர் மயிலைக்
கூர்தரு வேல் வல்லார் கொற்றம் கொள் சேரிதனில்
கார் தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய் 4

மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண் புழுக்கல் நேரிழையோர் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய் 5

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
அடல் ஆன் ஏறு ஊறும் அடிகள் அடி பரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாஃ 6

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
பலிவிழாப் பாடல் செஃ பங்குனி உத்திர நாள்
ஒலி விழாக் காணாதே போதியோ பூம்பாவாஃ 7

தண்ணா அரக்கன் தோள் சாஃத்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
பண்ணார் பதினெண் கணங்கள் தம் அட்டமி நாள்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாஃ 8

நற்றாமரை மலர் மேல் நான்முகனும் நாரணனும்
உற்றாங்கு உணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம் அமர்ந்தான்
பொற்றாப்புக் காணாதே போதியோ பூம்பாவாஃ 9

உரிஞ்சாய வாழ்க்கை அமணுடையைப் போர்க்கும்
இருஞ் சாக்கியர்கள் எடுத்து உரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம் அமர்ந்தான்
பெருஞ் சாந்தி காணாதே போதியோ பூம்பாவாஃ 10

கானமர் சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம்பந்தன் நலம் புகழ்ந்த பத்தும் வலார்
வான சம்பந்தத்து அவரோடும் வாழ்வாரே. 11

**இறைவி** : கற்பகாம்பாள் – **இறைவர்** : கபாலீசுவரர்

## சொரி, படை, மேகம், அம்மை போன்ற பலவகை உடற்பிணிகள் அகல ஓதவேண்டிய பதிகம்

திருத்துருத்தியும் வேள்விக்குடியும் சுந்தரமூர்த்தி நாயனார்
பண் : காந்தாரம் 7 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மின்னுமா மேகங்கள் பொழிந்து இழிந்து அருவி
வெடிபடக் கரையொடுந் திரை கொணர்ந்து எற்றும்
அன்னமாங் காவிரி அகன் கரை உறைவார்
அடியிணை தொழுதெழும் அன்பராம் அடியார்
சொன்னவாறு அறிவார் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
என்னை நான் மறக்குமாறு எம்பெருமானை
என்னுடம் படும் பிணி இடர் கெடுத்தானை. 1

கூடுமாறு உள்ளன கூடியுங் கோத்துங்
கொஃயுன ஏனலோடைவனஞ் சிதறி
மாடுமா கோங்கமே மருதமே பொருது
மலையெனக் குலைகளை மறிக்குமாறு உந்தி
ஓடுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
பாடுமாறு அறிகிலேன் எம்பெருமானைப்
பழவினை உள்ளன பற்றறுத்தானை. 2

கொல்லுமால் யானையின் கொம்பொடு வம்பார்
கொழுங்கனிச் செழும் பயன் கொண்டு கூட்டெஃதிப்
புல்கியுந் தாழ்ந்தும் போந்து தவஞ் செஃயும்
போகரும் யோகரும் புலரிவாஃ மூழ்கச்

செல்லுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
சொல்லுமாறு அறிகிலேன் எம்பெருமானைத்
தொடர்ந்தடுங் கடும் பிணித் தொடர்வறுத்தானை. 3

பொறியுமா சந்தனத் துண்டமோடு அகிலும்
பொழிந்திழிந்து அருவிகள் புன்புலங் கவரக்
கறியுமா மிளகொடு கதலியும் உந்திக்
கடலுற விளைப்பதே கருதித் தன் கைபோஃ
எறியுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
அறியுமாறு அறிகிலேன் எம்பெருமானை
அருவினை உள்ளன ஆசறுத்தானை. 4

பொழிந்திழி மும்மதக் களிற்றின மருப்பும்
பொன் மலர் வேங்கையின் நன்மலர் உந்தி
இழிந்திழிந்து அருவிகள் கடும்புனல் ஈண்டி
எண் திசையோர்களும் ஆடவந்திங்கே
சுழிந்திழி காவிரி துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
ஒழிந்திலேன் பிதற்றுமாறு எம்பெருமானை
உற்ற நோஃ இற்றையே உறவொழித்தானை. 5

புகழுமா சந்தனத் துண்டமோடு அகிலும்
பொன்மணி வரன்றியும் நன்மலர் உந்தி
அகழுமா அருங்கரை வளம்படப் பெருகி
ஆடுவார் பாவந் தீர்த்து அஞ்சனம் அலம்பித்
திகழுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
இகழுமாறு அறிகிலேன் எம்பெருமானை
இழித்த நோஃ இம்மையே ஒழிக்க வல்லானை. 6

வரையின் மாங்கனியொடு வாழையின் கனியும்
வருடியும் வணக்கியும் மராமரம் பொருது
கரையுமா கருங்கடல் காண்பதே கருத்தாஃக்
காம்பீலி சுமந்தொளிர் நித்திலங் கைபோஃ
விரையுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
உரையுமாறு அறிகிலேன் எம்பெருமானை
உலகறி பழவினை அறவொழித்தானை. 7

ஊருமா தேசமே மனம் உகந் துள்ளிப்
புள்ளினம் பல படிந்தொண்கரை உகளக்
காருமா கருங்கடல் காண்பதே கருத்தாஃக்
கவரி மா மயிர் சுமந் தொண்பளிங் கிடறித்
தேருமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
ஆருமாறு அறிகிலேன் எம்பெருமானை
அம்மை நோஃ இம்மையே ஆசறுத்தானை. 8

புலங்களை வளம்படப் போக்கறப் பெருகிப்
பொன்களே சுமந்தெங்கும் பூசல்செஃது ஆர்ப்ப
இலங்குமார் முத்தினோடு இனமணி இடறி
இருகரைப் பெருமரம் பீழ்ந்து கொண்டெற்றிக்
கலங்குமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
விலங்குமாறு அறிகிலேன் எம்பெருமானை
மேலை நோஃ இம்மையே வீடுவித்தானை. 9

மங்கையோர் கூறுகந்து ஏறுகந்தேறி
மாறலார் திரிபுரம் நீறெழச் செற்ற
அங்கையான் கழலடி அன்றி மற்றறியான்
அடியவர்க்கு அடியவன் தொழுவன் ஆ ரன்

கங்கையார் காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் சேர்த்திய பாடல்
தங்கையால் தொழுது தம் நாவின் மேற்கொள்வார்
தவநெறி சென்று அமருலகம் ஆள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்

## பாம்பு விடம் ( நஞ்சு ) தீர்க்கும் திருப்பதிகம்

விடந்தீர்த்த திருப்பதிகம் — திருநாவுக்கரசர்
பண் : இந்தளம் — 4 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

ஒன்றுகொலாம் அவர் சிந்தை உயர்வரை
ஒன்றுகொலாம் உயரும் மதி சூடுவர்
ஒன்று கொலாம் இடு வெண்டலை கையது
ஒன்றுகொலாம் அவர் ஊர்வது தானே. 1

இரண்டு கொலாம் இமையோர் தொழு பாதம்
இரண்டு கொலாம் இலங்கும் குழை பெண் ஆண்
இரண்டு கொலாம் உருவம் சிறு மான் மழு
இரண்டு கொலாம் அவர் எஃதின தாமே. 2

மூன்று கொலாம் அவர் கண் நுதலாவன
மூன்று கொலாம் அவர் சூலத்தின் மொஃயிலை
மூன்று கொலாம் கணை கையது வில் நாண்
மூன்று கொலாம் புரம் எஃதன தாமே. 3

நாலு கொலாம் அவர் தம்முகமாவன
நாலுகொலாம் சனனம் முதல் தோற்றமும்
நாலு கொலாம் அவர் ஊர்தியின் பாதங்கள்
நாலு கொலாம் மறை பாடினதாமே. 4

அஞ்சு கொலாம் அவர் ஆடரவின் படம்
அஞ்சு கொலாம் அவர் வெல் புலனாவன
அஞ்சு கொலாம் அவர் காயப்பட்டான் கணை
அஞ்சு கொலாம் அவர் ஆடினதாமே. 5

ஆறுகொலாம் அவர் அங்கம் படைத்தன
ஆறுகொலாம் அவர் தம் மகனார் முகம்
ஆறுகொலாம் அவர் தார்மிசை வண்டின் கால்
ஆறுகொலாம் சுவை ஆக்கினதாமே. 6

ஏழுகொலாம் அவர் ஊழி படைத்தன
ஏழுகொலாம் அவர் கண்ட இருங்கடல்
ஏழுகொலாம் அவர் ஆளும் உலகங்கள்
ஏழுகொலாம் இசை ஆக்கினதாமே. 7

எட்டுக்கொலாம் அவர் ஈறில் பெருங்குணம்
எட்டுக்கொலாம் அவர் சூடுமின மலர்
எட்டுக்கொலாம் அவர் தோளிணை யாவன
எட்டுக்கொலாம் திசை ஆக்கினதாமே. 8

ஒன்பது போலவர் வாசல் வகுத்தன
ஒன்பது போலவர் மார்பினில் நூலிழை
ஒன்பது போலவர் போலக் குழல் சடை
ஒன்பது போலவர் பாரிடந்தானே. 9

பத்து கொலாம் அவர் பாம்பின் கண் பாம்பின்பல்
பத்து கொலாம் எயிறும் நெரிந்துக்கன
பத்து கொலாம் அவர் காயப்பட்டான் தலை
பத்துகொலாம் அடியார் செஃகை தானே. 10

**இறைவி** : பெரிய நாயகி – **இறைவர்** : கைலாச நாதர்

# வலக்கண் பார்வை பெற உதவும் பதிகம்

திருவா ர் சுந்தரமூர்த்தி நாயனார்
பண் : செந்துருத்தி 7 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை உமக்கே ஆளா ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளா இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங்கு இருப்பீர் திருவா ரீர்
வாழ்ந்து போதீரே. 1

விற்றுக்கொள்வீர் ஒற்றி அல்லேன்
விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றும் செ ததில்லை
கொத்தை ஆக்கினீர்
எற்றுக்கு அடிகேள் என் கண் கொண்டீர்
நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாராது ஒழிந்தால்
வாழ்ந்து போதீரே. 2

அன்றில் முட்டாது அடையுஞ் சோலை
ஆ ர் அகத்தீரே
கன்று முட்டி உண்ணச் சுரந்த
காலியவை போல

என்றும் முட்டாப் பாடும் அடியார்
தங்கண் காணாது
குன்றில் முட்டிக் குழியில் விழுந்தால்
வாழ்ந்து போதீரே. 3

துருத்தி உறைவீர் பழனம் பதியாச்
சோற்றுத்துறை ஆள்வீர்
இருக்கை திருவா ரே உடையீர்
மனமே என வேண்டா
அருத்தி உடைய அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமை பணித்தால்
வாழ்ந்து போதீரே. 4

செந்தண் பவளந் திகழுஞ் சோலை
இதுவோ திருவா ர்
எந்தம் அடிகேள் இதுவே ஆமா(று)
உமக்கு ஆட்பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடும் அடியார்
தங்கண் காணாது
வந்து எம்பெருமான் முறையோ என்றால்
வாழ்ந்து போதீரே. 5

தினைத்தாள் அன்ன செங்கால் நாரை
சேருந் திருவா ர்ப்
புனத்தார் கொன்றைப் பொன்போல்
மாலைப் புரிபுன் சடையீரே
தனத்தால் இன்றித் தாந்தாம் மெலிந்து
தங்கண் காணாது
மனத்தால் வாடி அடியார் இருந்தால்
வாழ்ந்து போதீரே. 6

ஆயம் பேடை அடையுஞ் சோலை
ஆ  ர் அகத்தீரே
ஏ  எம்பெருமான் இதுவே ஆமாறு
உமக்காட்பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி
மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால்
வாழ்ந்து போதீரே. 7

கழியா க் கடலா க் கலனா  நிலனா க்
கழிந்த சொல்லாகி
இழியாக் குலத்தில் பிறந்தோம் உம்மை
இகழாது ஏத்துவோம்
பழிதான் ஆவது அறியீர் அடிகேள்
பாடும் பத்தரோம்
வழிதான் காணாது அலமந்து இருந்தால்
வாழ்ந்து போதீரே. 8

பேயோடேனும் பிரிவு ஒன்று இன்னாது
என்பர் பிறரெல்லாம்
கா  தான் வேண்டில் கனிதான் அன்றோ
கருதிக் கொண்டக்கால்
நா  தான் போல நடுவே திரிந்தும்
உமக்காட்பட்டோர்க்கு
வா  தான் திறவீர் திருவா  ரீர்
வாழ்ந்து போதீரே. 9

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை
இதுவோ திருவா  ர்
பொருந்தித் திருமூலட்டானம்மே
இடமாக் கொண்டீரே

இருந்தும் நின்றும் கிடந்தும் உம்மை
        இகழாது ஏத்துவோம்
வருந்தி வந்தும் உமக்கொன்று உரைத்தால்
        வாழ்ந்து போதீரே. 10

கா ர் கண்டத்து எண்தோள் முக்கண்
        கலைகள் பலவாகி
ஆ ர்த் திருமூலட்டானத்தே
        அடிப்பேர் ஆ ரன்
பா ர் அறிய என்கண் கொண்டீர்
        நீரே பழிப்பட்டீர்
வா ர் முலையாள் பாகங் கொண்டீர்
        வாழ்ந்து போதீரே. 11

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : கமலாம்பிகை – **இறைவர்** : புற்றிடங்கொண்ட நாதர்



# இடக்கண் பார்வை பெற உதவும் பதிகம்

திருக்கச்சி ஏகம்பம் சுந்தரமூர்த்தி நாயனார்
பண் : தக்கேசி 7 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

ஆலந்தான் உகந்து அமுது செ தானை
ஆதியை அமரர் தொழுது ஏத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தையுளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 1

உற்றவர்க்கு உதவும் பெருமானை
ஊர்வது ஒன்றுடையான் உம்பர் கோனைப்
பற்றினார்க்கு என்றும் பற்றவன் தன்னைப்
பாவிப்பார் மனம் பாவிக்கொண்டானை
அற்றமில் புகழாள் உமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கற்றைவார் சடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 2

திரியும் முப்புரம் தீப்பிழம்பாகச்
செங்கண் மால்விடைமேல் திகழ்வானைக்
கரியின் ஈருரி போர்த்துகந்தானைக்
காமனைக் கனலா விழித்தானை

வரிகொள் வெள்வளையாள் உமை நங்கை
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
பெரிய கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 3

குண்டலம் திகழ் காதுடையானைக்
கூற்றுதைத்த கொடுந் தொழிலானை
வண்டலம்பு மலர்க் கொன்றையினானை
வாளரா மதிசேர் சடையானைக்
கெண்டையந் தடங் கண்ணுமை நங்கை
கெழுமி ஏத்தி வழிபடப் பெற்ற
கண்டம் நஞ்சுடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 4

வெல்லும் வெண்மழு ஒன்றுடையானை
வேலை நஞ்சுண்ட வித்தகன் தன்னை
அல்லல் தீர்த்தருள் செ ய வல்லானை
அருமறையவை அங்கம் வல்லானை
எல்லையில் புகழாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 5

திங்கள் தங்கிய சடையுடையானைத்
தேவ தேவனைச் செழுங்கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடையானைச்
சாம வேதம் பெரிதுகப்பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 6

விண்ணவர் தொழுதேத்த நின்றானை
வேதந்தான் விரித்து ஓதவல்லானை
நண்ணினார்க்கு என்றும் நல்லவன் தன்னை
நாளும் நாம் உகக்கின்ற பிரானை
எண்ணில் தொல்புகழாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்றுடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 7

சிந்தித்து என்றும் நினைந்து எழுவார்கள்
சிந்தையில் திகழுஞ் சிவன் தன்னைப்
பந்தித்த வினைப் பற்று அறுப்பானைப்
பாலொடு ஆன் அஞ்சும் ஆட்டுகந்தானை
அந்தமில் புகழாள் உமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 8

வரங்கள் பெற்றுழல் வாளரக்கர் தம்
வாலியபுரம் மூன்றெரித்தானை
நிரம்பிய தக்கன் தன் பெருவேள்வி
நிரந்தரஞ் செ த நிட்கண்டகனைப்
பரந்த தொல் புகழாள் உமை நங்கை
பரவி ஏத்தி வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 9

எள்கல் இன்றி இமையவர் கோனை
ஈசனை வழிபாடு செ வாள் போல்
உள்ளத்து உள்கி உகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு

வெள்ளங் காட்டி வெருட்டிட அஞ்சி
        வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
        காணக் கண் அடியேன் பெற்றவாறே. 10

பெற்றம் ஏறுகந்து ஏறவல்லானைப்
        பெரிய எம்பெருமான் என்று எப்போதும்
கற்றவர் பரவப் படுவானைக்
        காணக் கண் அடியேன் பெற்றதென்று
கொற்றவன் கம்பன் கூத்தன் எம்மானைக்
        குளிர் பொழில் திருநாவலா ரன்
நற்றமிழ் இவை ஈரைந்தும் வல்லார்
        நன்னெறி உலகெ துவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : காமாட்சி அம்மை – **இறைவர்** : ஏகாம்பர நாதர்



## ஊமை திக்குவா முதலியன நீங்கி நன்றாக பேச உதவும் பதிகம்

திருச்சாழல் மாணிக்கவாசகர்
தில்லையில் அருளியது 8 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ. 1

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தான் ஈசன்
துன்னம்பெ கோவணமாக் கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன் காண் சாழலோ. 2

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல் ஆடை
தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ. 3

அயனைஅனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச்செ தான் காணேடீ
நயனங்கள்மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலா சாழலோ. 4

தக்கனையும் எச்சனையும் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கன வந்தவர் தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ
தொக்கன வந்தவர் தம்மைத் தொலைத்தருளி அருள்கொடுத்தங்கு
எச்சனுக்கு மிகைத்தலை மற்றருளினன் காண் சாழலோ. 5

அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவா
நிலமுதல் கீழ் அண்டமுற நின்றது தான் என்னேடீ
நிலமுதல் கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவருந்தம்
சலமுகத்தால் ஆங்காரம் தவிரார் காண் சாழலோ. 6

மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையில் பாயுமது என்னேடி
சலமுகத்தால் அவன்சடையில் பா ந்திலனேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பா ந்து பெருங்கேடாம் சாழலோ. 7

கோலாலம் ஆகிக் குரைகடல்வா அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன் சதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்று அயன் மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. 8

தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேல் பேதா இருநிலத்தோர்
விண்பால் யோகெ தி வீடுவர்காண் சாழலோ. 9

தானந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்தான் காணேடீ
ஆனந்தவெள்ளத்து அழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ. 10

நங்கா இதென்ன தவம் நரம்போடு எலும்பணிந்து
கங்காளம் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந்த ரத்திருவர்
தங்காலம் செ யத் தரித்தனன்காண் சாழலோ. 11

கானார் புலித்தோல் உடை தலை ஊண் காடுபதி
ஆனால் அவனுக்கு இங்கு ஆட்படுவார் ஆரேடீ
ஆனாலும் கேளா அயனும் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ. 12

மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளாது ஒழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாம் கலங்கிடும் காண் சாழலோ.

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற்றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடி
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக்கு ஊட்டாங் காண் சாழலோ. 14

கடகரியும் பரிமாவும் தேரும் உகந்தேறாதே
இடபம் உகந்தேறியவாறு எனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதா த் தாங்கினான் திருமால் காண் சாழலோ 15

நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங்கு அறமுறைத்தான் காணேடீ
அன்றாலின் கீழிருந்தங்கு அறமுறைத்தான் ஆயிடினும்
கொன்றான் காண் புரமூன்றும் கூட்டோடே சாழலோ. 16

அம்பலத்தே கூத்தாடி அமுது செயப் பலிதிரியும்
நம்பனையும் தேவெனன்று நண்ணுமது என்னேடீ
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசா என்று ஏத்தினன் காண் சாழலோ. 17

சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன்று அருளியவாறு என்னேடீ
நலமுடைய நாரணன்தன் நயனம் இடந்து அரனடிக்கீழ்
அலராக இட ஆழி அருளினன் காண் சாழலோ. 18

அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமான் உண்டசதுர் எனக்கறிய இயம்பேடீ
எம்பெருமான் ஏது உடுத்தங்கு ஏது அமுது செ திடினும்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ. 19

அருந்தவர்க்கு ஆலின்கீழ் அறமுதலா நான்கனையும்
இருந்தவருக்கு அருளுமது எனக்கறிய இயம்பேடீ
அருந்தவருக்கு அறமுதல் நான்கு அன்று அருளிச் செ திலனேல்
திருந்தவருக்கு உலகியற்கை தெரியாகாண் சாழலோ. 20

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : சிவகாம சுந்தரி அம்மை
**இறைவர்** : ஆனந்தமா நடரசாப் பெருமான்



# எமபயம் நீக்கும் பதிகம்

காலபாசத் திருக்குறுந்தொகை திருநாவுக்கரசர்
திருக்குறுந்தொகை **5** ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கண்டு கொள்ளரி யானைக் கனிவித்துப்
பண்டு நான்செ த பாழிமை கேட்டிரேல்
கொண்ட பாணி கொடு கொட்டி தாளங்கைக்
கொண்ட தொண்டரைத் துன்னிலுஞ் சூழலே. 1

நடுக்கத் துள்ளும் நகையுளும் நம்பர்க்குக்
கடுக்கக் கல்ல வடமிடுவார் கட்குக்
கொடுக்கக் கொள்க என உரைப்பார்களை
இடுக்கண் செ யப் பெறீர் இங்கு நீங்குமே. 2

கார்கொள் கொன்றைக் கடிமலர்க் கண்ணியான்
சீர்கொள் நாமஞ் சிவன் என்று அரற்றுவார்
ஆர்கள் ஆகிலும் ஆக அவர்களை
நீர்கள் சாரப் பெறீர் இங்கு நீங்குமே. 3

சாற்றினேன் சடை நீண்முடிச் சங்கரன்
சீற்றங் காமன் கண் வைத்தவன் சேவடி
ஆற்றவுங் களிபட்ட மனத்தரா ப்
போற்றி என்று உரைப்பார் புடை போகலே. 4

இறையென் சொல் மறவேல் நமன் தூதுவீர்
பிறையும் பாம்பும் உடைப் பெருமான் தமர்
நறவம் நாறிய நல் நறுஞ் சாந்திலும்
நிறைய நீறணிவார் எதிர் செல்லலே. 5

வாமதேவன் வளநகர் வைகலும்
காமம் ஒன்றிலரா க் கைவிளக்கொடு
தாமம் தூபமும் தண்நறுஞ் சாந்தமும்
ஏமமும் புனைவார் எதிர் செல்லலே. 6

படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன்மின் நமது ஈசன் அடியரை
விடைகொள் ஊர்தியினான் அடியார் குழாம்
புடைபுகாது நீர் போற்றியே போமினே. 7

விச்சையாவதும் வேட்கைமை ஆவதும்
நிச்சல் நீறணிவாரை நினைப்பதே
அச்சம் எ தி அருகு அணையாது நீர்
பிச்சை புக்கவன் அன்பரைப் பேணுமே. 8

இன்னங் கேண்மின் இளம்பிறை சூடிய
மன்னன் பாதம் மனத்துடன் ஏத்துவார்
மன்னும் அஞ்செழுத்தாதிய மந்திரம்
தன்னிலொன்று வல்லாரையுஞ் சாரலே. 9

மற்றுங் கேண்மின் மனப்பரிப் பொன்றின்றிச்
சுற்றும் பூசிய நீற்றொடு கோவணம்
ஒற்றை ஏறுடையான் அடியே அலால்
பற்றொன்றில்லிகள் மேற் படை போகலே. 10

அரக்கன் ஈரைந்து தலையுமோர் தாளினால்
நெருக்கி ஊன்றிட்டான் தமர் நிற்கிலும்
சுருக்கெனாது அங்கு பேர்மின்கள் மற்று நீர்
சுருக்கெனில் சுடரான் கழல் சூடுமே. 11

**இறைவி** : சௌந்தர நாயகி – **இறைவர்** : புஷ்பவன நாதர்



# கல்வி

கல்வி என்பது இரண்டு வகைப்படும். 1. அருளியல் கல்வி 2. உலகியல் கல்வி. உலகியல் கல்வி உலகாயதத்திற்கு மட்டுமே ( இம்மைக்கு மட்டுமே ) பயன்படும். ஆனால் அருளியல் கல்வி இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படும். இதனையே நமது திருவள்ளுவர்,

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து.** — என்றும்

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழார் எனின்.** — என்றும்

இதனையே அப்பர் சுவாமிகளும், " **நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்** " என்று அருளுகிறார். எனவே கல்வியின் பயன் இறைவனின் திருவடியை வணங்குதலே என்பது பெறப்படும். இறைவனது திருவடியை உணரப் பயன்படும் ஐந்தெழுத்து மந்திரமே உண்மைக் கல்வி ஆகும்.

# கல்வியில் சிறந்து விளங்க

திருப்பிரமபுரம் திருஞானசம்பந்தர்
பண் : வியாழக் குறிஞ்சி 1 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

ஓர் உருவாயினை மானாங் காரத்து
ஈரியல்பா   ஒரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்து அளித்து அழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை
இருவரோடு ஒருவனாகி நின்றனை

ஓரால் நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழுதேத்திய நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை நாட்டம் மூன்றாகக் கோட்டினை
இருநதி அரவமொடு ஒருமதி சூடினை
ஒரு தாளீரயின் மூவிலைச் சூலம்

நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை கா  ந்த நால்வா   மும்மதத்து
இருக்கோட்டு ஒரு கரி ஈடழித்து உரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத்தோடு நானிலம் அஞ்சக்

கொன்று தலத்துற அவுணரை அறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ஒருங்கிய மனத்தோடு
இரு பிறப்போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்து ஆறங்க முதலெழுத்து ஓதி

வரன்முறை பயின்றெழுவான் தனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை

இகலி அமைந்துணர் புகலி அமர்ந்தனை
பொங்கு நாற்கடல் சூழ் வெங்குரு விளங்கினை
பாணி மூவுலகும் புதைய மேல்மிதந்த
தோணிபுரத்து உறைந்தனை தொலையா இருநிதி
வா ந்த பூந்தரா ஏ ந்தனை

வரபுரம் என்றுணர் சிரபுரத்து உறைந்தனை
ஒரு மலையெடுத்த இருதிறல் அரக்கன்
விறல் கெடுத்தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை

ஐயுரும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை
எச்சன் ஏழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்

மூன்று காலமும் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை ஆதலின் நின்னை
நினைய வல்லவரில்லை நீள் நிலத்தே.

திருச்சிற்றம்பலம்

## உலகியல் மற்றும் அருளியல் கல்வி பெற

பஞ்சாக்கரத் திருப்பதிகம் — திருஞானசம்பந்தர்
பண் : காந்தார பஞ்சமம் — 3 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே. 1

மந்திர நான்மறை ஆகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே. 2

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்து
ஏனை வழிதிறந்து ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே. 3

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல் கெடச் சிவமுத்தி காட்டுவ
கொல்ல நமன் தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே. 4

கொங்கு அலர் வன்மதன் வாளி ஐந்து அகத்து
அங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கு அரவின் படம் அஞ்சும் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்துமே. 5

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினை அடர்த்து எ  தும் போழ்தினும்
அம்மையினும் துணை அஞ்செழுத்துமே. 6

வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி உகப்பன அஞ்செழுத்துமே. 7

வண்டமர் ஓதி மடந்தை பேணிண
பண்டை இராவணன் பாடி உ  ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்தபின் அவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செழுத்துமே. 8

கார்வணன் நான்முகன் காணுதற்கு ஒணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவன அஞ்செழுத்துமே. 9

புத்தர் சமண் கழுக்கையர் பொ  கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணிவார் வினைப் பகைக்கு
அத்திரமாவன அஞ்செழுத்துமே. 10

நற்றமிழ் ஞானசம்பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமிழ் மாலை ஈரைந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்பராவரே. 11

திருச்சிற்றம்பலம்

# உலகியல் மற்றும் அருளியல் கல்வி பெற

பொது — திருஞானசம்பந்தர்
பண் : கௌசிகம் — 3 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உ  ப்பது
வேதம் நான்கினும் மெ  ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே. 1

நம்புவாரவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது ஒப்பது
செம்பொனார் திலகம் உலகுக்கெல்லாம்
நம்பன் நாமம் நமச்சிவாயவே. 2

நெக்குள் ஆர்வம் மிகப் பெருகி நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவார்
தக்க வானவராத் தகுவிப்பது
நக்கன் நாமம் நமச்சிவாயவே. 3

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந்து ஓதவல்லார் தமை நண்ணினால்
நியமந்தான் நினைவார்க்கு இனியான் நெற்றி
நயனன் நாமம் நமச்சிவாயவே. 4

கொல்வாரேனும் குணம்பல நன்மைகள்
இல்லாரேனும் இயம்புவர் ஆயிடின்
எல்லா தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே. 5

மந்தரம் அன பாவங்கள் மேவிய
பந்தனையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சிவாயவே. 6

நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும்
உரைசெ வாயினர் ஆயின் உருத்திரர்
விரவியே புகுவித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சிவாயவே. 7

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வா மொழி செ தவன் உ வகை
நலங்கொள் நாமம் நமச்சிவாயவே. 8

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதம்தான் முடிநேடிய பண்பரா
யாதுங் காண்பு அரிதாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சிவாயவே. 9

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெ
நஞ்சுண் கண்டன் நமச்சிவாயவே. 10

நந்தி நாமம் நமச்சிவாய என்னும்
சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்தவல்லார் எலாம்
பந்த பாசம் அறுக்க வல்லார்களே. 11

திருச்சிற்றம்பலம்

# உலகியல் மற்றும் அருளியல் கல்வி பெற

பொது | திருநாவுக்கரசர்
பண் : காந்தார பஞ்சமம் | 4 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பா ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே. 1

பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சாடுதல்
கோவினுக்கு அருங்கலம் கோட்டமில்லது
நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே. 2

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணி நின்று அறுப்பது நமச்சிவாயவே. 3

இடுக்கண் பட்டு இருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கிற் பிரான் என்று வினவுவோம் அல்லோம்
அடுக்கற் கீழ்க் கிடக்கினும் அருளின் நாமுற்ற
நடுக்கத்தை கெடுப்பது நமச்சிவாயவே. 4

வெந்த நீறு அருங்கலம் விரதிகட்கெல்லாம்
அந்தணர்க்கு அருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக்கு அருங்கலம் திகழும் நீண்முடி
நங்களுக்கு அருங்கலம் நமச்சிவாயவே. 5

சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கு அலால்
நலமிலன் நாள்தொறும் நல்குவான் நலன்
குலமிலராகிலும் குலத்திற்கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே. 6

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடச் சென்றலும்
ஓடினேன் ஓடிச் சென்று உருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சிவாயவே. 7

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே. 8

முன்னெறியாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறியே சரணாதல் திண்ணமே
அந்நெறியே சென்றங்கு அடைந்தவர்க்கெலாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே. 9

மாப்பிணை தழுவிய மாது ஓர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவாய பத்து
ஏத்தவல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே. 10

திருச்சிற்றம்பலம்

## உலகியல் மற்றும் அருளியல் கல்வி பெற

திருப்பாண்டிக்கொடுமுடி
பண் : பழம்பஞ்சுரம்

சுந்தரமூர்த்தி நாயனார்
7 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின் திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிற
வாத தன்மை வந்தெ தினேன்
கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க் கறை
யூரிற் பாண்டிக்கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சிவாயவே. 1

இட்ட னும் அடி ஏத்துவார் இகழ்ந்து
இட்ட நாள் மறந்திட்ட நாள்
கெட்ட நாள் இவை என்றலாற் கரு
தேன் கிளர் புனற் காவிரி
வட்ட வாசி கை கொண்டு அடி தொழுது
ஏத்து பாண்டிக் கொடுமுடி
நட்டவா உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சிவாயவே. 2

ஓவு நாள் உணர்வு அழியும் நாள் உயிர்
போகும் நாள் உயர் பாடை மேல்
காவும் நாள் இவை என்றலாற் கரு
தேன் கிளர் புனற் காவிரிப்

பாவு தண் புனல் வந்திழி பரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
நாவலா உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சிவாயவே. 3

எல்லையில் புகழ் எம்பிரான் எந்தை
தம்பிரான் என்பொன் மாமணி
கல்லை உந்தி வளம் பொழிந்திழி
காவிரி யதன் வா க்கரை
நல்லவர் தொழுதேத்தும் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்லவா உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சிவாயவே. 4

அஞ்சினார்க்கு அரண் ஆதி என்று
அடியேனும் நான் மிக அஞ்சினேன்
அஞ்சல் என்றடித் தொண்டனேற்கு அருள்
நல்கினா க்கு அழிகின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவைமார் குடைந்து
ஆடு பாண்டிக் கொடுமுடி
நஞ்சணி கண்ட நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சிவாயவே. 5

ஏடுவான் இளந் திங்கள் சூடினை
என்பின் கொல் புலித் தோலின் மேல்
ஆடு பாம்பது அரைக்கசைத்த
அழகனே அந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்திழிப் பரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேடனே உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சிவாயவே. 6

விரும்பி நின் மலர்ப் பாதமே நினைந்
        தேன் வினைகளும் விண்டனன்
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெழில் பெற
        நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென் முலைக் கோதைமார் குடைந்
        தாடு பாண்டிக் கொடுமுடி
விரும்பனே உனை நான் மறக்கினும்
        சொல்லும் நா நமச்சிவாயவே. 7

செம்பொனேர் சடையா திரிபுரம்
        தீயெழச் சிலை கோலினா
வம்புலாங் குழலாளைப் பாகம்
        அமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற் குயில் கூவ மாமயில்
        ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்பனே உனை நான் மறக்கினும்
        சொல்லும் நா நமச்சிவாயவே. 8

சாரணன் தந்தை எம்பிரான் எந்தை
        தம்பிரான் என்பொன் மாமணி என்று
பேரெ ணாயிர கோடி தேவர்
        பிதற்றி நின்று பிரிகிலார்
நாரணன் பிரமன் தொழுங் கறை
        யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
காரணா உனை நான் மறக்கினும்
        சொல்லும் நா நமச்சிவாயவே. 9

கோணிய பிறை சூடியைக் கறை
        யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணிய பெருமானைப் பிஞ்ஞகப்
        பித்தனைப் பிறப்பில்லியைப்

பாணுலா வரி வண்டறை கொன்றைத்
தாரனைப் படப் பாம்பரை
நாணனைத் தொண்டன் ஊரன் சொல் இவை
சொல்லுவார்க்கு இல்லைத் துன்பமே. 10

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : வடிவுடை நாயகி – **இறைவர்** : மகுடேஸ்வரர்



## உலகியல் மற்றும் அருளியல் கல்வி பெற

திருவேசறவு மாணிக்கவாசகர்
திருப்பெருந்துறையில் அருளியது 8 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

இரும்புதரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து என் என்புருக்கிக்
கரும்புதரு சுவை எனக்குக் காட்டினை உன் கழல் இணைகள்
ஒருங்குதிரை உலவு சடை உடையானே நரிகள் எல்லாம்
பெருங்குதிரை ஆக்கியவாறு அன்றே உன் பேரருளே. 1

பண்ணார்ந்த மொழி மங்கை பங்காநின் ஆளானார்க்கு
உண்ணார்ந்த ஆரமுதே உடையானே அடியேனை
மண்ணார்ந்த பிறப்பறுத்திட்டு ஆள்வா நீ வா என்னக்
கண்ணார உ ந்தவாறு அன்றே உன் கழல் கண்டே. 2

ஆதமிலியான் பிறப்பு இறப்பென்னும் அருநரகில்
ஆர்தமரும் இன்றியே அழுந்துவேற்கு ஆஆ என்று
ஓதமலி நஞ்சுண்ட உடையானே அடியேற்குன்
பாதமலர் காட்டியவாறு அன்றே எம் பரம்பரனே. 3

பச்சைத்தால் அரவாட்டீ படர்சடையா பாதமலர்
உச்சத்தார் பெருமானே அடியேனை உ யக்கொண்டு
எச்சத்தார் சிறுதெ வம் ஏத்தாதே அச்சோ என்
சித்தத்தாறு உ ந்தவாறு அன்றே உன் திறம் நினைந்தே. 4

கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெ வம் வாக்கியலால் வார்கழல் வந்து
உற்றி இறுமாந்து இருந்தேன் எம்பெருமானே அடியேற்குப்
பொற்றவிசு நா க்கிடுமாறு அன்றே நின் பொன்னருளே. 5

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர நடுங்குவேன் நின்னருளால்
உ ஞ்சேன் எம்பெருமானே உடையானே அடியேனை
அஞ்சேல் என்று ஆண்டவாறு அன்றே அம்பலத்தமுதே. 6

என்பாலைப் பிறப்பறுத்திங்கு இமையவர்க்கும் அறியவொண்ணாத்
தென்பாலைத் திருப்பெருந்துறை உறையும் சிவபெருமான்
அன்பால் நீ அகம் நெகவே புகுந்தருளி ஆட்கொண்டது
என்பாலே நோக்கியவாறு அன்றே எம்பெருமானே. 7

மூத்தானே மூவாத முதலான முடிவில்லா
ஒத்தானே பொருளானே உண்மையுமா இன்மையுமா ப்
பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினால்
பேர்த்தே நீ ஆண்டவாறு அன்றே எம் பெருமானே. 8

மருவினிய மலர்ப்பாதம் மனத்தில் வளர்ந்து உள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச் சிவபெருமான் என்றேத்திப்
பருகிய நின் பரங்கருணைத் தடங்கடலில் படிவாமாறு
அருளெனக்கு இங்கு இடைமருதே இடங்கொண்ட எம்மானே. 9

நானேயோ தவம் செ தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனா இன் அமுதமுமா த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனதுள்ளம் புகுந்து அடியேற்கு அருள்செ தான்
ஊனாரும் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே. 10

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : யோகாம்பாள் – **இறைவர்** : ஆத்மநாதசுவாமி



# *செல்வம்*

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை எல்லாரும் செ வர் சிறப்பு. – என்று காட்டிய நம் வள்ளுவப் பெருந்தகை பொருள் சேர்ப்பதிலும் அற நெறியில்தான் சேர்க்க வேண்டும் எனக் காட்டுகிறார். மேலும்

**அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**
**தீதின்றி வந்த பொருள்.** என்றருளியிருக்கிறார்.

நம்முடைய நாயன்மார்கள் அவர்களது வாழ்க்கையில் " தேடிய மாடு, நீடு செல்வம் யாவும் தில்லை மன்றுள் ஆடும் பெருமான் அன்பர்களுக்கே ஆகும் " என்று நாடி வந்தவர்க்கு கூடிய மகிழ்ச்சியோடு குறைவறக் கொடுத்து தாங்கள் தேடிய செல்வத்தின் பயன் கொண்டார்கள். ஆக

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு.** என்பது உலகப் பொதுமறை.

# நாடும் நாமும் சிறக்க மழை பெறும் பதிகம்

திருப்பரா த்துறை
பண் : மேகராகக் குறிஞ்சி

திருஞானசம்பந்தர்
**1** ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நீறு சேர்வதொர் மேனியர் நேரிழை
கூறு சேர்வதொர் கோலமா ப்
பாறு சேர் தலைக்கையர் பரா த்துறை
ஆறுசேர் சடை அண்ணலே. 1

கந்த மாமலர்க் கொன்றை கமழ் சடை
வந்த பூம்புனல் வைத்தவர்
பைந்தண் மாதவி சூழ்ந்த பரா த்துறை
அந்தமில்ல அடிகளே. 2

வேதர் வேதமெல்லாம் முறையால் விரித்து
ஓத நின்ற ஒருவனார்
பாதி பெண் உரு ஆவர் பரா த்துறை
ஆதியாய அடிகளே. 3

தோலும் தம் அரையாடை சுடர்விடு
நூலும் தாம் அணி மார்பினர்
பாலும் நெ பயின்றாடு பரா த்துறை
ஆல நீழல் அடிகளே. 4

விரவி நீறு மெ பூசுவர் மேனிமேல்
இரவில் நின்றெரி ஆடுவர்
பரவினாரவர் வேதம் பரா த்துறை
அரவம் ஆர்த்த அடிகளே. 5

மறையும் ஓதுவர் மான் மறிக் கையினர்
கறைகொள் கண்டமுடையவர்
பறையும் சங்கும் ஒலிசெ  பரா  த்துறை
அறைய நின்ற அடிகளே. 6

விடையும் ஏறுவர் வெண்பொடிப் பூசுவர்
சடையிற் கங்கை தரித்தவர்
படைகொள் வெண் மழுவாளர் பரா  த்துறை
அடைய நின்ற அடிகளே. 7

தருக்கின் மிக்க தசக்கிரிவன் தனை
நெருக்கினார் விரலொன்றினால்
பருக்கினார் அவர் போலும் பரா  த்துறை
அரக்கன் தன்னை அடிகளே. 8

நாற்ற மாமலரானோடு மாலுமா  த்
தோற்றமும் அறியாதவர்
பாற்றினார் வினையான பரா  த்துறை
ஆற்றல் மிக்க அடிகளே. 9

திருவிலிச் சில தேரமண் ஆதர்கள்
உருவிலா உரை கொள்ளேலும்
பருவிலால் எயில் எ  து பரா  த்துறை
மருவினான் தனை வாழ்த்துமே. 10

செல்வம் மல்கிய செல்வர் பரா  த்துறைச்
செல்வர் மேற் சிதையாதன
செல்வன் ஞானசம்பந்தன செந்தமிழ்
செல்வமாம் இவை செப்பவே. 11

**இறைவி** : பசும்பொன் மயிலாம்பாள் – **இறைவர்** : பரா  த்துறை நாதர்

திருப்பறியலூர் வீரட்டம் திருஞானசம்பந்தர்
பண் : மேகராகக் குறிஞ்சி **1** ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கருத்தன் கடவுள் கனல் ஏந்தி ஆடும்
நிருத்தன் சடைமேல் நிரம்பா மதியன்
திருத்தம் உடையார் திருப்பறியலூரில்
விருத்தன் எனத் தகும் வீரட்டத்தானே. 1

மருந்தன் அமுதன் மயானத்துள் மைந்தன்
பெருந்தண் புனற்சென்னி வைத்த பெருமான்
திருந்து மறையோர் திருப்பறியலூரில்
விரிந்த மலர்ச்சோலை வீரட்டத்தானே. 2

குளிர்ந்தார் சடையன் கொடுஞ்சிலை விற் காமன்
விளிந்தான் அடங்க வீந்தெ தச் செற்றான்
தெளிந்தார் மறையோர் திருப்பறியலூரில்
மிளிர்ந்தார் மலர்ச்சோலை வீரட்டத்தானே. 3

பிறப்பு ஆதி இல்லான் பிறப்பார் பிறப்புச்
செறப் பாதி அந்தம் செலச் செ யும் தேசன்
சிறப் பாடுடையார் திருப்பறியலூரில்
விறற் பாரிடஞ் சூழ வீரட்டத்தானே. 4

கரிந்தார் இடுகாட்டில் ஆடுங் கபாலி
புரிந்தார் படுதம் புறங்காட்டில் ஆடும்
தெரிந்தார் மறையோர் திருப்பறியலூரில்
விரிந்தார் மலர்ச்சோலை வீரட்டத்தானே. 5

அரவுற்ற நாணா அனல் அம்பதாகச்
செருவுற்றவர் புரம் தீயெழச் செற்றான்
தெருவிற் கொடிசூழ் திருப்பறியலூரில்
வெருவுற்றவர் தொழும் வீரட்டத்தானே. 6

நரையார் விடையான் நலங்கொள் பெருமான்
அரையார் அரவம் அழகா அசைத்தான்
திரையார் புனல் சூழ் திருப்பறியலூரில்
விரையார் மலர்ச்சோலை வீரட்டத்தானே. 7

வளைக்கும் எயிற்றின் அரக்கன் வரைக்கீழ்
இளைக்கும் படிதானி ருந்தேழை அன்னம்
திளைக்கும் படுகர்த் திருப்பறியலூரில்
விளைக்கும் வயல் சூழ்ந்த வீரட்டத்தானே. 8

வளங்கொள் மலர்மேல் அயன் ஓத வண்ணன்
துளங்கும் மனத்தார் தொழத் தழலா நின்றான்
இளங் கொம்பனாளோடு இணைந்தும் பிணைந்தும்
விளங்கும் திருப்பறியல் வீரட்டத்தானே. 9

சடையன் பிறையன் சமண் சாக்கியரோடு
அடை அன்பிலாதான் அடியார் பெருமான்
உடையன் புலியின் உரிதோல் அரைமேல்
விடையன் திருப்பறியல் வீரட்டத்தானே. 10

நறு நீருகுங் காழி ஞானசம்பந்தன்
வெறுநீர்த் திருப்பறியல் வீரட்டத்தானைப்
பொறி நீடரவன் புனைபாடல் வல்லார்க்கு
அறும் நீடவலம் அறும் பிறப்புத்தானே. 11

**இறைவி** : இளங்கொம்பனையாள் – **இறைவர்** : தக்ஷபுரீஸ்வரர்

# தீராத வழக்குகள் தீரவும் வியாபரம், தொழில், விவசாயத்தில் வருவா பெருகவும் ஓதவேண்டிய பதிகம்

திருவீழிமிழலை — திருஞானசம்பந்தர்

பண் : குறிஞ்சி — 1 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏசலில்லையே ! 1

இறைவர் ஆயினீர் மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே ! 2

செ ய மேனியீர் மெ கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர் உ ய நல்குமே ! 3

நீறு பூசினீர் ஏறதேறினீர்
கூறுமிழலையீர் பேறும் அருளுமே ! 4

காமன் வேவவோர் தூமக் கண்ணினீர்
நாமம் மிழலையீர் சேமம் நல்குமே ! 5

பிணிகொள் சடையினீர் மணிகொள் மிடறினீர்
அணிகொள் மிழலையீர் பணிகொண்டருளுமே ! 6

மங்கை பங்கினீர் துங்க மிழலையீர்
கங்கை முடியினீர் சங்கை தவிர்மினே ! 7

அரக்கன் நெரிதர இரக்கம் எ தினீர்
பரக்கு மிழலையீர் கரக்கை தவிர்மினே ! 8

அயனும் மாலுமா முயலும் முடியினீர்
இயலும் மிழலையீர் பயனும் அருளுமே ! 7

பறிகொள் தலையினார் அறிவதறிகிலார்
வெறிகொள் மிழலையீர் பிறிவதரியதே ! 8

காழி மாநகர் வாழி சம்பந்தன்
வீழிமிழலை மேல் தாழும் மொழிகளே ! 9

திருச்சிற்றம்பலம்

## தேவைக்கேற்ற பணம் பெறும் பதிகம்

திருவாவடுதுறை திருஞானசம்பந்தர்
பண் : காந்தார பஞ்சமம் 3 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

இடரினும் தளரினும் எனதுறு நோ
தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே. 1

வாழினும் சாவினும் வருந்தினும் போ
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழிள மதி வைத்த புண்ணியனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே. 2

நனவினும் கனவினும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனல் எரி அனல்புல்கு கையவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே. 3

தும்மலோடு அருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாது என் நா
கைம்மல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதில் எரியெழ முனிந்தவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே. 4

கையது வீழினும் கழிவுறினும்
செ கழல் அடியலால் சிந்தைசெ யேன்
கொ யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே. 5

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தா உன் அடியலால் ஏத்தாது என் நா
ஐந்தலை அரவுகொண்டு அரைக்கசைத்த
சந்த வெண்பொடியணி சங்கரனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே. 6

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பா உன் அடியலால் அரற்றாது என் நா
ஒப்புடை ஒருவனை உருவழிய
அப்படி அழல் எழ விழித்தவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே. 7

பேரிடர் பெருகியோர் பிணிவரினும்
சீருடைக் கழல் அலால் சிந்தை செ யேன்
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே. 8

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மலர் அடியலால் உரையாது என் நாக்
கண்ணனும் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பு அரிதாயவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே. 9

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தா உன் அடியலால் அரற்றாது என் நா
புத்தருஞ் சமணரும் புறனுரைக்கப்
பத்தர்கட்கு அருள்செ து பயின்றவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே. 10

அலைபுனல் ஆவடுதுறை அமர்ந்த
இலை நுனை வேற்படை எம் இறையை
நலம்மிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயின நீங்கிப்போ விண்ணவர் வியனுலகம் 11
நிலையாக முன்னேறுவர் நிலமிசை நிலையிலரே.

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : ஒப்பிலா முலையம்மை – **இறைவர்** : மாசிலாமணீசுவரர்

# பொன்னும் பொருளும் பெற உதவும் பதிகம்
# ( கடன் சுமை நீங்க )

திருமுதுகுன்றம் சுந்தரமூர்த்தி நாயனார்
பண் : தக்கேசி 7 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மெ யை முற்றப் பொடிப் பூசி ஓர் நம்பி
வேதம் நான்கும் விரித்து ஓதி ஓர் நம்பி
கையில் ஓர் வெண் மழு ஏந்தி ஓர் நம்பி
கண்ணும் மூன்று உடையா ஒரு நம்பி
செ ய நம்பி சிறு செஞ்சடை நம்பி
திரிபுரம் தீயெழச் செற்றதோர் வில்லால்
எ த நம்பி என்னை ஆளுடை நம்பி
எழு பிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 1

திங்கள் நம்பி முடிமேல் அடியார் பால்
சிறந்த நம்பி பிறந்த உயிர்க்கெல்லாம்
அங்கண் நம்பியருள் மால் விசும்பு ஆளும்
அமரர் நம்பி குமரன் முதல் தேவர்
தங்கள் நம்பி தவத்துக்கொரு நம்பி
தாதை என்றுன் சரண் பணிந்து ஏத்தும்
எங்கள் நம்பி என்னை ஆளுடை நம்பி
எழு பிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 2

வருந்த அன்று மத யானை உரித்த
வழக்கு நம்பி முழக்குங் கடல் நஞ்சம்
அருந்தும் நம்பி அமரர்க்கு அமுது ஈந்த
அருளின் நம்பி பொருளாள் வரு நட்டம்

புரிந்த நம்பி புரிநூல் உடை நம்பி
பொழுதும் விண்ணும் முழுதும் பலவாகி
இருந்த நம்பி என்னை ஆளுடை நம்பி
எழு பிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 3

ஊறு நம்பி அமுதா உயிர்க்கெல்லாம்
உரிய நம்பி தெரியம் மறை அங்கம்
கூறு நம்பி முனிவர்க்கு அருங் கூற்றைக்
குமைத்த நம்பி குமையாப் புலன் ஐந்தும்
சீறு நம்பி திரு வெள்ளடை நம்பி
செங்கண் வெள்ளைச் செழுங் கோட்டு எருதென்றும்
ஏறு நம்பி என்னை ஆளுடை நம்பி
எழு பிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 4

குற்ற நம்பி குறுகார் எயில் மூன்றைக்
குலைத்த நம்பி சிலையாவரை கையில்
பற்று நம்பி பரமானந்த வெள்ளம்
பணிக்கும் நம்பி எனப் பாடுதல் அல்லால்
மற்று நம்பி உனக்கென் செய வல்லேன்
மதியிலேன் படு வெந்துயர் எல்லாம்
எற்று நம்பி என்னை ஆளுடை நம்பி
எழு பிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 5

அரித்த நம்பி அடி கை தொழுவார் நோ
ஆண்ட நம்பி முன்னை ஈண்டு உலகங்கள்
தெரித்த நம்பி ஒரு சேவுடை நம்பி
சில் பலிக்கென்று அகந்தோறு மெ வேடம்
தரித்த நம்பி சமயங்களின் நம்பி
தக்கன்தன் வேள்வி புக்கு அன்று இமையோரை
இரித்த நம்பி என்னை ஆளுடை நம்பி
எழு பிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 6

பின்னை நம்பும் புயத்தான் நெடு மாலும்
பிரமனும் என்றிருவர் நாடியும் காணா
உன்னை நம்பி ஒருவர்க்கு எ  தலாமே
உலகு நம்பி உரை செ  யும  தல்லால்
முன்னை நம்பி பின்னும் வார்சடை நம்பி
முழுதிவை இத்தனையும் தொகுத்து ஆண்டது
என்னை நம்பி எம்பிரானாய நம்பி
எழு பிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 7

சொல்லை நம்பி பொருளா  நின்ற நம்பி
தோற்றம் ஈறு முதலாகிய நம்பி
வல்லை நம்பி அடியார்க்கு அருள் செ  ய
வருந்தி நம்பி உனக்காட் செயகில்லார்
அல்லல் நம்பி படுகின்றதென் நாடி
அணங்கு ஒரு பாகம் வைத்து எண்கணம் போற்ற
இல்ல நம்பி இடு பிச்சைகொள் நம்பி
எழு பிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 8

காண்டு நம்பி கழல் சேவடி என்றும்
கலந்து உனைக் காதலித்து ஆட்செ  கிற்பாரை
ஆண்டு நம்பி அவர் முன்கதி சேர
அருளும் நம்பி குரு மாப்பிறை பாம்பைத்
தீண்டு நம்பி சென்னியில் கன்னி தங்கத்
திருத்து நம்பி பொ  ச் சமண் பொருளாகி
ஈண்டு நம்பி இமையோர் தொழு நம்பி
எழு பிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 9

கரக்கும் நம்பி கசியாதவர் தம்மைக்
கசிந்தவர்க்கு இம்மையோடு அம்மையில் இன்பம்
பெருக்கும் நம்பி பெருகக் கருத்தா...... 10

திருச்சிற்றம்பலம்

# பொன்னும் பொருளும் பெற உதவும் பதிகம்

திரு ஓணகாந்தன் தளி
பண் : இந்தளம்

சுந்தரமூர்த்தி நாயனார்
7 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நெ யும் பாலும் தயிரும் கொண்டு
நித்தல் பூசனை செ யலுற்றார்
கையிலொன்றும் காணமில்லைக்
கழலடி தொழுது உ யின் அல்லால்
ஐவர் கொண்டிங்கு ஆட்ட ஆடி
ஆழ் குழிப்பட்டு அழுந்துவேனுக்கு
உ யுமாறு ஒன்று அருளிச் செ யீர்
ஓணகாந்தன் தளியுளீரே. 1

திங்கள் தங்கு சடையின் மேலோர்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கையாளேல் வா திறவாள்
கணபதியேல் வயிறு தாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை
தேவியார் கோற்றட்டியாளார்
உங்களுக்கு ஆட்செ யமாட்டோம்
ஓணகாந்தன் தளியுளீரே. 2

பெற்ற போழ்தும் பெறாத போழ்தும்
பேணி உம் கழல் ஏத்துவார்கள்
மற்றோர் பற்றிலர் என்றிரங்கி
மதியுடையவர் செ கை செ யீர்

அற்ற போழ்தும் அலந்த போழ்தும்
ஆவற் காலத்து அடிகேள் உம்மை
ஒற்றி வைத்திங்கு உண்ணலாமோ
ஓணகாந்தன் தளியுளீரே. 3

வல்லதெல்லாம் சொல்லி உம்மை
வாழ்த்தினாலும் வா திறந்து ஒன்று
இல்லை என்னீர் உண்டும் என்னீர்
எம்மை ஆள்வான் இருப்பது என் நீர்
பல்லை உக்க படுதலையில்
பகல் எலாம் போ ப் பலிதிரிந்து இங்கு
ஒல்லை வாழ்க்கை ஒழிய மாட்டீர்
ஓணகாந்தன் தளியுளீரே. 4

கூடிக் கூடித் தொண்டர் தங்கள்
கொண்ட பாணி குறைபடாமே
ஆடிப்பாடி அழுது நெக்கங்கு
அன்புடையவர்க்கு இன்பம் ஓரீர்
தேடித் தேடித் திரிந்து எ த்தாலும்
சித்தம் என்பால் வைக்க மாட்டீர்
ஓடிப் போகீர் பற்றும் தாரீர்
ஓணகாந்தன் தளியுளீரே. 5

வாரிருங் குழல்வாள் நெடுங்கண்
மலைமகள் மது விம்மு கொன்றைத்
தாரிருந் தட மார்பு நீங்காத்
தையலாள் உலகு ய வைத்த
காரிரும் பொழிற் கச்சி மூதூர்க்
காமக் கோட்டம் உண்டாக நீர்போ
ஊரிடும் பிச்சை கொள்வது என்னே
ஓணகாந்தன் தளியுளீரே. 6

பொ ம்மையாலே போது போக்கிப்
புறத்தும் இல்லை அகத்தும் இல்லை
மெ ம்மை சொல்லி ஆளமாட்டீர்
மேலை நாள் ஒன்றிடவுங் கில்லீர்
எம்மைப் பெற்றால் ஏதும் வேண்டீர்
ஏதும் தாரீர் ஏதும் ஓதீர்
உம்மை அன்றே எம்பெருமான்
ஓணகாந்தன் தளியுளீரே. 7

வலையம் வைத்த கூற்றம் ஈவான்
வந்து நின்ற வார்த்தை கேட்டுச்
சிலை அமைத்த சிந்தையாலே
திருவடி தொழுது உ யின் அல்லால்
கலை அமைத்த காமச் செற்றக்
குரோத லோப மதவருடை
உலை அமைத்திங்கு ஒன்ற மாட்டேன்
ஓணகாந்தன் தளியுளீரே. 8

வாரமாகித் திருவடிக்குப்
பணிசெ தொண்டர் பெறுவதென்னே
ஆரம் பாம்பு வாழ்வது ஆரூர்
ஒற்றியூரேல் உம்மதன்று
தாரமாகக் கங்கையாளைச்
சடையில் வைத்த அடிகேள் உந்தம்
ஊரும் காடு உடையும் தோலே
ஓணகாந்தன் தளியுளீரே. 9

ஓவணம் மேல் எருதொன்று ஏறும்
ஓணகாந்தன் தளியுளார் தாம்
ஆவணஞ் செ து ஆளும் கொண்டு
அரை துகிலோடு பட்டு வீக்கிக்

கோவணமேற் கொண்ட வேடம்
கோவையாக ஆருரன் சொன்ன
பாவணத்தமிழ் பத்தும் வல்லார்
பறையும் தாம் செ த பாவம் தானே. 10

திருச்சிற்றம்பலம்

## பொன்னும் பொருளும் பெற உதவும் பதிகம்

திருப்புகலூர் சுந்தரமூர்த்தி நாயனார்
பண் – கொல்லி 7 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொ ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவில்லையே. 1

மிடுக்கிலாதானை வீமனே விறல்
விசயனே வில்லுக்கு இவனென்று
கொடுக்கிலாதானைப் பாரியே என்று
கூறினுங் கொடுப்பார் இலை
பொடிக்கொள் மேனி எம் புண்ணியன் புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அடுக்கு மேல் அமர் உலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவில்லையே. 2

காணியேற் பெரிதுடையனே கற்று
நல்லனே சுற்றம் நல் கிளை
பேணியே விருந்தோம்புமே என்று
பேசினுங் கொடுப்பார் இலை

பூணி பூண்டுழப் புட் சிலம்புந்தண்
புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆணியா அமர் உலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவில்லையே. 3

நரைகள் போந்து மெ தளர்ந்து மூத்துடல்
நடுங்கி நிற்கும் இக்கிழவனை
வரைகள் போல் திரள் தோளனேயென்று
வாழ்த்தினுங் கொடுப்பார் இலை
புரை வெள்ளேறுடைப் புண்ணியன் புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அரையனா அமர் உலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவில்லையே. 4

வஞ்ச நெஞ்சனை மாசழக்கனைப்
பாவியை வழக்கில்லியைப்
பஞ்ச துட்டனைச் சாதுவேயென்று
பாடினுங் கொடுப்பார் இலை
பொன்செ செஞ்சடைப் புண்ணியன் புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
நெஞ்சில் நோயறுத்து உஞ்சு போவதற்கு
யாதும் ஐயுறவில்லையே. 5

நலம் இலாதானை நல்லனே என்று
நரைத்த மாந்தரை இளையனே
குலம் இலாதானைக் குலவனே என்று
கூறினுங் கொடுப்பார் இலை
புலமெலாம் வெறி கமழும் பூம்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அலமராது அமர் உலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவில்லையே. 6

நோயனைத் தடந் தோளனேயென்று
        நொ  ய மாந்தரை விழுமிய
தாயன்றோ புலவோர்க்கெலாம் என்று
        சாற்றினுங் கொடுப்பார் இலை
போயுழன்று கண் குழியாதே எந்தை
        புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆயம் இன்றிப்போ   அண்டம் ஆள்வதற்கு
        யாதும் ஐயுறவில்லையே. 7

எள்விழுந்த இடம் பார்க்கும் ஆகிலும்
        ஈக்கும் ஈகிலன் ஆகிலும்
வள்ளலே எங்கள் மைந்தனே என்று
        வாழ்த்தினுங் கொடுப்பார் இலை
புள்ளெலாஞ் சென்று சேரும் பூம்புக
        லூரைப் பாடுமின் புலவீர்காள்
அள்ளல் பட்டு அழுந்தாது போவதற்கு
        யாதும் ஐயுறவில்லையே. 8

கற்றிலாதானைக் கற்று நல்லனே
        காமதேவனை ஒக்குமே
முற்றிலாதானை முற்றனே என்று
        மொழியினுங் கொடுப்பார் இலை
பொத்தில் ஆந்தைகள் பாட்டறாப் புக
        லூரைப் பாடுமின் புலவீர்காள்
அத்தனா   அமர் உலகம் ஆள்வதற்கு
        யாதும் ஐயுறவில்லையே. 9

தையலாருக்கு ஓர் காமனேயென்றும்
        சால நல அழகு உடையனே
கையுலாவிய வேலனே என்று
        கழறினுங் கொடுப்பார் இலை

பொ  கை வாவியின் மேதி பா  புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
ஐயனா  அமர் உலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவில்லையே. 9

செறுவினிற் செழுங் கமலம் ஓங்குதென்
புகலூர் மேவிய செல்வனை
நறவும் பூம்பொழில் நாவலூரன்
வனப்பகை அப்பன் சடையன்தன்
சிறுவன் வன்தொண்டன் ஊரன் பாடிய
பாடல் பத்திவை வல்லவர்
அறவனார் அடி சென்று சேர்வதற்கு
யாதும் ஐயுறவில்லையே. 10

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : கருந்தார் குழலி – **இறைவர்** : அக்னிபுரீஸ்வரார்



# பொன்னும் பொருளும் பெற உதவும் பதிகம்

திருநாகைக்காரோணம் சுந்தரமூர்த்தி நாயனார்
பண் : கொல்லிக் கௌாவணம் 7 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பத்தூர் புக்கிரந்துண்டு பல பதிகம் பாடிப்
பாவையரைக் கிறி பேசிப் படிறாடித் திரிவீர்
செத்தார் தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக்கொரு நாள் இரங்கீர்
முத்தாரம் இலங்கி மிளிர் மணிவயிரக் கோவை
அவை பூணத் தந்தருளி மெ க்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும்
கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே. 1

வேம்பினொடு தீங்கரும்பு விரவி எனைத் தீர்த்தீர்
விருத்தி நான் உமை வேண்டத் துருத்தி புக்கங் கிருந்தீர்
பாம்பினொடு படர்சடைகள் அவைகாட்டி வெருட்டிப்
பகட்ட நான் ஒட்டுவனோ பலகாலம் உழன்றேன்
சேம்பினொடு செங்கழுநீர் தண்கிடங்கில் திகழும்
திருவா ர் புக்கிருந்த தீவண்ணர் நீரே
காம்பினொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும்
கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே. 2

பூண்பதோர் இள ஆமை பொருவிடையொன்று ஏறிப்
பொல்லாத வேடங்கொண்டு எல்லாரும் காணப்
பாண்பேசிப் படுதலையிற் பலிகொள்கை தவிரீர்
பாம்பினொடு படர்சடைமேல் மதிவைத்த பண்பீர்

வீண்பேசி மடவார்கை வெள்வளைகள் கொண்டால்
வெற்பரையன் மடப்பாவை பொறுக்குமோ சொல்லீர்
காண்பினிய மணிமாடம் நிறைந்த நெடுவீதிக்
கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே. 3

விட்டதோர் சடைதாழ வீணை விடங் காக
வீதி விடை ஏறுவீர் விண் அடிமை உகந்தீர்
துட்டராயின பே கள் சூழ நடம் ஆடிச்
சுந்தரரா த் தூமதியஞ் சூடுவது சுவண்டே
வட்டவார் குழல் மடவார் தம்மை மயல் செ தல்
மாதவமோ மாதிமையோ வாட்டம் எலாந் தீரக்
கட்டியம் எமக்கு ஈவதுதான் எப்போது சொல்லீர்
கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே. 4

மிண்டாடித் திரிதந்து வெறுப்பனவே செ து
வினைக்கேடு பலபேசி வேண்டியவா திரிவீர்
தொண்டாடித் திரிவேனைத் தொழும்புதலைக் கேற்றும்
சுந்தரனே கந்தமுதல் ஆடை ஆபரணம்
பண்டாரத்தே எனக்குப் பணித்தருள வேண்டும்
பண்டுதான் பிரமாணம் ஒன்றுண்டே நும்மைக்
கண்டார்க்குங் காண்பரிதா க் கனலாகி நிமிர்ந்தீர்
கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே. 5

இலவவிதழ் வா உமையோடு எருதேறிப் பூதம்
இசைபாட இடுபிச்சைக் கெச்சுச்சும் போது
பலவகம்புக் குழிதர்வீர் பட்டோடு சாந்தம்
பணித்தருளா திருக்கின்ற பரிசென்ன படிறோ
உலவு திரைக் கடல் நஞ்சை அன்றமரர் வேண்ட
உண்டருளிச் செ தது உமக்கிருக்கொண்ணாதிடவே
கலவமயில் இயலவர்கள் நடமாடுஞ் செல்வக்
கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே. 6

தூசுடைய அகலல்குல் தூமொழியாள் ஊடல்
        தொலையாத காலத்தோர் சொற்பாடா வந்து
தேசுடைய இலங்கையர் கோன் வரை எடுக்க அடர்த்துத்
        திப்பிய கீதம் பாடத் தேரொடு வாள் கொடுத்தீர்
நேசமுடை அடியவர்கள் வருந்தாமை அருந்த
        நிறை மறையோர் உறை வீழிமிழலை தனில் நித்தல்
காசருளிச் செ தீர் இன்றெனக்கருள வேண்டும்
        கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே. 7

மாற்றமேல் ஒன்றுரையீர் வாளாநீர் இருந்தீர்
        வாழ்விப்பன் என ஆண்டீர் வழியடியேன் உமக்கு
ஆற்றவேல் திருவுடையீர் நல்கூர்ந்தீர் அல்லீர்
        அணியா ர் புகப்பெ த அரு நெதியம் அதனில்
தோற்றமிகு முக்கூற்றில் ஒரு கூறு வேண்டும்
        தாரீரேல் ஒருபொழுதும் அடி எடுக்கல் ஒட்டேன்
காற்றனைய கடும்பரிமா ஏறுவது வேண்டும்
        கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே. 8

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி
        மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலி உன் பெருவயிறன் கணபதி ஒன்றறியான்
        எம்பெருமான் இது தகவோ இயம்பி அருள்செ யீர்
திண்ணென என் உடல் விருத்தி தாரீரே ஆகில்
        திருமேனி வருந்தவே வளைக்கின்றேன் நாளைக்
கண்ணறையன் கொடும்பாடன் என்றுரைக்க வேண்டா
        கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே. 9

மறி ஏறுகரதலத்தீர் மாதிமையேல் உடையீர்
        மாநிதியம் தருவன் என்று வல்லீரா ஆண்டீர்
கிறிபேசிக் கீழ்வேளூர் புக்கிருந்தீர் அடிகேள்
        கிறியும் மாற் படுவேனோ திருவாணை உண்டேல்

பொறிவிரவு நற்புகர்கொள் பொற்சுரிகை மேலோர்
பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும்
கறிவிரவு நெ சோறு முப்போதும் வேண்டும்
கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே. 10

பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே மற்றாரை உடையேன்
உண் மயத்த உமக்கடியேன் குறைதீர்க்க வேண்டும்
ஒளிமுத்தம் பூணாரம் ஒண்பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டும்
கடல் நாகைக் காரோணம் மேவியிருந் தீரென்று
அண்மயத்தால் அணி நாவலா ரன் சொன்ன
அருந்தமிழ்கள் இவை வல்லார் அமருலகாள்பவரே. 11

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : நீலாயதாக்ஷி – **இறைவர்** : காயாரோகணேஸ்வரர்



# தொடங்கும் செயல் இனிது நிறைவு பெற ஓதவேண்டிய பதிகம்

திரு ஆலவா ( மதுரை ) திருஞானசம்பந்தர்
பண் : பழம்பஞ்சுரம் 3 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வேத வேள்வியை நிந்தனை செ துழல்
ஆதம் இல்லி அமணொடு தேரரை
வாதில் வென்று அழிக்கத் திருவுள்ளமே
பாதி மாதுடனாய பரமனே !
ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 1

வைதிகத்தின் வழியொழுகாதவக்
கைதவம் உடைக் கார் அமண் தேரரை
எ த வாதுசெயத் திருவுள்ளமே
மைதிகழ் தரு மாமணி கண்டனே !
ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 2

மறைவழக்கமிலாத மாபாவிகள்
பறி தலைக்கயைர் பாயுடுப்பார்களை
முறிய வாது செயத் திருவுள்ளமே
மறியுலாங் கையில் மா மழுவாளனே !
ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 3

அறுத்த அங்கம் ஆறு ஆயின நீர்மையைக்
கறுத்த வாழ் அமண் கையர்கள் தம்மொடும்
செறுத்து வாது செயத் திருவுள்ளமே
முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே !
ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 4

அந்தணாளர் புரியும் அருமறை
சிந்தை செ யா அருகர் திறங்களைச்
சிந்த வாது செயத் திருவுள்ளமே
வெந்த நீறதணியும் விகிர்தனே !
ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 5

வேட்டு வேள்வி செயும் பொருளை விளி
மூட்டு சிந்தை முருட்டமண் குண்டரை
ஓட்டி வாது செயத் திருவுள்ளமே
காட்டிலானை உரித்த எங் கள்வனே !
ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 6

அழலது ஓம்பும் அருமறையோர் திறம்
விழலது என்னும் அருகர் திறத்திறம்
கழல வாது செயத் திருவுள்ளமே
தழல் இலங்கு திருவுருச் சைவனே !
ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 7

நீற்று மேனியராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்
தேற்றி வாது செயத் திருவுள்ளமே
ஆற்ற வாள் அரக்கற்கும் அருளினா !
ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 8

நீலமேனி அமணர் திறத்து நின்
சீலம் வாது செயத் திருவுள்ளமே
மாலும் நான்முகனும் காண்பரியதோர்
கோல மேனியதாகிய குன்றமே !
ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 9

அன்று முப்புரம் செற்ற அழகநின்
துன்று பொற்கழல் பேணா அருகரைத்
தென்ற வாது செயத் திருவுள்ளமே
கன்று சாக்கியர் காணாத் தலைவனே !
ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 10

கூடல் ஆலவா க் கோனை விடைகொண்டு
வாடல் மேனி அமணரை வாட்டிட
மாடக் காழிச் சம்பந்தன் மதித்த இப்
பாடல் வல்லவர் பாக்கியவாளரே ! 11

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : மீனாட்சி அம்மை — **இறைவர்** : சொக்கநாதர்

## பகைவரை அடக்கி வெற்றியை நல்கும் பதிகம்

திருவாசகம் மாணிக்கவாசகர்
திருவுந்தியார் **8 ஆம் திருமுறை**

திருச்சிற்றம்பலம்

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன் வெந்தவாறு உந்தீபற. 1

ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற. 2

தச்சு விடுத்தலும் தாமடியிட்டலும்
அச்சு முறிந்ததென்று உந்தீபற
அழிந்தன முப்புரம் உந்தீபற. 3

உ யவல்லாரொரு மூவரைக் காவல்கொண்டு
எ ய வல்லானுக்கே உந்தீபற
இளமுலை பங்கன் என்று உந்தீபற. 4

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடியவா பாடி உந்தீபற
உருத்திர நாதனுக்கு உந்தீபற. 5

ஆவா திருமால் அவிப்பாகங் கொண்டன்று
சாவாதிருந்தான் என்று உந்தீபற
சதுர்முகன் தாதை என்று உந்தீபற. 6

வெ யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தான் என்று உந்தீபற
கலங்கிற்று வேள்வி என்று உந்தீபற. 7

பார்ப்பதியைப் பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பது என்னேடி உந்தீபற
பணைமுலை பாகனுக்கு உந்தீபற. 8

புரந்தரனார் ஒரு பூங்குயிலாகி
மரந்தனில் ஏறினார் உந்தீபற
வானவர் கோன் என்றே உந்தீபற. 9

வெஞ்சின வேள்வி வியாத்திரனார் தலை
துஞ்சினவா பாடி உந்தீபற
தொடர்ந்த பிறப்பற உந்தீபற. 10

ஆட்டின் தலையை விதிக்குத் தலையாக
கூட்டியவா பாடி உந்தீபற
கொங்கை குலுங்க நின்று உந்தீபற. 11

உண்ணப் புகுந்த பகன் ஒளித்து ஓடாமே
கண்ணைப் பறித்தவாறு உந்தீபற
கருக்கெட நாமெலாம் உந்தீபற. 12

நாமகள் நாசி சிரம் பிரமன் படச்
சோமன் முகம் நெரித்து உந்தீபற
தொல்லை வினைகெட உந்தீபற. 13

நான்மறையோனும் மகத்து இயமான் படப்
போம்வழி தேடுமாறு உந்தீபற
புரந்தரன் வேள்வியில் உந்தீபற. 14

சூரியனார் தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவாறு உந்தீபற
மயங்கிற்று வேள்வியென்று உந்தீபற. 15

தக்கனார் அன்றே தலையிழந்தார் தக்கன்
மக்களைச் சூழ நின்று உந்தீபற
மடிந்தது வேள்வி என்று உந்தீபற. 16

பாலகனார்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீபற
குமரன்தன் தாதைக்கே உந்தீபற. 17

நல்ல மலரின்மேல் நான்முகனார் தலை
ஒல்லை அரிந்ததென்று உந்தீபற
உகிரால் அரிந்ததென்று உந்தீபற. 18

தேரை நிறுத்தி மலையெடுத்தான் சிரம்
ஈரைந்தும் இற்றவாறு உந்தீபற
இருபதும் இற்றதென்று உந்தீபற. 19

ஏகாசம் இட்ட இருடிகள் போகமால்
ஆகாசம் காவலென்று உந்தீபற
அதற்கப்பாலும் காவலென்று உந்தீபற. 20

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : சிவகாம சுந்தரி அம்மை
**இறைவர்** : ஆனந்தமா நடராசாப் பெருமான்



# என்றும் உணவு கிடைக்கச் செ யும் பதிகம்

சிதம்பரம் திருநாவுக்கரசர்
திருக்குறுந்தொகை 5 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என் அன்பு ஆலிக்குமாறு கண்டு இன்புற
இன்னம் பாலிக்குமோ இப் பிறவியே. 1

அரும்பற்றப்பட ஆ மலர் கொண்டு நீர்
சுரும்பற்றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற்றச் சிலைக் காமனைக் கா ந்தவன்
பெரும்பற்றப் புலியூர் எம்பிரானையே. 2

அரிச்சுற்ற வினையால் அடர்ப்புண்டு நீர்
எரிச்சுற்றக் கிடந்தாரென்று அயலவர்
சிரிச்சுற்றுப் பல பேசப் படா முனம்
திருச்சிற்றம்பலம் சென்றடைந்து உ ம்மினே. 3

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே. 4

ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம்
நான் நிலாவி யிருப்பன் என் நாதனைத்
தேன் நிலாவிய சிற்றம் பலவனார்
வான் நிலாவி யிருக்கவும் வைப்பரே. 5

சிட்டவர் வானவர் சென்று வரங்கொளும்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம்பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லும் அச்
சிட்டர் பால் அணுகான் செறு காலனே. 6

ஒருத்தனார் உலகங்கட்கு ஒருசுடர்
திருத்தனார் தில்லைச் சிற்றம்பலவனார்
விருத்தனார் இளையார் விடம் உண்ட எம்
அருத்தனார் அடியாரை அறிவரே. 7

விண் நிறைந்ததோர் வெவ்வழலின் உரு
எண் நிறைந்த இருவர்க்கு அறிவொணாக்
கண் நிறைந்த கடிபொழில் அம்பலத்து
உள் நிறைந்து நின்று ஆடும் ஒருவனே. 8

வில்லை வட்டப்பட வாங்கி அவுணர்தம்
வல்லை வட்டம் மதில் மூன்றுடன் மா  த்தவன்
தில்லை வட்டந் திசை கைதொழுவார் வினை
ஒல்லை வட்டங் கடந்தோடுதல் உண்மையே. 9

நாடி நாரணன் நான்முகன் என்றிவர்
தேடியுந் திரிந்துங் காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை அம்பலத்து
ஆடி பாதம் என் நெஞ்சுள் இருக்கவே. 10

மதுர வா  மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம்பலவன் திருமலை
அதிர ஆர்த்தெடுத்தான் முடிபத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந்து உ  ம்மினே. 11

**இறைவி** : சிவகாம சுந்தரி அம்மை – **இறைவர்** : ஆனந்தமா நடராசப் பெருமான்

## வையகந் துயர் தீர – மெ  நெறி தெளிய

திருப்பாசுரம் திருஞானசம்பந்தர்
பண் : கௌசீகம் 3 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே. 1

அரிய காட்சியரா  த் தமது அங்கைசேர்
எரியர் ஏறுகந்து ஏறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கையர் ஆயினும்
பெரியர் ஆர் அறிவார் அவர் பெற்றியே. 2

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தியா எழுவார் வினை தீர்ப்பரால்
எந்தையார் அவர் எவ்வகையார் கொலோ. 3

ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை கிளக்க வேண்டா
கோட்பாலனவும் வினையும் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலை நின்றிவை கேட்கத் தக்கார். 4

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம் பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே. 5

ஆடும் எனவும் அருங் கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும் புகழல்லது பாவம் நீங்கக்

கேடும் பிறப்பும் அறுக்கும் எனக் கேட்டீராகில்
நாடும் திறந்தார்க்கு அருளல்லது நாட்டலாமே. 6

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால் கொண்டங்கு ஆட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிவார் சொலக்கேட்டும் அன்றே. 7

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை உலகத்தவர் ஏத்தல் செ யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே. 8

பாராழி வட்டம் பகையால் நலிந்தாட்ட ஆடிப்
பேராழியானது இடர் கண்டு அருள் செ தல் பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடம் கொண்டவர்க்குப்
போராழி ஈந்த புகழும் புகழுற்றது அன்றே. 9

மாலா யவனும் மறைவல்ல நான்முகனும்
பாலாய தேவர் பகரில் அமுதூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க்கு அரிதா எழுந்த
ஆலாலம் உண்டங்கு அமரர்க்கு அருள் செ ததாமே. 10

அற்றன்றி அந்தண் மதுரைத் தொகை ஆக்கினானும்
தெற்றென்று தெ வம் தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர் வினூரவும் பண்பு நோக்கில்
பெற்றொன்று உயர்த்த பெருமான் பெருமானும் அன்றே. 11

நல்லார்கள் சேர்புகலி ஞானசம்பந்தன் நல்ல
எல்லார்களும் பரவும் ஈசனை ஏத்து பாடல்
பல்லார்களும் மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோர் உலகாளவும் வல்லரன்றே. 12

திருச்சிற்றம்பலம்

# களவு போன பொருட்கள் மீண்டும் கிடைக்க

திருமுருகன் பூண்டி — சுந்தரமூர்த்தி நாயனார்
பண் : பழம்பஞ்சுரம் — 7 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்
விரவ லாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண்டு
ஆறலைக்கும் இடம்
முடுகு நாறிய வடுகர் வாழ்முருகன்
பூண்டி மாநகர்வா
இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும்
எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரான் நீரே. 1

வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர்
விரவலாமை சொல்லிக்
கல்லினால் எறிந்திட்டும் மோதியும்
கூறை கொள்ளும் இடம்
முல்லைத் தாது மணங்கமழ் முருகன்
பூண்டி மாநகர்வா
எல்லைக் காப்பது ஒன்று இல்லையாகில் நீர்
எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரான் நீரே. 2

பசுக்களே கொன்று தின்று பாவிகள்
பாவம் ஒன்றறியார்
உசிர்க்கொலை பல நேர்ந்து நாள்தொறும்
கூறை கொள்ளும் இடம்
முசுக்கள் போற் பல வேடர்வாழ் முருகன்
பூண்டி மாநகர்வா
இசுக்கழியப் பயிக்கங் கொண்டு நீர்
எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரான் நீரே. 3

பீறற் கூறை உடுத்தொர் பத்திரங்
கட்டி வெட்டனரா ச்
சூறைப் பங்கிய ராகி நாள்தொறும்
கூறை கொள்ளும் இடம்
மோறை வேடுவர் கூடிவாழ் முருகன்
பூண்டி மாநகர்வா
ஏறு காலிற்றது இல்லையா விடில்
எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரான் நீரே. 4

தயங்கு தோலை உடுத்த சங்கர
சாம வேதம் ஓதி
மயங்கி ஊரிடு பிச்சை கொண்டுணும்
மார்க்கம் ஒன்றறியீர்
முயங்கு பூண்முலை மங்கை யாளொடு முருகன்
பூண்டி மாநகர்வா
இயங்கவும் மிடுக்குடையரா விடில்
எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரான் நீரே. 5

விட்டிசைப்பன கொக்கரை கொடு
கொட்டித் தத்தளகம்
கொட்டிப் பாடுமித் துந்துமியொடு
குடமுழா நீர் மகிழ்வீர்
மொட்டலர்ந்து மணங்கமழ் முருகன்
பூண்டி மாநகர்வா
இட்ட பிச்சை கொண்டு உண்பதாகில் நீர்
எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரான் நீரே. 6

வேதம் ஓதி வெண்ணீறு பூசி வெண்
கோவணம் தற்று அயலே
ஓதம் மேவிய ஒற்றியூரையும்
முத்தி நீர் மகிழ்வீர்

மோதி வேடுவர் கூறைகொள்ளும் முருகன்
பூண்டி மாநகர்வாஃ
ஏது காரணம் ஏது காவல்கொண்டு
எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரான் நீரே. 7

படவரவு நுண்ணேரிடைப் பணைத்
தோள்வரி நெடுங்கண்
மடவரல் உமை நங்கை தன்னையோர்
பாகம் வைத்துகந்தீர்
முடவர் அல்லீர் இடரிலீர் முருகன்
பூண்டி மாநகர்வாஃ
இடவம் ஏறியும் போவதாகில் நீர்
எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரான் நீரே. 8

சாந்தமாக வெண்ணீறு பூசி வெண்
பல் தலை கலனா
வேஃந்த வெண்பிறைக் கண்ணிதன்னை ஓர்
பாகம் வைத்துகந்தீர்
மோந்தையோடு முழக்கறா முருகன்
பூண்டி மாநகர்வாஃ
ஏந்து பூண்முலை மங்கை தன்னொடும்
எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரான் நீரே. 9

முந்தி வானவர் தாந்தொழும் முருகன்
பூண்டி மா நகர்வாஃப்
பந்தணை விரற் பாவை தன்னையோர்
பாகம் வைத்தவனைச்
சிந்தையிற் சிவ தொண்டனூரன்
உரைத்தன பத்துங்கொண்டு
எந்தம் அடிகளை ஏத்துவார் இடர்
ஒன்றும் தாம் இலரே. 10

திருச்சிற்றம்பலம்

# பொன்னும் பொருளும் பெற உதவும் பதிகம்

திருமுதுகுன்றம் சுந்தரமூர்த்தி நாயனார்
பண் : நட்டராகம் 7 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பொன்செஃத மேனியினீர்
புலித்தோலை அரைக்கசைத்தீர்
முன்செஃத மூவெயிலும்
எரித்தீர் முதுகுன்றமர்ந்தீர்
மின்செஃத நுண்ணிடையாள்
பரவை இவள் தன்முகப்பே
என்செஃதவாறு அடிகேள்
அடியேன் இட்டளங் கெடவே. 1

உம்பரும் வானவரும்
உடனே நிற்கவே எனக்குச்
செம்பொனைத் தந்தருளித்
திகழும் முதுகுன்றமர்ந்தீர்
வம்பமருங் குழலாள்
பரவை இவள் வாடுகின்றாள்
எம்பெருமான் அருளீர்
அடியேன் இட்டளங் கெடவே. 2

பத்தா பத்தர்களுக்கு
அருள் செஃயும் பரம்பரனே
முத்தா முக்கணனே
முதுகுன்றம் அமர்ந்தவனே

மைத்தாருந் தடங்கண்
        பரவை இவள் வாடாமே
அத்தா தந்தருளாஃ
        அடியேன் இட்டளங் கெடவே. 3

மங்கையோர் கூறமர்ந்தீர்
        மறை நான்கும் விரித்து உகந்தீர்
திங்கள் சடைக்கணிந்தீர்
        திகழும் முதுகுன்றமர்ந்தீர்
கொங்கை நல்லாள் பரவை
        குணங்கொண்டிருந்தாள் முகப்பே
அங்கணனே அருளாஃ
        அடியேன் இட்டளங் கெடவே. 4

மையாரும் மிடற்றாஃ
        மருவார் புரம் மூன்றெரித்த
செஃயார் மேனியனே
        திகழும் முதுகுன்றமர்ந்தாஃ
பையாரும் அரவோர்
        அல்குலாள் இவள் வாடுகின்றாள்
ஐயா தந்தருளாஃ
        அடியேன் இட்டளங் கெடவே. 5

நெடியான் நான்முகனும்
        இரவியொடும் இந்திரனும்
முடியால் வந்திறைஞ்ச
        முதுகுன்றம் அமர்ந்தவனே
படியாரும் இயலாள்
        பரவை இவள் தன்முகப்பே
அடிகேள் தந்தருளாஃ
        அடியேன் இட்டளங் கெடவே. 6

கொந்தணவும் பொழில்சூழ்
குளிர்மாமதில் மாளிகை மேல்
வந்தணவும் மதிசேர்
சடைமா முதுகுன்றுடையாய்
பந்தணவும் விரலாள்
பரவை இவள் தன்முகப்பே
அந்தணனே அருளாய்
அடியேன் இட்டளங் கெடவே. 7

பரசாருங் கரவா
பதினெண் கணமுஞ் சூழ
முரசார் வந்ததிர
முதுகுன்றம் அமர்ந்தவனே
விரை சேருங் குழலாள்
பரவை இவள் தன்முகப்பே
அரசே தந்தருளாய்
அடியேன் இட்டளங் கெடவே. 8

ஏத்தாது இருந்தறியேன்
இமையோர் தனி நாயகனே
மூத்தாய் உலகுக்கெல்லாம்
முதுகுன்றம் அமர்ந்தவனே
பூத்தாரும் குழலாள்
பரவை இவள் தன்முகப்பே
கூத்தா தந்தருளாய்
கொடியேன் இட்டளங் கெடவே. 9

பிறையாருஞ் சடை எம்
பெருமான் அருளாய் என்று
முறையால் வந்தமரர்
வணங்கும் முதுகுன்றர் தம்மை

மறையார் தங்குரிசில்
வயல் நாவலா ரன் சொன்ன
இறையார் பாடல் வல்லார்க்கு
எளிதாம் சிவலோகமதே. 10

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : பெரிய நாயகி – **இறைவர்** : பழமலை நாதர்





# திருமணம்

திருமணம் என்பது ஓர் ஆடவன் செல்வம் சேமித்த பிறகுதான் செஃது கொள்ள வேண்டும் என்பது தொல்காப்பியப்படி தமிழன் கண்ட நெறியாகும்.

துறவிகளுக்கும், சுற்றத்தாருக்கும், ஒருவரும் இன்றி இரந்து வாழ்பவருக்கும் இல்வாழ்க்கை வாழ்பவனே துணையாக இருக்க முடியும் என்பது உலகப் பொதுமறை. சிவனடியார்களை வணங்கி விருந்தளித்தல் மூலம் வீடு பேறு பெற்றவர்கள் பல நாயன்மார்கள் என்பது வெள்ளிடை மலை.

தென்புலத்தாரைப் போற்றுதல், தேவரை வணங்குதல், விருந்தினரை உபசரித்தல், சுற்றத்தாருக்கு உதவுதல், தன்னைப் பேணுதல் என்னும் ஐந்து நெறியையும் வழுவாமல் செஃயும் திறன் இல்வாழ்க்கையை மேற்கொள்பவர்க்கே உரியதாம்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு.

# திருமணம் கூட ஓதவேண்டிய பதிகம்

திருவேதிகுடி
பண் : சாதாரி

திருஞானசம்பந்தர்
**3** ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நீறுவரி ஆடரவொடு ஆமைமன என்புநிரை பூண்பர் இடபம்
ஏறுவரி யாவரும் இறைஞ்சுகழல் ஆதியர் இருந்த இடமாம்
தாறுவிரி பூகமலி வாழைவிரை நாற இணைவாளை மடுவில்
வேறுபிரியாது விளையாட வளமாரும் வயல் வேதிகுடியே. 1

சொற்பிரிவிலாத மறை பாடி நடமாடுவர் தொல் ஆனை உரிவை
மற்புரி புயத்து இனிது மேவுவர் எந்நாளும் வளர் வானவர் தொழத்
துற்பரிய நஞ்சமுதமாக முன் அயின்றவரியன்ற தொகுசீர்
வெற்பரையன் மங்கையொரு பங்கர் நகரென்பர் திருவேதிகுடியே. 2

போழுமதி பூணரவு கொன்றைமலர் துன்றுசடை வென்றிபுகமேல்
வாழுநதி தாழும் அருளாளர் இருளார் மிடறர் மாதரிமையோர்
சூழும் இரவாளர் திருமார்பில் விரிநூலர் வரிதோலர் உடைமேல்
வேழவுரி போர்வையினர் மேவுபதி என்பர் திருவேதிகுடியே. 3

காடர் கரிகாலர் கனல் கையர் அனல் மெஃயர் உடல் செஃயர் செவியில்
தோடர் தெரிகீளர் சரிகோவணவர் ஆவணவர் தொல்லைநகர்தான்
பாடலுடையார்கள் அடியார்கள் மலரோடு புனல் கொண்டு பணிவார்
வேடமொளியான பொடி பூசி இசை மேவு திருவேதிகுடியே. 4

சொக்கர் துணை மிக்க எயில் உக்கறமுனிந்து தொழுமூவர் மகிழத்
தக்க அருள் பக்கமுற வைத்த அரனார் இனிது தங்கு நகர்தான்
கொக்கரவம் உற்றபொழில் வெற்றி நிழல் பற்றி வரி வண்டிசை குலாம்
மிக்க அமரர் மெச்சியினிது அச்சம் இடர் போக நல்கு வேதிகுடியே. 5

செஃய திருமேனி மிசை வெண்பொடியணிந்து கருமானுரிவை போர்த்து
ஐயமிடும் என்று மட மங்கையொடகந் திரியும் அண்ணலிடமாம்
வையம் விலை மாறிடினும் ஏறுபுகழ் மிக்கு இழிவிலாத வகையார்
வெஃயமொழி தண்புலவருக்கு உரை செயாத அவர் வேதிகுடியே. 6

உன்னி இருபோதும் அடிபேணும் அடியார்தம் இடர் ஒல்க அருளித்
துன்னியொரு நால்வருடன் ஆல்நிழல் இருந்த துணைவன் தன் இடமாம்
கன்னியரொடு ஆடவர்கள் மாமணம் விரும்பியரு மங்கலம் மிக
மின்னியலும் நுண்ணிடை நன் மங்கையர் இயற்று பதி வேதிகுடியே.

உரக் கரம் நெருப்பெழ நெருக்கிவரை பற்றிய ஒருத்தன் முடிதோள்
அரக்கனை அடர்த்தவன் இசைக்கினிது நல்கியருள் அங்கணனிடம்
முருக்கிதழ் மடக்கொடி மடந்தையரும் ஆடவரும் மொஃத்த கலவை
விரைக்குழல் மிகக் கமழ விண்ணிசை உலாவு திருவேதிகுடியே. 8

பூவின்மிசை அந்தணனொடு ஆழிபொலி அங்கையனும் நேட எரியாஃத்
தேவும் இவரல்லர் இனியாவரென நின்று திகழ்கின்றவர் இடம்
பாவலர்கள் ஓசையியல் கேள்வி அது அறாத கொடையாளர் பயில்வாம்
மேவரிய செல்வநெடு மாடம் வளர் வீதி நிகழ் வேதிகுடியே. 9

வஞ்சமணர் தேரர் மதிகேடர் தம் மனத்தறிவிலாதவர் மொழி
தஞ்சமென என்றும் உணராத அடியார் கருது சைவனிடமாம்
அஞ்சுபுலன் வென்று அறுவகைப் பொருள் தெரிந்தெழு இசைக்கிளவியால்
வெஞ்சினம் ஒழித்தவர்கள் மேவி நிகழ்கின்ற திருவேதிகுடியே. 10

கந்தமலி தண்பொழில் நல்மாடமிடை காழிவளர் ஞானம் உணர்சம்
பந்தன்மலி செந்தமிழின் மாலைகொடு வேதிகுடி ஆதிகழலே
சிந்தைசெய வல்லவர்கள் நல்லவர்களென்ன நிகழ்வெஃதி இமையோர்
அந்த உலகெஃதி அரசாளும் அதுவே சரதம் ஆணைநமதே. 11

**இறைவி** : மங்கையர்க்கரசி – **இறைவர்** : வேதபுரீசுவரர்

# தடைபட்ட திருமணம் கைகூட ஓதவேண்டிய பதிகம்

திருமருகல் திருஞான சம்கந்தர்
பண்: இந்தளம் 2 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

சடையாஃ எனுமால் சரண் நீ எனுமால்
விடையாஃ எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாஃ தகுமோ இவள் உள் மெலிவே. 1

சிந்தாஃ எனுமால் சிவனே எனுமால்
முந்தாஃ எனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாஃ தகுமோ இவள் ஏசறவே. 2

அறையார் கழலும் அழல் வாயரவும்
பிறையார் சடையும் உடையாஃ பெரிய
மறையார் மருகல் மகிழ்வாஃ இவளை
இறையார் வளை கொண்டு எழில் வவ்வினையே. 3

ஒலி நீர் சடையில் கரந்தாஃ உலகம்
பலி நீ திரிவாஃ பழியில் புகழாஃ
மலி நீர் மருகல் மகிழ்வாஃ இவளை
மெலி நீர் மையள் ஆக்கவும் வேண்டினையே. 4

துணி நீலவண்ணம் முகில் தோன்றியன்ன
மணி நீலகண்டம் உடையாஃ மருகல்
கணி நீல வண்டார் குழலாள் இவள் தன்
அணி நீல ஒண்கண் அயர்வாக்கினையே. 5

பலரும் பரவப்படுவாஃ சடைமேல்
மலரும் பிறை ஒன்றுடையாஃ மருகல்
புலருந் தனையும் துயிலாள் புடைபோந்து
அலரும் படுமோ அடியாள் இவளே. 6

வழுவாள் பெருமான் கழல் வாழ்க எனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாஃ மருகற் பெருமான்
தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே. 7

இலங்கைக் கிறைவன் விலங்கல் எடுப்பத்
துலங்கல் விரலூன்றலும் தோன்றலனாஃ
வலங்கொள் மதில் சூழ் மருகல் பெருமான்
அலங்கல் இவளை அலர் ஆக்கினையே. 8

எரியார் சடையும் அடியும் இருவர்
தெரியாதது ஓர் தீத்திரள் ஆயவனே
மரியார் பிரியா மருகல் பெருமான்
அரியாள் இவளை அயர்வாக்கினையே. 9

அறிவில் சமணும் அலர் சாக்கியரும்
நெறியல்லன செஃதனர் நின்று உழல்வார்
மறியேந்து கையாஃ மருகல் பெருமான்
நெறியார் குழலி நிறை நீக்கினையே. 10

வய ஞானம் வல்லார் மருகற் பெருமான்
உயர் ஞானம் உணர்ந்து அடி உள்குதலால்
இயன் ஞானசம்பந்தன பாடல் வல்லார்
வியன்ஞாலம் எல்லாம் விளங்கும் புகழே. 11

**இறைவி** : வண்டுவார் குழலி – **இறைவர்** : மாணிக்கவண்ணர்

# கணவன் – மனைவி ஒற்றுமையுடன் வாழ

திருமணஞ்சேரி | திருஞானசம்பந்தர்
பண் : இந்தளம் | 2 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

அயிலாரும் அம்பதனால் புரமூன்று எஃது
குயிலாரும் மென் மொழியாள் ஒரு கூறாகி
மயிலாரும் மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றி நின்றார்க்கு இல்லை பாவமே. 1

விதியானை விண்ணவர்தாம் தொழுது ஏத்திய
நெதியானை நீள்சடைமேல் நிகழ்வித்த வான்
மதியானை வண்பொழில் சூழ்ந்த மணஞ்சேரிப்
பதியானைப் பாடவல்லார் வினை பாறுமே. 2

எஃப்பானார்க்கு இன்புறு தேனளித்து ஊறிய
இப்பாலா எனையும் ஆளவுரியானை
வைப்பான மாடங்கள் சூழ்ந்த மணஞ்சேரி
மெஃப்பானை மேவி நின்றார் வினை வீடுமே. 3

விடையானை மேலுலகு ஏழும் இப்பாரெல்லாம்
உடையானை ஊழி தோறு ஊழி உளதாய
படையானைப் பண்ணிசை பாடு மணஞ்சேரி
அடைவானை அடைய வல்லார்க்கு இல்லை அல்லலே. 4

எறியார் பூங்கொன்றையினோடும் இளமத்தம்
வெறியாருஞ் செஞ்சடையார மிலைத்தானை
மறியாருங் கையுடையானை மணஞ்சேரிச்
செறிவானைச் செப்பவல்லார்க்கு இடர் சேராவே. 5

மொழியானை முன்னொரு நான்மறை ஆறங்கம்
பழியாமைப் பண்ணிசையான பகர்வானை
வழியானை வானவர் ஏத்து மணஞ்சேரி
இழியாமை ஏத்தவல்லார்க்கு எஃதும் இன்பமே. 6

எண்ணானை எண்ணமர் சீர் இமையோர்கட்குக்
கண்ணானைக் கண்ணொரு மூன்று உடையானை
மண்ணானை மாவயல் சூழ்ந்த மணஞ்சேரிப்
பெண்ணானைப் பேச நின்றார் பெரியோர்களே. 7

எடுத்தானை எழில் முடி எட்டும் இரண்டும் தோள்
கெடுத்தானைக் கேடிலாச் செம்மை உடையானை
மடுத்தார வண்டிசை பாடும் மணஞ்சேரி
பிடித்தாரப் பேணவல்லார் பெரியோர்களே. 8

சொல்லானைத் தோற்றங் கண்டானும் நெடுமாலும்
கல்லானைக் கற்றன சொல்லித் தொழுதோங்க
வல்லார் நன்மாதவரேத்தும் மணஞ்சேரி
எல்லாமாம் எம்பெருமான் கழல் ஏத்துமே. 9

சற்றேயும் தாம் அறிவில் சமண் சாக்கியர்
சொற்றேயும் வண்ணமொர் செம்மை உடையானை
வற்றாத வாவிகள் சூழ்ந்த மணஞ்சேரி
பற்றாக வாழ்பவர் மேல் வினை பற்றாவே. 10

கண்ணாருங் காழியர் கோன் கருத்தார்வித்த
தண்ணார் சீர் ஞானசம்பந்தன் தமிழ் மாலை
மண்ணாரும் மாவயல் சூழ்ந்த மணஞ்சேரி
பண்ணாரப் பாட வல்லார்க்கு இல்லை பாவமே. 11

**இறைவி** : கோகிலாம்பாள் – **இறைவர்** : கல்யாண சுந்தரேஸ்வரர்

# திருமணம் கைகூட ஓதவேண்டிய பதிகம்

திருமணஞ்சேரி திருநாவுக்கரசர்
திருக்குறுந்தொகை 5 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பட்ட நெற்றியர் பாஃ புலித்தோலினர்
நட்ட நின்று நவில்பவர் நாடொறும்
சிட்டர் வாழ் திருவார் மணஞ்சேரி எம்
வட்டவார் சடையார் வண்ணம் வாழ்த்துமே. 1

துன்னுவார் குழலாள் உமையாளொடும்
பின்னுவார் சடை மேற் பிறை வைத்தவர்
மன்னுவார் மணஞ்சேரி மருந்தினை
உன்னுவார் வினையாயின ஓயுமே. 2

புற்றில் ஆடரவு ஆட்டும் புனிதனார்
தெற்றினார் புரந் தீயெழச் செற்றவர்
சுற்றினார் மதில் சூழ் மணஞ்சேரியார்
பற்றினார் அவர் பற்றவர் காண்மினே. 3

மத்தமும் மதியும் வளர் செஞ்சடை
முத்தர் முக்கணர் மூசரவம் மணி
சித்தர் தீவணர் சீர் மணஞ்சேரி எம்
வித்தர் தாம் விருப்பாரை விருப்பரே. 4

துள்ளு மான்மறி தூ மழுவாளினர்
வெள்ள நீர் கரந்தார் சடை மேலவர்
அள்ளலார் வயல் சூழ் மணஞ்சேரி எம்
வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே. 5

நீர் பரந்த நிமிர் புன்சடையின் மேல்
ஊர் பரந்த உரகம் அணிபவர்
சீர் பரந்த திருமணஞ்சேரியார்
ஏர் பரந்து அங்கு இலங்கு சூலத்தரே. 6

சுண்ணத்தர் சுடுநீறு உகந்து ஆடலார்
விண்ணத்தம் மதி சூடிய வேதியர்
மண்ணமத்தம் முழவார் மணஞ்சேரியார்
வண்ணத்தம் முலையாளுமை வண்ணரே. 7

துன்ன வாடையர் தூமழுவாளினர்
பின்னு செஞ்சடை மேற் பிறை வைத்தவர்
மன்னுவார் பொழில் சூழ் மணஞ்சேரி எம்
மன்னனார் கழலே தொழ வாஃக்குமே. 8

சித்தர் தேவர்கள் மாலொடு நான்முகன்
புத்தர் சேர் அமண் கையர் புகழவே
மத்தர் தாமறியார் மணஞ்சேரி எம்
அத்தனார் அடியார்க்கு அல்லல் இல்லையே. 9

கடுத்த மேனி அரக்கன் கயிலையை
எடுத்தவன் நெடு நீண்முடி பத்திறப்
படுத்தலும் மணஞ்சேரி அருளெனக்
கொடுத்தனன் கொற்றவாளொடு நாமமே. 10

திருச்சிற்றம்பலம்



# மங்களப் பதிகம்

திருக்கழுமலம் திருஞானசம்பந்தர்
பண் : கொல்லி 3 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே. 1

போதையார் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தான் எனை ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே. 2

தொண்டனை செஃதொழில் துயர் அறுத்து உஃயலாம்
வண்டணை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண் துணை நெற்றியான் கழுமல வளநகர்ப்
பெண் துணையாக ஓர் பெருந்தகை இருந்ததே. 3

அயர்வுளோம் என்று நீ அசைவு ஒழி நெஞ்சமே
நியர்வளை முன்கையாள் நேரிழை அவளொடும்
கயல்வயல் குதிகொளும் கழுமல வளநகர்ப்
பெயர்பல துதிசெயப் பெருந்தகை இருந்ததே. 4

அடைவிலோம் என்று நீ அயர்வொழி நெஞ்சமே
விடை அமர் கொடியினான் விண்ணவர் தொழுதெழும்
கடை உயர் மாடமார் கழுமல வளநகர்ப்
பெடை நடை அவளொடும் பெருந்தகை இருந்ததே. 5

மற்றொரு பற்றிலை நெஞ்சமே மறைபல
கற்றநல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடை பேரல்குல் திருந்திழை அவளொடும்
பெற்றெனை ஆளுடைப் பெருந்தகை இருந்ததே. 6

குறைவளை வதுமொழி குறைவு ஒழி நெஞ்சமே
நிறைவளை முன்கையாள் நேரிழை அவளொடும்
கறைவளர் பொழிலணி கழுமல வளநகர்ப்
பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை இருந்ததே. 7

அரக்கனார் அருவரை எடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால் நீடியாழ் பாடவே
கருக்குவாள் அருள் செய்தான் கழுமல வளநகர்ப்
பெருக்கு நீர் அவளொடும் பெருந்தகை இருந்ததே. 8

நெடியவன் பிரமனும் நினைப்பரிதாய் அவர்
அடியொடு முடியறியா அழல் உருவினன்
கடிகமழ் பொழில் அணி கழுமல வளநகர்ப்
பிடிநடை அவளொடும் பெருந்தகை இருந்ததே. 9

தாருறு தட்டுடைச் சமணர் சாக்கியர்கள் தம்
ஆருறு சொற்களைந்து அடியிணை அடைந்து உய்ம்மின்
காருறு பொழில்வளர் கழுமல வளநகர்ப்
பேரறத் தாளொடும் பெருந்தகை இருந்ததே. 10

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோடு இருந்த எம்பிரான்தனை
அருந்தமிழ் ஞான சம்பந்தன செந்தமிழ்
விரும்புவார் அவர்கள் போய் விண்ணுலகு ஆள்வரே. 11

**இறைவி** : பெரியநாயகி – **இறைவர்** : திருத்தோணிபுரீசுவரர்

பாவநாசத் திருப்பதிகம் திருநாவுக்கரசர்
பண் : பழம்பஞ்சுரம் **4** ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பற்றற்றார் சேர் பழம்பதியைப்
பாசூர் நிலாய பவளத்தைச்
சிற்றம்பலத்து எந் திகழ் கனியைத்
தீண்டற்கரிய திருவுருவை
வெற்றியூரில் விரிசுடரை விமலர்
கோனைத் திரைசூழ்ந்த
ஒற்றியூர் எம் உத்தமனை
உள்ளத்துள்ளே வைத்தேனே. 1

ஆனைக்காவில் அணங்கினை
ஆ ர் நிலாய அம்மானைக்
கானப் பே ர்க் கட்டியைக்
கானூர் முளைத்த கரும்பினை
வானப் பேரார் வந்தேத்தும்
வாஃழூர் வாழும் வலம்புரியை
மானக் கயிலை மழ களிற்றை
மதியைச் சுடரை மறவேனே. 2

மதியங் கண்ணி ஞாயிற்றை
மயக்கம் தீர்க்கும் மருந்தினை
அதிகை மூதூர் அரசினை
ஐயாறு அமர்ந்த ஐயனை
விதியைப் புகழை வானோர்கள்
வேண்டித் தேடும் விளக்கினை
நெதியை ஞானக் கொழுந்தினை
நினைந்தேற்கு உள்ளம் நிறைந்ததே. 3

புறம்பயத்து எம் முத்தினைப்
புகலூர் இலங்கு பொன்னினை
உறந்தை யோங்கு சிராப்பள்ளி
உலகம் விளக்கு ஞாயிற்றைக்
கறங்கு மருவிக் கழுக்குன்றிற்
காண்பார் காணுங் கண்ணானை
அறஞ்சூழ் அதிகை வீரட்டத்
தரிமான் ஏற்றை அடைந்தேனே. 4

கோலக்காவில் குருமணியைக்
குடமூக்கு உறையும் விடமுணியை
ஆலங்காட்டி லந்தேனை
அமரர் சென்னி யாஃமலரைப்
பாலில் திகழும் பைங்கனியைப்
பாராஃத்துறை எம் பசும்பொன்னைச்
சூலத்தானைத் துணியிலியைத்
தோளைக் குளிரத் தொழுதேனே. 5

மருகல் உறை மாணிக்கத்தை
வலஞ்சுழியின் மாலையைக்
கருகாவூரில் கற்பகத்தைக்
காண்டற்கு அரிய கதிரொளியைப்
பெருவேளூர் எம் பிறப்பிலியைப்
பேணுவார்கள் பிரிவரிய
திருவாஞ்சியத்து எஞ் செல்வனைச்
சிந்தையுள்ளே வைத்தேனே. 6

எழிலார் இராச சிங்கத்தை
இராமேச்சுரத்து எம் எழிலேற்றைக்
குழலார் கோதை வரை மார்பிற்
குற்றாலத்து எங் கூத்தனை

நிழலார் சோலை நெடுங்களத்து
        நிலாய நித்த மணாளனை
அழலார் வண்ணத்து அம்மானை
        அன்பில் அணைத்து வைத்தேனே. 7

மாலைத் தோன்றும் வளர்மதியை
        மறைக்காட்டு உறையும் மணாளனை
ஆலைக் கரும்பின் இன்சாற்றை
        அண்ணாமலை எம் அண்ணலைச்
சோலைத் துருத்தி நகர்மேய
        சுடரில் திகழும் துளக்கிலியை
மேலை வானோர் பெருமானை
        விருப்பால் விழுங்கி யிட்டேனே. 8


சோற்றுத்துறை எஞ் சோதியைத்
        துருத்தி மேய தூமணியை
ஆற்றிற் பழனத்து அம்மானை
        ஆலவாஃ எம் அருமணியை
நீற்றிற் பொலிந்த நிமிர் திண்டோள்
        நெஃத்தானத்து எந் நிலாச்சுடரைத்
தோற்றக் கடலை அடல் ஏற்றைத்
        தோளைக் குளிரத் தொழுதேனே. 9

புத்தூர் உறையும் புனிதனைப்
        பூவணத்து எம் போரேற்றை
வித்தாஃ மிழலை முளைத்தானை
        வேள்விக்குடி எம் வேதியனைப்
பொஃத்தார் புரமூன்று எரித்தானைப்
        பொதியில் மேய புராணனை
வைத்தேன் என்றன் மனத்துள்ளே
        மாத்தூர் மேய மருந்தையே. 10

முந்தித் தானே முளைத்தானை
　　மூரி வெள்ளேறு ஊர்ந்தானை
அந்திச் செவ்வான் படியானை
　　அரக்கன் ஆற்றல் அழித்தானைச்
சிந்தை வெள்ளப் புனலாட்டிச்
　　செஞ்சொன் மாலை அடிசேர்த்தி
எந்தை பெம்மான் என் எம்மான்
　　என்பார் பாவ நாசமே. 11

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : கருந்தார் குழலி – **இறைவர்** : அக்னிபுரீஸ்வரர்





# *திருத்தலச் செலவு*

நல்ல அறநெறியில் ஈட்டிய செல்வத்தைக் கொண்டு நாம் மனைவி, மக்கள், சுற்றத்தோடும், அடியார்களோடும் திருக்கோயில்கள் சென்று வழிபடுதல் வேண்டும். " **நாடும் நகரமும் நல் திருக்கோயிலும் தேடித் திரிந்து சிவபெருமான் என்று பாடுமின் பாடிப் பணிமின் பணிந்த பின் கூடிய நெஞ்சத்து கோயிலாஃக் கொள்வானே** " என்று திருமூலர் அருளியிருக்கிறார்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறியில் நிற்பவர்களுக்கும் அவரவர்களுக்கு ஏற்ப அருள் செஃயும் இடம் திருக்கோயிலாகும். ஆக எல்லோருக்கும் உரிய இடமாகத் திகழும் திருக்கோயில்கள் கட்டுவது, பராமரிப்பது போன்ற பணிகள் காலம் கடந்து நிற்கும் அற்புதப் பணிகளாகும். திருத்தலங்கள் செல்லும் நாம் நம்மால் இயன்ற திருப்பணிகளும், உழவாரப் பணிகளும் செஃவது சைவரின் கடமையாகும்.

ஆக திருத்தல யாத்திரைகள் மேற்கொள்வதன் மூலம் இறைவனது பல்வேறு திருமேனிகளை தரிசித்து அதன் பயனாக நம் உள்ளத்துள்ளேயே இறைவனைத் தொழும் பேறு பெறலாம்.

திருக்ஷேத்திரக் கோவைத் திருஞானசம்பந்தர்
பண் : இந்தளம் 2 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

ஆ   ர் தில்லையம்பலம் வல்லம் நல்லம்
வடகச்சியும் அச்சிறுபாக்கம் நல்ல
கூ   ர் குடவாயில் குடந்தை வெண்ணி
கடல் சூழ் கழிப்பாலை தென்கோடி பீடார்
நீ   ர் வயல் நின்றியூர் குன்றியூருங்
குருகா வையூர் நாரையூர் நீடு கானப்
பே   ர் நன்னீள் வயல் நெஃ்த்தானமும்
பிதற்றாஃ பிறை சூடிதன் பேரிடமே. 1

அண்ணாமலை ஈங்கோயும் அத்தி முத்தாறு
அகலா முதுகுன்றம் கொடுங்குன்றமும்
கண்ணார் கழுக்குன்றங் கயிலை கோணம்
பயில் கற்குடி காளத்தி வாட்போக்கியும்
பண்ணார் மொழி மங்கையோர் பங்குடையான்
பரங்குன்றம் பருப்பதம் பேணிநின்றே
எண்ணாஃ இரவும் பகலும் இடும்பைக்
கடல் நீந்தலாம் காரணமே. 2

அட்டானம் என்றோதிய நாலிரண்டும்
அழகன் உறை காவனைத் துந்துறைகள்
எட்டாந் திருமூர்த்தியின் காடொன்பதும்
குளமூன்றும் களஞ்சும் பாடி நான்கும்
மட்டார் குழலாள் மலை மங்கை பங்கன்
மதிக்கும் இடமாகிய பாழி மூன்றும்
சிட்டானவன் பாசூர் என்றே விரும்பாஃ
அரும் பாவங்களாயின தேஃந்தறவே. 3

அறப்பள்ளி அகத்தியான்பள்ளி வெள்ளைப்
பொடிப்பூசி ஆறணி வானமர் காட்டுப்பள்ளி
சிறப்பள்ளி சிராப்பள்ளி செம்பொன்பள்ளி
திருநனிபள்ளி சீர் மகேந்திரத்துப்
பிறப்பில் லவன் பள்ளி வெள்ளச் சடையான்
விரும்பும் இடைப்பள்ளி வண்சக்கரமால்
உறைப்பாலடி போற்றக் கொடுத்த பள்ளி
உணராஃ மடநெஞ்சேமே உன்னி நின்றே. 4

ஆறை வட மாகறல் அம்பர் ஐயாறு
அணியார் பெருவேளூர் விளமர் தெங்கூர்
சேறை துலை புகலூர் அகலாது இவை காதலித்தான்
அவன் சேர்பதியே . ..... ..... ..... ..... ..... ..... 5

மனவஞ்சர் மற்றோடமுன் மாதராரும்
மதிகூர் திருக்கூடலில் ஆலவாயும்
இனவஞ் சொலிலா இடைமாமருதும்
இரும்பைப் பதி மாகாளம் வெற்றியூரும்
கனமஞ்சின மால் விடையான் விரும்புங்
கருகாவூர் நல்லூர் பெரும்புலியூர்
தனமென் சொலிற்றஞ்ச மென்றே நினைமின்
தவமாம் மலமாயின தானறுமே. 6

மாட்டூர் மட பாச்சிலாச்சிராமம்
முண்டீச்சரம் வாதவூர் வாரணாசி
காட்டூர் கடம்பூர் படம் பக்கங் கொட்டுங்
கடலொற்றியூர் மற்று உறையூர் அவையும்
கோட்டூர் திருவாமாத்தூர் கோழம்பமுங்
கொடுங்கோவலூர் திருக்குண வாயில் ..... ..... 7

..... ..... ..... குலாவு திங்கட் சடையான்
குளிரும் பரிதி நியமம்

போற்றூர் அடியார் வழிபாடு ஒழியாத் தென்
புறம்பயம் பூவணம் பூழியூரும்
காற்றூர் வரை அன்று எடுத்தான் முடிதோள்
நெரித்தானுறை கோயிலென்று நீ கருதே. 8

நெற்குன்றம் ஓத்தூர் நிறைநீர் மருகல்
நெடுவாயில் குறும்பலா நீடுதிரு
நற்குன்றம் வலம்புரம் நாகேச்சரம்
நளிர்சோலை உஞ்சேனை மாகாளம் வாஃமூர்
கற்குன்ற மொன்றேந்தி மழைதடுத்த
கடல்வண்ணனுமா மலரோனுங் காணாச்
சொற்கென்றுந் தொலைவிலாதான் உறையுங்
குடமூக்கென்று சொல்லிக் குலாவுமினே. 9

குத்தங்குடி வேதிகுடி புனல்சூழ்
குருந்தங்குடி தேவன்குடி மருவும்
அத்தங்குடி தண் திரு வண்குடியும்
அலம்புஞ் சலந்தன் சடைவைத்துகந்த
நித்தன் நிமலன் உமையோடுங் கூட
நெடுங்காலம் உறைவிடம் என்று சொல்லாப்
புத்தர் புறங்கூறிய புன் சமணர்
நெடும் பொஃகளை விட்டு நினைந்து உஃமினே. 10

அம்மானை அருந்தவமாகி நின்ற
அமரர் பெருமான் பதியான உன்னிக்
கொஃம் மாமலர்ச்சோலை குலாவு கொச்சைக்கு
இறைவன் சிவஞான சம்பந்தன் சொன்ன
இம்மாலை ஈரைந்தும் இரு நிலத்தில்
இரவும் பகலும் நினைந்தேத்தி நின்று
விம்மா வெருவா விரும்பும் மடியார்
விதியார் பிரியார் சிவன் சேவடிக்கே. 11

திருச்சிற்றம்பலம்

திருக்ஷேத்திரக் கோவை திருநாவுக்கரசர்
திருத்தாண்டகம் **6** ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தில்லைச் சிற்றம்பலமும் செம்பொன்பள்ளி
தேவன்குடி சிராப்பள்ளி தெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல்
வீரட்டங் கோகரணம் கோடி காவும்
முல்லைப் புறவம் முருகன் பூண்டி
முளையூர் பழையாறை சத்திமுற்றம்
கல்லில் திகழ் சீரார் காளத்தியும்
கயிலாய நாதனையே காணலாமே. 1

ஆ ர் மூலட்டானம் ஆனைக்காவும்
ஆக்கூரில் தான்தோன்றி மாடம் ஆவூர்
பே ர் பிரமபுரம் பேராவூரும்
பெருந்துறை காம்பீலி பிடவூர் பேணும்
கூரார் குறுக்கை வீரட்டானமும்
கோட்டூர் குடமூக்கு கோழம்பமும்
காரார் கழுக்குன்றும் கானப் பேரும்
கயிலாய நாதனையே காணலாமே. 2

இடைமருது ஈங்கோஃ இராமேச்சுரம்
இன்னம்பர் ஏரிடவை ஏமப்பேறுர்
சடைமுடி சாலைக்குடி தக்களூர்
தலையாலங்காடு தலைச்சங்காடு
கொடுமுடி குற்றாலம் கொள்ளம்பூதூர்
கோத்திட்டை கோட்டாறு கோட்டுக்காடு
கடைமுடி கானூர் கடம்பந்துறை
கயிலாய நாதனையே காணலாமே. 3

எச்சில் இளமர் ஏமநல்லூர்
இலம்பையங் கோட்டூர் இறையான் சேரி
அச்சிறுபாக்கம் அளப்பூர் அம்பர்
ஆவடுதண்டுறை அழுந்தூர் ஆறை
கச்சினம் கற்குடி கச்சூர் ஆலக்
கோயில் கரவீரம் காட்டுப்பள்ளி
கச்சிப்பலதளியும் ஏகம்பத்தும்
கயிலாய நாதனையே காணலமே. 4

கொடுங்கோளூர் அஞ்சைக்களம் செங்குன்றூர்
கொங்கணம் குன்றியூர் குரக்குக்காவும்
நெடுங்களம் நன்னிலம் நெல்லிக்காவும்
நின்றியூர் நீடூர் நியமநல்லூர்
இடும்பாவனமும் எழுமூர் ஏழூர் தோழூர்
எறும்பியூர் ஏராரும் ஏமகூடம்
கடம்பை இளம் கோயில் தன்னிலுள்ளும்
கயிலாய நாதனையே காணலாமே. 5

மண்ணிப்படிக்கரை வாழ்கொளிபுத்தூர்
வக்கரை மந்தாரம் வாரணாசி
வெண்ணி விளத்தொட்டி வேள்விக்குடி
விளமர் விராடபுரம் வேட்களத்தும்
பெண்ணை அருட்துறைதண் பெண்ணாகடம்
பிரம்பில் பெரும்புலியூர் பெருவேளூரும்
கண்ணை களர் காறை கழிப்பாலையும்
கயிலாய நாதனையே காணலாமே. 6

வீழிமிழலை வெண்காடு வேங்கூர்
வேதிகுடி விசயமங்கை வியலூர்
ஆழி அகத்தியான்பள்ளி அண்ணா
மலை ஆலங்காடும் அரதைப் பெரும்

பாழி பழனம் பனந்தாள் பாதாளம்
        பராய்த்துறை பைஞ்ஞீலி பனங்காட்டூர்த்தண்
காழி கடல் நாகைக்காரோணத்தும்
        கயிலாய நாதனையே காணலாமே. 7

உஞ்சேனை மாகாளம் ஊறல் ஓத்தூர்
        உருத்திரகோடி மறைக்காட்டுள்ளும்
மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர்
        வீரட்டம் மாதானம் கேதாரத்தும்
வெஞ்சமாக்கூடல் மீயச்சூர் வைகா
        வேதீச்சுரம் விவீசுரம் வெற்றியூரும்
கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக்கையும்
        கயிலாய நாதனையே காணலாமே. 8

திண்டீச்சரம் சேய்ஞலூர் செம்பொன்பள்ளி
        தேவூர் சிரபுரம் சிற்றேமம் சேறை
கொண்டீச்சரம் கூந்தலூர் கூழையூர் கூடல்
        குருகாவூர் வெள்ளடை குமரி கொங்கு
அண்டர் தொழும் அதிகை வீரட்டானம்
        ஐயாறசோகந்தி ஆமாத்தூரும்
கண்டியூர் வீரட்டம் கருகாவூரும்
        கயிலாய நாதனையே காணலாமே. 9

நறையூரில் சித்தீச்சரம் நள்ளாறு
        நாரையூர் நாகேச்சரம் நல்லூர் நல்ல
துறையூர் சோற்றுத்துறை சூலமங்கை
        தோணிபுரம் துருத்தி சோமீச்சரம்
உறையூர் கடலொற்றியூர் ஊற்றத்தூர்
        ஓமாம்புலியூர் ஓர் ஏடகத்தும்
கறையூர் கருப்பறியல் கன்றாப்பூரும்
        கயிலாய நாதனையே காணலாமே. 10

புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர்
புறம்பயம் பூவணம் பொஃகை நல்லூர்
வலிவலம் மாற்பேறு வாஃமூர் வைகல்
வலஞ்சுழி வாஞ்சியம் மருகல் வன்னி
நிலமலி நெஃத்தானத்தோடு எத்தானத்தும்
நிலவு பெரும் கோயில்பல கண்டால் தொண்டீர்
கலிவலிமிக்கோனைக் கால் விரலால் செற்ற
கயிலாய நாதனையே காணலாமே. 11

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : கருந்தார் குழலி – **இறைவர்** : அக்னிபுரீஸ்வரர்



ஊர்த்தொகை சுந்தரமூர்த்தி நாயனார்
பண் : பழம்பஞ்சுரம் 7 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப் பே   ராஃ
கோட்டூர்க் கொழுந்தே அழுந்தூர் அரசே கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாஃபனங்காட்டூரானே
மாட்டூர் அறவா மறவாது உன்னைப் பாடப் பணியாயே. 1

கொங்கில் குறும்பில் குரக்குத் தளியாஃகுழகா குற்றாலா
மங்குல் திரிவாஃவானோர் தலைவா வாஃமூர் மணவாளா
சங்கக் குழையார் செவியா அழகா அவியா அனல் ஏந்திக்
கங்குற் புறங்காட்டாடீ அடியார் கவலை களையாயே. 2

நிறைக்காட்டானே நெஞ்சத்தானே நின்றியூரானே
மிறைக்காட்டானே புனல்சேர் சடையா அனல் சேர் கையானே
மறைக்காட்டானே திருமாந்துறையாஃமாகோணத்தானே
இறைக்காட்டானே எங்கட்கு உன்னை எம்மான் தம்மானே. 3

ஆ   ர் அத்தா ஐயாற்று அமுதே அளப்பூர் அம்மானே
கா   ர் பொழில்கள் புடைசூழ் புறவிற் கருகாவூரானே
பே   ர் உறைவாஃபட்டிப் பெருமான் பிறவா நெறியானே
பா   ர் பலரும் பரவப் படுவாஃபாசூர் அம்மானே. 4

மருகல் உறைவாஃமாகாளத்தாஃமதியஞ் சடையானே
அருகற் பிணி நின்னடியார் மேல அகல அருளாயே
கருகற் குரலாஃவெண்ணிக் கரும்பே கானூர்க் கட்டியே
பருகப் பணியா யடியார்க்குன்னைப் பவளப் படியானே. 5

தாங்கூர் பிணி நின்னடியார் மேல அகல அருளாயே
வேங்கூர் உறைவாஃவிளமர் நகராஃவிடையார் கொடியானே
நாங்கூர் உறைவாஃதேங்கூர் நகராஃநல்லூர் நம்பானே
பாங்கூர் பலிதேர் பரனே பரமா பழனப் பதியானே. 6

தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந்தாராஃ
வானைக் காவல் கொண்டு நின்றார் அறியா நெறியானே
ஆனைக் காவில் அரனே பரனே அண்ணாமலையானே
ஊனைக் காவல் கை விட்டுன்னை உகப்பார் உணர்வாரே. 7

துருத்திச் சுடரே நெஃ்த்தானத்தாஃசொல்லாஃகல்லாலா
பருத்தி நியமத்து உறைவாஃவெயிலாஃப் பலவாஃக் காற்றானாஃ
திருத்தித் திருத்தி வந்தென் சிந்தை இடங்கொள் கயிலாயா
அருத்தித்து உன்னை அடைந்தார் வினைகள் அகல அருளாயே.

புலியூர்ச் சிற்றம்பலத்தாஃபுகலூர்ப் போதா மூதூரா
பொலிசேர் புரமூன்றெரியச் செற்ற புரிபுன் சடையானே
வலிசேர் அரக்கன் தடக்கை ஐஞ்ஞான் கடர்த்த மதிசூடி
கலிசேர் புறவிற் கடவூர் ஆளீ காண அருளாயே. 9

கைம்மா உரிவை அம்மான் காக்கும் பலவூர் கருத்துன்னி
மைம்மாந் தடங்கண் மதுர மன்ன மொழியாள் மடச்சிங்கடி
தம்மான் ஊரன் சடையன் சிறுவன் அடியன் தமிழ்மாலை
செம்மாந் திருந்து திருவாஃதிறப்பார் சிவலோகத்தாரே. 10

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : கமலாம்பிகை – **இறைவர்** : புற்றிடங்கொண்ட நாதர்

யாத்திரைப்பத்து — மாணிக்கவாசகர்
தில்லையில் அருளியது — 8 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பூவார் சென்னி மன்னன் எம்
        புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவாது உள்ளம் கலந்து உணர்வாஃ
        உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆஆ என்னப் பட்டு அன்பாஃ
        ஆட்பட்டீர் வந்து ஒருப்படுமின்
போவோங் காலம் வந்தது காண்
        பொஃவிட்டு உடையான் கழல் புகவே. 1

புகவே வேண்டா புலன்களில் நீர்
        புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கவெல்லாம்
        வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத்துள் புகுந்து
        நாயே அனைய நமையாண்ட
தகவே உடையான் தனைச் சாரத்
        தளராது இருப்பார் தாந் தாமே. 2

தாமே தமக்குச் சுற்றமும்
        தாமே தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார்
        என்ன மாயம் இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
        அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு
போமாறு அமைமின் பொஃநீக்கிப்
        புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே. 3

அடியார் ஆனீர் எல்லீரும்
அகல விடுமின் விளையாட்டைக்
கடிசேர் அடியே வந்தடைந்து
கடைக்கொண்டிருமின் திருக்குறிப்பைச்
செடிசேர் உடலைச் செலநீக்கிச்
சிவலோகத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்தன்
பூவார் கழற்கே புகவிடுமே. 4

விடுமின் வெகுளி வேட்கை நோஃ
மிகவோர் காலம் இனியில்லை
உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோடு
உடன் போவதற்கே ஒருப்படுமின்
அடைவோம் நாம்போஃச் சிவபுரத்துள்
அணியார் கதவ தடையாமே
புடைபட்டுருகிப் போற்றுவோம்
புயங்கன் ஆள்வான் புகழ்களையே. 5

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கன் தாளே புந்திவைத்திட்டு
இகழ்மின் எல்லா அல்லலையும்
இனியோர் இடையூறு அடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்தாள் வணங்கி நாம்
நிகழும் அடியார் முன்சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே. 6

நிற்பார் நிற்க நில்லாவுலகில்
நில்லோம் இனி நாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாந் திருமேனிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே

நிற்பீர் எல்லாந் தாழாதே
நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தால்
பெறுதற் கரியன் பெருமானே. 7

பெருமான் பேரானந்தத்துப்
பிரியா திருக்கப் பெற்றீர்காள்
அருமாலுற்றுப் பின்னை நீர்
அம்மா அழுங்கி அரற்றாதே
திருமா மணிசேர் திருக்கதவந்
திறந்த போதே சிவபுரத்துத்
திருமாலறியாத் திருப்புயங்கன்
திருத்தாள் சென்று சேர்வோமே. 8

சேரக் கருதிச் சிந்தனையைத்
திருந்த வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணாள்
பங்கண் புயங்கன் அருளமுதம்
ஆரப் பருகி ஆராத
ஆர்வங் கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன்கழற்கே
பொஃயிற் கிடந்து புரளாதே. 9

புரள்வார் தொழுவார் புகழ்வாராஃ
இன்றே வந்தாள் ஆகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார்
மதியுட் கலங்கி மயங்குவீர்
தெருள்வீர் ஆகில் இது செஃம்மின்
சிவலோகக் கோன் திருப்புயங்கன்
அருளார் பெறுவார் அகலிடத்தே
அந்தோ அந்தோ அந்தோவே. 10

திருச்சிற்றம்பலம்



# *திருமேனி காண்டல்*

திருத்தலங்கள் தோறும் சென்று வழிபட்டதன் பயனாக " **சிவனோடு ஒக்கும் தெஃவம் தேடினும் இல்லை, அவனோடு ஒப்பார் யாவரும் இல்லை** " என்பதை உணர்கிறோம். அவ்வாறு உணர்ந்ததால் நம்முடைய உள்ளத்தே குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும், குமின் சிரிப்பும், பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும் இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணலாம்.

**குவளைக் கண்ணி கூறன் காண்க !**
**அவளும் தானும் உடனே காண்க !**

திருப்பூவணம் திருநாவுக்கரசர்
திருத்தாண்டகம் 6 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வடி ஏறு திரிசூலம் தோன்றும் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியம் தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ் கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில் வெண்குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில் திகழுந் திருமுடியும் இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 1

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்
அடியவர்கட்கு ஆரமுதமாகித் தோன்றும்
ஊணாகி ஊர் திரிவானாகித் தோன்றும்
ஒற்றை வெண்பிறை தோன்றும் பற்றார் தம்மேல்
சேணாக வரைவில்லால் எரித்தல் தோன்றும்
செத்தவர் தம் எலும்பினால் செறியச் செஃதே
பூணாணும் அரைஞாணும் பொலிந்து தோன்றும்
பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 2

கல்லாழின் நீழற் கலந்து தோன்றும்
கவின் மறையோர் நால்வர்க்கு நெறிகள் அன்று
சொல்லாகச் சொல்லியவா தோன்றும் தோன்றும்
சூழரவும் மான் மறியும் தோன்றும் தோன்றும்
அல்லாத காலனை முன் அடர்த்தல் தோன்றும்
ஐவகையால் நினைவார் பால் அமர்ந்து தோன்றும்
பொல்லாத புலாலெலும்பு பூணாஃத் தோன்றும்
பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 3

படைமலிந்த மழுவாளும் மானும் தோன்றும்
பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்
நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்றும்
நான்மறையின் ஒலிதோன்றும் நயனம் தோன்றும்
உடைமலிந்த கோவணமுங் கீளும் தோன்றும்
மூரல் வெண்சிரமாலை உலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 4

மயலாகும் தன்னடியார்க்கு அருளும் தோன்றும்
மாசிலாப் புன்சடைமேல் மதியம் தோன்றும்
இயல்பாக இடுபிச்சை ஏற்றல் தோன்றும்
இருங்கடல் நஞ்சுண்டு இருண்ட கண்டம் தோன்றும்
கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை
ஆயிரமா முகத்தினொடு வானில் தோன்றும்
புயல் பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்
பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 5

பாராழி வட்டத்தார் பரவியிட்ட
பன்மலரும் நறும்புகையும் பரந்து தோன்றும்
சீராழித் தாமரையின் மலர்களன்ன
திருந்திய மாநிறத்த சேவடிகள் தோன்றும்
ஓராழித் தேருடைய இலங்கை வேந்தன்
உடல் துணித்த இடர் பாவம் கெடுப்பித் தன்று
போராழி முன் ஈந்த பொற்புத் தோன்றும்
பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 6

தன்னடியார்க்கு அருள் புரிந்த தகவு தோன்றும்
சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்
மின்னனைய நுண்ணிடையாள் பாகம் தோன்றும்
வேழத்தின் உரிவிரும்பிப் போர்த்தல் தோன்றும்

துன்னிய செஞ்சடை மேலோர் புனலும் பாம்பும்
 தூய மாமதியுடனே வைத்தல் தோன்றும்
பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்
 பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 7

செறிகழலும் திருவடியும் தோன்றும் தோன்றும்
 திரிபுரத்தை எரிசெஃத சிலையும் தோன்றும்
நெறியதனை விரித்துரைத்த நேர்மை தோன்றும்
 நெற்றி மேல் கண் தோன்றும் பெற்றந் தோன்றும்
மறுபிறவி அறுத்தருளும் வகையும் தோன்றும்
 மலைமகளும் சலமகளும் மலிந்து தோன்றும்
பொறியரவும் இளமதியும் பொலிந்து தோன்றும்
 பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 8


அருப்போட்டு முலைமடவாள் பாகம் தோன்றும்
 அணிகிளரும் உருமென்ன அடர்க்குங் கேழல்
மருப்போட்டு மணிவயிரக் கோவை தோன்றும்
 மணமலிந்த நடந்தோன்றும் மணியார் வைகைத்
திருக்கோட்டில் நின்றதோர் திறமுந் தோன்றும்
 செக்கர் வானொளி மிக்குத் திகழ்ந்த சோதிப்
பொருப்போட்டி நின்ற திண்புயமும் தோன்றும்
 பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 9

ஆங்கணைந்த சண்டிக்கும் அருளி அன்று
 தன்முடிமேல் அலர்மாலை அளித்தல் தோன்றும்
பாங்கணைந்து பணிசெஃவார்க்கு அருளி யன்று
 பல பிறவி அறுத்தருளும் பரிசும் தோன்றும்
கோங்கணைந்த கூவிளமும் மதமத்தமுங்
 குழற்கணிந்த கொள்கையொடு கோலந் தோன்றும்
பூங்கணைவேள் உருவழித்த பொற்புத் தோன்றும்
 பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 10

ஆரொருவர் உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாஃநிற்கின்ற அருளும் தோன்றும்
வாருருவப் பூண்முலை நன்மங்கை தன்னை
மகிழ்ந்து ஒருபால் வைத்துகந்த வடிவும் தோன்றும்
நீருருவக் கடலிலங்கை அரக்கர் கோனை
நெறு நெறன அடர்த்திட்ட நிலையும் தோன்றும்
போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்
பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 11

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : சௌந்தர நாயகி – **இறைவர்** : திருப்பூவணநாதர்



திருச்சிவபுரம் திருநாவுக்கரசர்
திருத்தாண்டகம் 6 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வானவன் காண் வானவர்க்கு மேல் ஆனான் காண்
வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன் காண் ஆன் ஐந்தும் ஆடினான் காண்
ஐயன் காண் கையில் அனல் ஏந்தி ஆடும்
கானவன் காண் கானவனுக்கு அருள் செ தான் காண்
கருதுவார் இதயத்துக் கமலத்து ஊறும்
தேன் அவன் காண் சென்று அடையாச் செல்வன் தான் காண்
சிவன் அவன் காண் சிவபுரத்து எம் செல்வன் தானே. 1

நக்கன் காண் நக்கரவம் அரையில் ஆர்த்த
நாதன் காண் பூதகணம் ஆட ஆடும்
சொக்கன் காண் கொக்கு இறகு சூடினான் காண்
துடி இடையாள் துணைமுலைக்குச் சேர்வது ஆகும்
பொக்கன் காண் பொக்கணத்த வெண்நீற்றான் காண்
புவனங்கள் மூன்றினுக்கும் பொருளா நின்ற
திக்கன் காண் செக்கர் அது திகழும் மேனிச்
சிவன் அவன் காண் சிவபுரத்து எம் செல்வன் தானே. 2

வம்பின் மலர்க்குழல் உமையாள் மணவாளன் காண்
மலரவன் மால் காண்பு அரிய மைந்தன் தான் காண்
கம்ப மதக்கரி பிளிற உரிசெ தோன் காண்
கடல் நஞ்சம் உண்டு இருண்ட கண்டத்தான் காண்
அம்பர்நகர்ப் பெருங்கோயில் அமர்கின்றான் காண்
அயவந்தி உள்ளான் காண் ஐயாறன் காண்
செம்பொன் எனத் திகழ்கின்ற உருவத்தான் காண்
சிவன் அவன் காண் சிவபுரத்து எம் செல்வன் தானே. 3

பித்தன் காண் தக்கன்தன் வேள்வி எல்லாம்
        பீடு அழியச் சாடி அருள்கள் செ த
முத்தன் காண் முத்தீயும் ஆயினான் காண்
        முனிவர்க்கும் வானவர்க்கும் முதலா மிக்க
அத்தன் காண் புத்தூரில் அமர்ந்தான் தான் காண்
        அரிசில் பெருந்துறையே ஆட்சி கொண்ட
சித்தன் காண் சித்தீச்சரத்தான் தான் காண்
        சிவன் அவன் காண் சிவபுரத்து எம் செல்வன் தானே. 4

தூயவன் காண் நீறு துதைந்த மேனி
        துளங்கும் பளிங்கு அனைய சோதியான் காண்
தீ அவன் காண் தீ அவுணர் புரம் செற்றான் காண்
        சிறுமான் கொள் செங்கை எம்பெருமான் தான் காண்
ஆயவன் காண் ஆ ரில் அம்மான் தான் காண்
        அடியார்கட்கு ஆரமுதம் ஆயினான் காண்
சேயவன் காண் சேம நெறி ஆயினான் காண்
        சிவன் அவன் காண் சிவபுரத்து எம் செல்வன் தானே. 5

பார் அவன் காண் பார் அதனில் பயிர் ஆனான் காண்
        பயிர் வளர்க்கும் துளி அவன் காண் துளியில் நின்ற
நீர் அவன் காண் நீர் சடைமேல் நிகழ்வித்தான் காண்
        நில வேந்தர் பரிசாக நினைவு உற்று ஓங்கும்
பேரவன் காண் பிறை எயிற்று வெள்ளைப் பன்றிப்
        பிரியாது பலநாளும் வழிபட்டு ஏத்தும்
சீரவன் காண் சீர் உடைய தேவர்க்கு எல்லாம்
        சிவன் அவன் காண் சிவபுரத்து எம் செல்வன் தானே. 6

வெ யவன் காண் வெ ய கனல் ஏந்தினான் காண்
        வியன் கெடில வீரட்டம் மேவினான் காண்
மெ யவன் காண் பொ யர் மனம் விரவாதான் காண்
        வீணையோடு இசைந்து மிகு பாடல் மிக்க

கையவன் காண் கையில் மழு ஏந்தினான் காண்
காமன் அங்கம் பொடி விழித்த கண்ணினான் காண்
செ யவன் காண் செ யவளை மாலுக்கு ஈந்த
சிவன் அவன் காண் சிவபுரத்து எம் செல்வன் தானே. 7

கலை ஆரும் நூல் அங்கம் ஆயினான் காண்
கலை பயிலும் கருத்தன் காண் திருத்தமாகி
மலையாகி மறிகடல் ஏழ் சூழ்ந்து நின்ற
மண்ணாகி விண்ணாகி நின்றான் தான் காண்
தலையாய மலை எடுத்த தகவு இலோனைத்
தகர்ந்து விழ ஒரு விரலால் சாதித்து ஆண்ட
சிலை ஆரும் மடமகள் ஓர் கூறன் தான் காண்
சிவன் அவன் காண் சிவபுரத்து எம் செல்வன் தானே. 10

திருச்சிற்றம்பலம்

*குறிப்பு : இப்பதிகத்தில் 8, 9 ஆம் செ யுள்கள் கிடைத்தில.*

**இறைவி** : சிங்காரவல்லி – **இறைவர்** : சிவபுரநாதர்



திருமழபாடி திருநாவுக்கரசர்
திருத்தாண்டகம் 6 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நீறேறு திருமேனி உடையான் கண்டா
நெற்றிமேல் ஒற்றைக் கண் நிறைந்தான் கண்டா
கூறாக உமை பாகம் கொண்டான் கண்டா
கொடிய விடம் உண்டு இருண்ட கண்டன் கண்டா
ஏறு ஏறி எங்கும் திரிவான் கண்டா
ஏழ் உலகும் ஏழ் மலையும் ஆனான் கண்டா
மாறு ஆனார் தம் அரணம் அட்டான் கண்டா
மழபாடி மன்னும் மணாளன் தானே. 1

கொக்கு இறகு சென்னி உடையான் கண்டா
கொல்லை விடை ஏறும் கூத்தன் கண்டா
அக்கு அரைமேல் ஆடல் உடையான் கண்டா
அனல் அங்கை ஏந்திய ஆதி கண்டா
அக்கோடு அரவம் அணிந்தான் கண்டா
அடியார்கட்கு ஆரமுதம் ஆனான் கண்டா
மற்று இருந்த கங்கைச் சடையான் கண்டா
மழபாடி மன்னும் மணாளன் தானே. 2

நெற்றித் தனிக் கண் உடையான் கண்டா
நேரிழை ஓர்பாகமா நின்றான் கண்டா
பற்றிப் பாம்பு ஆட்டும் படிறன் கண்டா
பல் ஊர் பலி தேர் பரமன் கண்டா
செற்றார் புரம் மூன்றும் செற்றான் கண்டா
செழு மா மதி சென்னி வைத்தான் கண்டா
மற்று ஒரு குற்றம் இலாதான் கண்டா
மழபாடி மன்னும் மணாளன் தானே. 3

அலை ஆர்ந்த புனல்கங்கைச் சடையான் கண்டா
அண்டத்துக்கு அப்பாலா நின்றான் கண்டா
கொலை ஆன கூற்றம் குமைத்தான் கண்டா
கொல் வேங்கைத் தோல் ஒன்று உடுத்தான் கண்டா
சிலையால் திரிபுரங்கள் செற்றான் கண்டா
செழு மா மதி சென்னி வைத்தான் கண்டா
மலை ஆர் மடந்தை மணாளன் கண்டா
மழபாடி மன்னும் மணாளன் தானே. 4

உலந்தார்தம் அங்கம் அணிந்தான் கண்டா
உவகையோடு இன்அருள்கள் செ தான் கண்டா
நலம் திகழும் கொன்றைச் சடையான் கண்டா
நால்வேதம் ஆறு அங்கம் ஆனான் கண்டா
உலந்தார் தலை கலனாக் கொண்டான் கண்டா
உம்பரார் தங்கள் பெருமான் கண்டா
மலர்ந்தார் திருவடி என் தலைமேல் வைத்த
மழபாடி மன்னும் மணாளன் தானே. 5

தாமரையான்தன் தலையைச் சா த்தான் கண்டா
தகவு உடையார் நெஞ்சு இருக்கை கொண்டான் கண்டா
பூ மலரான் ஏத்தும் புனிதன் கண்டா
புணர்ச்சிப் பொருள் ஆகி நின்றான் கண்டா
ஏ மருவு வெஞ்சிலை ஒன்று ஏந்தி கண்டா
இருள் ஆர்ந்த கண்டத்து இறைவன் கண்டா
மா மருவும் கலை கையில் ஏந்தி கண்டா
மழபாடி மன்னும் மணாளன் தானே.

நீராகி நெடு வரைகள் ஆனான் கண்டா
நிழல் ஆகி நீள் விசும்பும் ஆனான் கண்டா
பாராகிப் பௌவம் ஏழ் ஆனான் கண்டா
பகல் ஆகி வான் ஆகி நின்றான் கண்டா 6

ஆரேனும் தன் அடியார்க்கு அன்பன் கண்டா
அணுவாகி ஆதியா நின்றான் கண்டா
வார் ஆர்ந்த வனமுலையாள் பங்கன் கண்டா
மழபாடி மன்னும் மணாளன் தானே. 7

பொன் இயலும் திருமேனி உடையான் கண்டா
பூங்கொன்றைத்தார் ஒன்று அணிந்தான் கண்டா
மின் இயலும் வார்சடை எம்பெருமான் கண்டா
வேழத்தின் உரி விரும்பிப் போர்த்தான் கண்டா
தன் இயல்பார் மற்று ஒருவர் இல்லான் கண்டா
தாங்கரிய சிவம் தானா நின்றான் கண்டா
மன்னிய மங்கை ஓர் கூறன் கண்டா
மழபாடி மன்னும் மணாளன் தானே. 8

ஆலாலம் உண்டு உகந்த ஆதி கண்டா
அடையலர்தம் புரம் மூன்றும் எ தான் கண்டா
காலால் அக் காலனையும் கா ந்தான் கண்டா
கண்ணப்பர்க்கு அருள்செ த காளை கண்டா
பால் ஆரும் மொழி மடவாள் பாகன் கண்டா
பசு ஏறிப் பலி திரியும் பண்பன் கண்டா
மாலாலும் அறிவு அரிய மைந்தன் கண்டா
மழபாடி மன்னும் மணாளன் தானே. 9

ஒரு சுடரா உலகு ஏழும் ஆனான் கண்டா
ஓங்காரத்து உள்பொருளா நின்றான் கண்டா
விரி சுடரா விளங்கு ஒளியா நின்றான் கண்டா
விழவு ஒலியும் வேள்வொலியும் ஆனான் கண்டா
இருசுடர் மீது ஓடா இலங்கைக் கோனை
ஈடு அழிய இருபது தோள் இறுத்தான் கண்டா
மரு சுடரின் மாணிக்கக் குன்று கண்டா
மழபாடி மன்னும் மணாளன் தானே. 10

**இறைவி** : சுந்தராம்பிகை – **இறைவர்** : மழுவாடீசுவரர்

## சிவபரம்பொருளின் பருமை, நுண்மைத் திருக்காட்சி காணல்

திருவாசகம் மாணிக்கவாசகர்
திருவண்டப்பகுதி ( வரிகள் 29 முதல் 65 வரை ) 8 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்நேர் இல்லோன் தானே காண்க
ஏனத் தொல் எயிறு அணிந்தோன் காண்க
கானப் புலிஉரி அரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்
இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க
அன்னதொன்று அவ்வயின் அறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன் மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க
சொற்பதம் கடந்த தொல்லோன் காண்க
சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையில் படுவோன் காண்க
ஒருவன் என்னும் ஒருவன் காண்க
விரிபொழில் முழுதா விரிந்தோன் காண்க
அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க
இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க
அரியதில் அரிய அரியோன் காண்க
மருவி எப்பொருளும் வளர்ப்போன் காண்க
நூல் உணர்வு உணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழா விரிந்தோன் காண்க
அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க

நிற்பதும் செல்வதும் ஆனோன் காண்க
கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க
யாவரும் பெறஉறும் ஈசன் காண்க
தேவரும் அறியாச் சிவனே காண்க
பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க
கண்ணால் யானும் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவன் என யானும் தேறினன் காண்க
அவன் எனை ஆட்கொண்டு அருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளும் தானே உடனே காண்க

திருச்சிற்றம்பலம்



பொது திருநாவுக்கரசர்
நின்ற திருத்தாண்டகம் **6** ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

இருநிலனா தீயாகி நீருமாகி
இயமானனா எறியும் காற்று மாகி
அருநிலைய திங்களா ஞாயிறாகி
ஆகாசமா அட்ட மூர்த்தியாகி
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருவும் தம்முருவும் தாமேயாகி
நெருநலையா இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே. 1

மண்ணாகி விண்ணாகி மலையுமாகி
வயிரமுமா மாணிக்கம் தானேயாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியுமாகிக்
கலையாகிக் கலைஞானம் தானேயாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோர் ஆணுமாகிப்
பிரளயத்துக்கு அப்பால் ஓர் அண்டமாகி
எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்துமாகி
எழுஞ்சுடரா எம்மடிகள் நின்றவாறே. 2

கல்லாகிக் களறாகிக் கானுமாகிக்
காவிரியா க் கால் ஆறா க் கழியுமாகிப்
புல்லாகிப் புதலாகிப் பூடுமாகிப்
புரமாகிப் புரமூன்றும் கெடுத்தானாகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளுமாகிச்
சுலாவாகிச் சுலாவுக்கோர் சூழலாகி
நெல்லாகி நிலனாகி நீருமாகி
நெடுஞ்சுடரா நிமிர்ந்தடிகள் நின்றவாறே. 3

காற்றாகிக் கார்முகிலா  க் காலம் மூன்றா  க்
        கனவாகி நனவாகிக் கங்குலாகிக்
கூற்றாகிக் கூற்றுதைத்த கொல் களிறுமாகிக்
        குரைகடலா  க் குரைகடற்கோர் கோமானுமா
நீற்றானா  நீறேற்ற மேனியாகி
        நீள்விசும்பா  நீள் விசும்பின் உச்சியாகி
ஏற்றானா  ஏறூர்ந்த செல்வனாகி
        எழுஞ்சுடரா  எம்மடிகள் நின்றவாறே. 4

தீயாகி நீராகித் திண்மையாகித்
        திசையாகி அத்திசைக்கோர் தெ  வமாகித்
தாயாகித் தந்தையா  ச் சார்வுமாகித்
        தாரகையும் ஞாயிறும் தண்மதியுமாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற
        இரதங்கள் நுகர்வானும் தானேயாகி
நீயாகி நானாகி நேர்மையாகி
        நெடுஞ்சுடரா  நிமிர்ந்தடிகள் நின்றவாறே. 5

அங்கமா  ஆதியா  வேதமாகி
        அருமறையோடு ஐம்பூதம் தானேயாகிப்
பங்கமா  பலசொல்லும் தானேயாகிப்
        பால் மதியோடு ஆதியா  ப் பான்மையாகிக்
கங்கையா  க் காவிரியா  க் கன்னியாகிக்
        கடலாகி மலையாகிக் கழியுமாகி
எங்குமா  ஏறூர்ந்த செல்வனாகி
        எழுஞ்சுடரா  எம்மடிகள் நின்றவாறே. 6

மாதா பிதாவாகி மக்களாகி
        மறிகடலும் மால் விசும்பும் தானேயாகிக்
கோதாவிரியா  க் குமரியாகிக்
        கொல்புலித்தோல் ஆடைக் குழகனாகிப்

போதாய மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பறுக்கும் புனிதனாகி
ஆதானும் என நினைந்தார்க்கு எளிதேயாகி
அழல் வண்ண வண்ணர்தாம் நின்றவாறே. 7

ஆவாகி ஆவினில் ஐந்துமாகி
அறிவாகி அழலாகி அவியுமாகி
நாவாகி நாவுக்கோர் உரையுமாகி
நாதனா வேதத்தின் உள்ளோனாகிப்
பூவாகிப் பூவுக்கோர் நாற்றமாகிப்
புக்குளால் வாசமா நின்றானாகித்
தேவாகித் தேவர் முதலுமாகிச்
செழுஞ்சுடரா ச் சென்றடிகள் நின்றவாறே. 8

நீராகி நீளகலந் தானேயாகி
நிழலாகி நீள் விசும்பின் உச்சியாகிப்
பேராகிப் பேருக்கோர் பெருமையாகிப்
பெருமதில்கள் மூன்றினையும் எ தானாகி
ஆரேனுந் தன்னடைந்தார் தம்மை எல்லாம்
ஆட்கொள்ளவல்ல எம் ஈசனார் தாம்
பாராகிப் பண்ணாகிப் பாடலாகிப்
பரஞ்சுடரா ச் சென்றடிகள் நின்றவாறே. 9

மாலாகி நான்முகனா மாபூதமா
மருக்கமா அருக்கமா மகிழ்வுமாகிப்
பாலாகி எண்திசைக்கும் எல்லையாகிப்
பரப்பாகிப் பரலோகம் தானேயாகிப்
பூலோக புவலோக சுவலோகமா ப்
பூதங்களா ப் புராணன் தானேயாகி
ஏலாதனவெல்லாம் ஏல்விப்பானா
எழுஞ்சுடரா எம்மடிகள் நின்றவாறே. 10

**இறைவி** : கருந்தார் குழலி – **இறைவர்** : அக்னிபுரீஸ்வரர்

திருவையாறு திருநாவுக்கரசர்
திருத்தாண்டகம் **6 ஆம் திருமுறை**

திருச்சிற்றம்பலம்

ஓசை ஒலியெலாம் ஆனா நீயே
உலகுக்கு ஒருவனா நின்றா நீயே
வாசமலர் எலாம் ஆனா நீயே
மலையான் மருகனா நின்றா நீயே
பேசப் பெரிதும் இனியா நீயே
பிரானா அடி என்மேல் வைத்தா நீயே
தேச விளக்கெலாம் ஆனா நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ. 1

நோக்கரிய திருமேனி உடையா நீயே
நோவாமே நோக்கு அருள வல்லா நீயே
காப்பரிய ஐம்புலனும் காத்தா நீயே
காமனையும் கண் அழலால் கா ந்தா நீயே
ஆர்ப்பரிய மா நாகம் ஆர்த்தா நீயே
அடியான் என்று அடி என்மேல் வைத்தா நீயே
தீர்ப்பரிய வல்வினை நோ தீர்ப்பா நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ. 2

கனத்தகத்துக் கடுஞ் சுடரா நின்றா நீயே
கடல் வரை வான் ஆகாயம் ஆனா நீயே
தனத்தகத்துத் தலை கலனாக் கொண்டா நீயே
சார்ந்தாரைத் தகைந்து ஆள வல்லா நீயே
மனத்திருந்த கருத்து அறிந்து முடிப்பா நீயே
மலர்ச்சேவடி என்மேல் வைத்தா நீயே
சினத்திருந்த திரு நீலகண்டன் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ. 3

வான் உற்ற மா மலைகள் ஆனா நீயே
வடகயிலை மன்னி இருந்தா நீயே
ஊன் உற்ற ஒளி மழுவாள் படையா நீயே
ஒளி மதியோடு அரவு புனல் வைத்தா நீயே
ஆன் உற்ற ஐந்தும் அமர்ந்தா நீயே
அடியான் என்று அடி என்மேல் வைத்தா நீயே
தேன் உற்ற சொல் மடவாள் பங்கன் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ. 4

பெண் ஆண் பிறப்பிலியா நின்றா நீயே
பெரியார்கட்கு எல்லாம் பெரியா நீயே
உண்ணா அருநஞ்சம் உண்டா நீயே
ஊழி முதல்வனா நின்றா நீயே
கண்ணா உலகு எலாம் காத்தா நீயே
கழல் சேவடி என்மேல் வைத்தா நீயே
திண் ஆர் மழுவாள் படையா நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ. 5

உற்றிருந்த உணர்வு எலாம் ஆனா நீயே
உற்றவர்க்கு ஓர் சுற்றமா நின்றா நீயே
கற்றிருந்த கலைஞானம் ஆனா நீயே
கற்றவர்க்கு ஓர் கற்பகமா நின்றா நீயே
பெற்றிருந்த தா அவளின் நல்லா நீயே
பிரானா அடி என்மேல் வைத்தா நீயே
செற்றிருந்த திரு நீலகண்டன் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ. 6

எல்லா உலகமும் ஆனா நீயே
ஏகம்பம் மேவி இருந்தா நீயே
நல்லாரை நன்மை அறிவா நீயே
ஞானச்சுடர் விளக்கா நின்றா நீயே

பொல்லா வினைகள் அறுப்பா நீயே
புகழ்ச் சேவடி என்மேல் வைத்தா நீயே
செல்வாய செல்வம் தருவா நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ. 7

ஆவினில் ஐந்தும் அமர்ந்தா நீயே
அளவில் பெருமை உடையா நீயே
பூவினில் நாற்றமா நின்றா நீயே
போர்க் கோலம் கொண்டு எயில் எ தா நீயே
நாவில் நடு உரையா நின்றா நீயே
நண்ணி அடி என்மேல் வைத்தா நீயே
தேவர் அறியாத தேவன் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ. 8


எண்திசைக்கும் ஒண்சுடரா நின்றா நீயே
ஏகம்பம் மேய இறைவன் நீயே
வண்டு இசைக்கும் நறுங்கொன்றைத் தாரா நீயே
வாரா உலகு அருள வல்லா நீயே
தொண்டு இசைத்து உன் அடி பரவ நின்றா நீயே
தூ மலர்ச்சேவடி என்மேல் வைத்தா நீயே
திண் சிலைக்கு ஓர் சரம் கூட்ட வல்லா நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ. 9

விண்டார் புரம் மூன்றும் எ தா நீயே
விண்ணவர்க்கும் மேல் ஆகி நின்றா நீயே
கண்டாரைக் கொல்லும் நஞ்சு உண்டா நீயே
காலங்கள் ஊழியா நின்றா நீயே
தொண்டா அடியேனை ஆண்டா நீயே
தூ மலர்ச்சேவடி என்மேல் வைத்தா நீயே
திண்தோள் விட்டு எரி ஆடல் உகந்தா நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ. 10

ஆரும் அறியா இடத்தா நீயே
ஆகாயம் தேர் ஊர வல்லா நீயே
பேரும் பெரிய இலங்கை வேந்தன்
பெரிய முடிபத்து இறுத்தா நீயே
ஊரும் புரம் மூன்றும் அட்டா நீயே
ஒண் தாமரையானும் மாலும் கூடித்
தேரும் அடி என்மேல் வைத்தா நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ.

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : அறம் வளர்த்த நாயகி – **இறைவர்** : ஐயாற்றீசர்



## செப்புதற்கரிய செழுஞ்சுடர் மூர்த்தியைச் சிக்கெனப் பிடித்தல்

திருவாசகம் மாணிக்கவாசகர்
பிடித்தபத்து 8 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

உம்பர்கட்கு அரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பு எனப் பழுத்து என் குடிமுழுதாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் துணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெருமானே
எம்பொருட்டு உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே. 1

விடைவிடாது உகந்த விண்ணவர் கோவே
வினையேனுடைய மெ ப்பொருளே
முடைவிடாது அடியேன் மூத்துஅற மண்ணா
முழுப்புழுக் குரம்பையில் கிடந்து
கடைபடா வண்ணம் காத்துஎனை ஆண்ட
கடவுளே கருணை மாகடலே
இடைவிடாது உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே. 2

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆர்அமுதே
பொ ம்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே. 3

அருளுடைச் சுடரே அளிந்தது ஓர் கனியே
பெருந்திறல் அருந்தவர்க்கு அரசே
பொருள் உடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருள் இடத்து அடியார் சிந்தையுள் புகுந்த
செல்வமே சிவபெருமானே
இருள் இடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே. 4

ஒப்பு உனக்கு இல்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெ ப்பதம் அறியா வீறு இலியேற்கு
விழுமியது அளித்தது ஓர் அன்பே
செப்புதற்கு அரிய செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெருமானே
எ ப்பு இடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே. 5

அறவையேன் மனமே கோயிலாக்கொண்டு ஆண்டு
அளவு இலா ஆனந்தம் அருளிப்
பிறவிவேர் அறுத்து என்குடி முழுதாண்ட
பிஞ்ஞகா பெரிய எம்பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெருமானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே. 6

பாசவேர் அறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமாறு அடியனேற்கு அருளிப்
பூசனை உகந்து என் சிந்தையுள் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே

தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெருமானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே. 7

அத்தனே அண்டர் அண்டமா நின்ற
ஆதியே யாதும் ஈறில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெருமானே
பித்தனே எல்லா உயிருமா த் தழைத்துப்
பிழைத்தவை அல்லையா நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே. 8

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி
உலப்பு இலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே. 9

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்நெடுங் கோயிலாப் புகுந்துஎன்
என்புஎலாம் உருக்கி எளியையா ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக்கு எலாம் அறுத்த நற்சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே. 10

**இறைவி** : பெரியநாயகி – **இறைவர்** : திருத்தோணிபுரீசுவரர்

திருவதிகை வீரட்டானம் திருநாவுக்கரசர்
பண் : திருவடித் திருத்தாண்டகம் **6** ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

அரவணையான் சிந்தித்து அரற்றும் அடி
அருமறையான் சென்னிக்கு அணியாம் அடி
சரவணத்தான் கைதொழுது சாரும் அடி
சார்ந்தார்கட்கு எல்லாம் சரணாம் அடி
பரவுவார் பாவம் பறைக்கும் அடி
பதினெண் கணங்களும் பாடும் அடி
திரைவிரவு தென் கெடில நாடன் அடி
திருவீரட்டானத்து எம் செல்வன் அடி. 1

கொடுவினையார் என்றும் குறுகா அடி
குறைந்தடைந்தார் ஆழாமைக் காக்கும் அடி
படுமுழவம் பாணி பயிற்றும் அடி
பதைத்து எழுந்த வெம்கூற்றைப் பா ந்த அடி
கடுமுரண் ஏறூர்ந்தான் கழல் சேவடி
கடல் வையம் காப்பான் கருதும் அடி
நெடு மதியம் கண்ணி அணிந்தான் அடி
நிறை கெடில வீரட்டம் நீங்கா அடி. 2

வைதெழுவார் காமம் பொ போகா அடி
வஞ்ச வலைப்பாடு ஒன்று இல்லா அடி
கைதொழுது நாம் ஏத்திக் காணும் அடி
கணக்கு வழக்கைக் கடந்த அடி
நெ தொழுது நாம் ஏத்தி ஆட்டும் அடி
நீள் விசும்பை ஊடறுத்து நின்ற அடி
தெ வப் புனல் கெடில நாடன் அடி
திருவீரட்டானத்து எம் செல்வன் அடி. 3

அரும்பித்த செஞ்ஞாயிறு ஏ  க்கும் அடி
அழகு எழுதல் ஆகா அருட் சேவடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்த அடி
சோமனையும் காலனையும் கா  ந்த அடி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றும் அடி
பிழைத்தார் பிழைப்பறிய வல்ல அடி
திருந்துநீர்த் தென்கெடில நாடன் அடி
திருவீரட்டானத்து எம் செல்வன் அடி. 4

ஒரு காலத்து ஒன்றாகி நின்ற அடி
ஊழிதோறூழி உயர்ந்த அடி
பொரு கழலும் பல்சிலம்பும் ஆர்க்கும் அடி
புகழ்வார் புகழ்தகைய வல்ல அடி
இரு நிலத்தார் இன்புற்று அங்கு ஏத்தும் அடி
இன்புற்றார் இட்ட பூ ஏறும் அடி
திருவதிகைத் தென்கெடில நாடன் அடி
திருவீரட்டானத்து எம் செல்வன் அடி. 5

திருமகட்குச் செந்தா மரையாம் அடி
சிறந்தவர்க்குத் தேனா   விளைக்கும் அடி
பொருளவர்க்குப் பொன்னுரையா   நின்ற அடி
புகழ்வார் புகழ்தகைய வல்ல அடி
உருவிரண்டும் ஒன்றோடு ஒன்று ஒவ்வா அடி
உருவென்று உணரப் படாத அடி
திருவதிகைத் தென்கெடில நாடன் அடி
திருவீரட்டானத்து எம் செல்வன் அடி. 6

உரைமாலை எல்லாம் உடைய அடி
உரையால் உணரப்படாத அடி
வரைமாதை வாடாமை வைக்கும் அடி
வானவர்கள் தாம் வணங்கி வாழ்த்தும் அடி

அரை மாத்திரையில் அடங்கும் அடி
        அகலம் அளக்கிற்பார் இல்லா அடி
கரைமாங்கலிக் கெடில நாடன் அடி
        கமழ் வீரட்டானக் காபாலி அடி. 7

நறுமலரா  நாறும் மலர்ச் சேவடி
        நடுவா  உலகம் நாடாய அடி
செறிகதிரும் திங்களுமா  நின்ற அடி
        தீத்திரளா  உள்ளே திகழ்ந்த அடி
மறுமதியை மாசு கழுவும் அடி
        மந்திரமும் தந்திரமும் ஆய அடி
செறிகெடில நாடர் பெருமான் அடி
        திருவீரட்டானத்து எம் செல்வன் அடி. 8

அணியனவும் சேயனவும் அல்லா அடி
        அடியார்கட்கு ஆரமுதம் ஆய அடி
பணிபவர்க்குப் பாங்காக வல்ல அடி
        பற்றற்றார் பற்றும் பவள அடி
மணியடி பொன்னடி மாண்பாம் அடி
        மருந்தா  ப் பிணிதீர்க்க வல்ல அடி
தணிபாடு தண்கெடில நாடன் அடி
        தகைசார் வீரட்டத் தலைவன் அடி. 9

அந்தாமரைப் போது அலர்ந்த அடி
        அரக்கனையும் ஆற்றல் அழித்த அடி
முந்தாகி முன்னே முளைத்த அடி
        முழுங்கு அழலா  நீண்ட எம்மூர்த்தி அடி
பந்தாடு மெல்விரலாள் பாகன் அடி
        பவளத் தடவரையே போல்வான் அடி
வெந்தார் சுடலை நீறு ஆடும் அடி
        வீரட்டம் காதல் விமலன் அடி. 10

**இறைவி** : திரிபுரசுந்தரி – **இறைவர்** : வீரட்டநாதர்

திருச்சிவபுரம் திருஞானசம்பந்தர்
பண் : நட்டபாடை 1 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

புவம் வளி கனல் புனல் புவி கலை உரை மறை
திரிகுணம் அமர் நெறி
திவம் மலிதரு சுரர் முதலியர் திகழ்தரும்
உயிர் அவை அவை தம
பவம் மலி தொழில் அது நினைவொடு பதுமநல்
மலர் அது மருவிய
சிவனது சிவபுரம் நினைபவர் செழுநிலன்
இனிநிலை பெறுவரே. 1

மலை பல வளர் தரு புவிஇடை மறை தரு
வழி மலி மனிதர்கள்
நிலை மலி சுரர் முதல் உலகுகள் நிலைபெறு
வகை நினைவொடு மிகும்
அலைகடல் நடுவு அறிதுயில் அமர் அரிஉரு
இயல்பரன் உறைபதி
சிலைமலி சிவபுரம் நினைபவர் திரு
மகளொடு திகழ்வரே. 2

பழுது இல கடல் புடை தழுவிய படி முதலிய
உலகுகள் மலி
குழுவிய சுரர் பிறர் மனிதர்கள் குலம் மலி
தரும் உயிர் அவைஅவை
முழுவதும் அழி வகை நினைவொடு முதல் உருவு
இயல் பரன் உறை பதி
செழு மணி அணி சிவபுரநகர் தொழும் அவர்
புகழ மிகும் உலகிலே. 3

நறை மலிதரும் அளறொடு முகை நகுமலர்
        புகை மிகு வளர் ஒளி
நிறை புனல்கொடு தனை நினைவொடு நியதமும்
        வழிபடும் அடியவர்
குறைவு இல பதம் அணை தர அருள் குணம் உடை
        இறை உறை வன பதி
சிறை புனல் அமர் சிவபுரம் அது நினைபவர்
        செயமகள் தலைவரே. 4

சினம் மலி அறுபகை மிகு பொறி சிகைதரு
        வகை வளி நிறுவிய
மனன் உணர்வொடு மலர்மிசை எழுதரு பொருள்
        நியதமும் உணர்பவர்
தனது எழில் உருஅதுகொடு அடை தகு பரன்
        உறைவது நகர் மதில்
கனம் மருவிய சிவபுரம் நினைபவர்
        கலைமகள் தர நிகழ்வரே. 5

சுருதிகள் பல நல முதல் கலை துகள் அறு
        வகை பயில்வொடு மிகு
உருவு இயல் உலகுஅவை புகழ்தர வழி ஒழுகும்
        மெ உறு பொறி ஒழி
அருதவம் முயல்பவர் தனது அடி அடை வகை
        நினை அரன் உறை பதி
திரு வருள் சிவபுரம் நினைபவர் திகழ் குலன்
        நிலன் இடை நிகழுமே. 6

கதம் மிகு கருஉருவொடு உகிர்இடைவட
        வரை கண கணஎன
மதம் மிகு நெடுமுகன் அமர் வளைமதி திகழ்
        எயிறுஅதன் நுதிமிசை

இதம் அமர் புவிஅது நிறுவிய எழில் அரி
வழிபட அருள்செ த
பதம் உடையவன் அமர் சிவபுரம் நினைபவர்
நிலவுவர் படியிலே. 7

அசைவு உறு தவ முய வினில் அயன் அருளினில்
வரு வலிகொடு சிவன்
இசை கயிலையை எழுதரு வகை இருபது
கரம்அவை நிறுவிய
நிசிசரன் முடிஉடைதர ஒரு விரல்பணி
கொளுமவன் உறை பதி
திசை மலி சிவபுரம் நினைபவர் செழுநிலன்
இனி நிகழ்வு உடையரே. 8

அடல் மலி படை அரி அயனொடும் அறிவு அரியதொர்
அழல் மலிதரு
சுடர் உருவொடு நிகழ் தர அவர் வெருவொடு
துதிஅது செய எதிர்
விடம் மலி களம் நுதல் அமர் கண் அது உடை உரு
வெளிபடுமவன் அவன்நகர்
திடம்மலி பொழில் எழில் சிவபுரம் நினைபவர்
வழி புவி திகழுமே. 9


குணம் அறிவுகள் நிலைஇல பொருள் உரை மருவிய
பொருள்களும் இல
திணம் எனுமவரொடு செதுமதி மிகு
சமணரும் மலி தமது கை
உணல் உடையவர் உணர்வு அருபரன் உறைதரு
பதி உலகினில் நல
கணம் மருவிய சிவபுரம் நினைபவர் எழில்
உரு உடையவர்களே. 10

திகழ் சிவபுர நகர் மருவிய சிவன் அடி
இணை பணி சிரபுர
நகர் இறை தமிழ்விரகனது உரை நலம்மலி
ஒருபதும் நவில்பவர்
நிகழ்குலம் நிலநிறை திருவுரு நிகரில
கொடை மிகு சயமகள்
புகழ் புவி வளர் வழி அடிமையின் மிகை புணர்
தர நலம் மிகுவரே. 11

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : சிங்காரவல்லி – **இறைவர்** : சிவபுரநாதர்





# போற்றிப் பதிகங்கள்

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

நல்வினை, தீவினை என்ற இரண்டு இருளும் சேராதவர் நம் இறைவர். அவருடைய புகழைப் புகழ்பவருக்கு இருள்சேர் இருவினையும் சேராது என்பது குறள் நெறி. நம் மாணிக்கவாசகரும் போற்றிப் புகழ்ந்திருந்து பொ கெட்டு மெ யானார், மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே என்று அருளியிருக்கிறார்.

**போற்றி என்பார் அமரர் புனிதன் அடி**
**போற்றி என்பார் அசுரர் புனிதன் அடி**
**போற்றி என்பார் மனிதர் புனிதன் அடி**
**போற்றி என் அன்புள் பொலிய வைத்தேனே**

என்பது திருமந்திரம். ஆக, உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால் முருக வாங்கிக் கடைய முன்நிற்கும் முதல்வனை மனத்தால், வாக்கால், காயத்தால் போற்றிப் புகழ்ந்திருந்து பொ கெட்டு மெ யாவதற்கு இப் பதிகங்களை பாடி பயன்பெறுவோம்.

திரு அதிகை வீரட்டானம் திருநாவுக்கரசர்
போற்றித் திருத்தாண்டகம் 6 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

எல்லாஞ் சிவனென்ன நின்றா போற்றி
எரிசுடரா நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாட் படையா போற்றி
கொல்லுங் கூற்றொன்றை உதைத்தா போற்றி
கல்லாதார் காட்சிக்கு அரியா போற்றி
கற்றார் இடும்பை களைவா போற்றி
வில்லால் வியனரணம் எ தா போற்றி
வீரட்டங் காதல் விமலா போற்றி 1

பாட்டுக்கும் ஆட்டுக்கும் பண்பா போற்றி
பல்லூழியாய படைத்தா போற்றி
ஓட்டகத்தே யூணா உகந்தா போற்றி
உள்குவார் உள்ளத்து உறைவா போற்றி
காட்டகத்தே ஆடல் மகிழ்ந்தா போற்றி
கார்மேக மன்ன மிடற்றா போற்றி
ஆட்டுவதோர் நாகம் அசைத்தா போற்றி
அலைகெடில வீரட்டத்து ஆள்வா போற்றி 2

முல்லையங் கண்ணி முடியா போற்றி
முழுநீறு பூசிய மூர்த்தி போற்றி
எல்லை நிறைந்த குணத்தா போற்றி
ஏழ்நரம்பின் ஓசை படைத்தா போற்றி
சில்லைச் சிரைத்தலையில் ஊணா போற்றி
சென்றடைந்தார் தீவினைகள் தீர்ப்பா போற்றி
தில்லைச் சிற்றம்பலம் மேயா போற்றி
திரு வீரட்டானத்து எம் செல்வா போற்றி 3

சாம்பார் அகலத்து அணிந்தா போற்றி
தவநெறிகள் சாதித்து நின்றா போற்றி
கூம்பித் தொழுவார் தங் குற்றேவலைக்
குறிக்கொண்டிருக்கும் குழகா போற்றி
பாம்பும் மதியும் புனலும் தம்மிற்
பகை தீர்த்து உடன்வைத்த பண்பா போற்றி
ஆம்பல் மலர்கொண்டு அணிந்தா போற்றி
அலைகெடில வீரட்டத்து ஆள்வா போற்றி 4

நீறேறு நீல மிடற்றா போற்றி
நிழல் திகழும் வெண்மழுவாள் வைத்தா போற்றி
கூறேறு உமையொரு பால் கொண்டா போற்றி
கோளரவம் ஆட்டுங் குழகா போற்றி
ஆறேறு சென்னி உடையா போற்றி
அடியார்கட்கு ஆரமுதமானா போற்றி
ஏறேற என்றும் உகப்பா போற்றி
இருங்கெடில வீரட்டத்து எந்தா போற்றி 5

பாடுவார் பாடல் உகப்பா போற்றி
பழையாற்றுப் பட்டீச்சுரத்தா போற்றி
வீடுவார் வீடருள வல்லா போற்றி
வேழத்து உரிவெருவப் போர்த்தா போற்றி
நாடுவார் நாடற்கு அரியா போற்றி
நாகம் அரைக்கசைத்த நம்பா போற்றி
ஆடும் ஆன் ஐந்தும் உகப்பா போற்றி
அலைகெடில வீரட்டத்து ஆள்வா போற்றி 6

மண்துளங்க ஆடல் மகிழ்ந்தா போற்றி
மால்கடலும் மால்விசும்பும் ஆனா போற்றி
விண்துளங்க மும்மதிலும் எ தா போற்றி
வேழத்து உரி மூடும் விகிர்தா போற்றி

பண் துளங்கப் பாடல் பயின்றா போற்றி
பார் முழுதும் ஆய பரமா போற்றி
கண்துளங்கக் காமனை முன் கா ந்தா போற்றி
கார்க் கெடிலங் கொண்ட கபாலி போற்றி 7

வெஞ்சின வெள்ளேறு ஊர்தியுடையா போற்றி
விரிசடை மேல் வெள்ளம் படைத்தா போற்றி
துஞ்சாப் பலிதேரும் தோன்றால் போற்றி
தொழுத கை துன்பம் துடைப்பா போற்றி
நஞ்சொடுங்குங் கண்டத்து நாதா போற்றி
நான்மறையோடு ஆறங்கமானா போற்றி
அஞ்சொலாள் பாகம் அமர்ந்தா போற்றி
அலைகெடில வீரட்டத்து ஆள்வா போற்றி 8

சிந்தையா நின்ற சிவனே போற்றி
சீ பர்ப்பதஞ் சிந்தை செ தா போற்றி
புந்தியா ப் புண்டரிகத்து உள்ளா போற்றி
புண்ணியனே போற்றி புனிதா போற்றி
சந்தியா நின்ற சதுரா போற்றி
தத்துவனே போற்றி என் தாதா போற்றி
அந்தியா நின்ற அரனே போற்றி
அலைகெடில வீரட்டத்து ஆள்வா போற்றி 9

முக்கணா போற்றி முதல்வா போற்றி
முருகவேள் தன்னைப் பயந்தா போற்றி
தக்கணா போற்றி தருமா போற்றி
தத்துவனே போற்றி என் தாதா போற்றி
தொக்கணா என்றிருவர் தோள் கைகூப்பத்
துளங்காது எரிசுடரா நின்றா போற்றி
எக்கண்ணுங் கண்ணிலேன் எந்தா போற்றி
எறிகெடில வீரட்டத்து ஈசா போற்றி 10

**இறைவி** : திரிபுரசுந்தரி – **இறைவர்** : வீரட்டநாதர்

திருவா ர் — திருநாவுக்கரசர்
போற்றித் திருத்தாண்டகம் — 6 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி
 கழலடைந்தார் செல்லும் கதியே போற்றி
அற்றவர்கட்கு ஆரமுதம் ஆனா போற்றி
 அல்லல் அறுத்து அடியேனை ஆண்டா போற்றி
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி
 வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர் தம் புரமெரித்த சிவனே போற்றி
 திருமூலட்டானனே போற்றி போற்றி. 1

வங்கமலி கடல் நஞ்சம் உண்டா போற்றி
 மதயானை ஈருரிவை போர்த்தா போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாரா போற்றி
 கொல்புலித்தோல் ஆடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள் தம் இறைவா போற்றி
 ஆலமர நீழலறஞ் சொன்னா போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
 திருமூலட்டானனே போற்றி போற்றி. 2

மலையான் மடந்தை மணாளா போற்றி
 மழவிடையா நின் பாதம் போற்றி போற்றி
நிலையாக என் நெஞ்சில் நின்றா போற்றி
 நெற்றி மேல் ஒற்றைக் கண் உடையா போற்றி
இலையார்ந்த மூவிலை வேல் ஏந்தீ போற்றி
 ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனா போற்றி
சிலையால் அன்று எயிலெரித்த சிவனே போற்றி
 திருமூலட்டானனே போற்றி போற்றி. 3

பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப் படையுடையா போற்றி போற்றி
மன்னியசீர் மறை நான்கும் ஆனா போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க்கு உண்மையனே போற்றி போற்றி
உலகுக்கு ஒருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையா போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி. 4

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியம் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளில் ஆடல் உகந்தா போற்றி
தூ நீறு மெ க்கணிந்த சோதி போற்றி
செஞ்சடையா நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி. 5

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத்து அயனோடு மாலும் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி. 6

வம்புலவு கொன்றைச் சடையா போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தா போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி

நம்புமவர்க்கு அரும்பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறங்கம் ஆனா போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி. 7

உள்ளமா உள்ளத்தே நின்றா போற்றி
உகப்பார் மனத்து என்றும் நீங்கா போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர் கோன் தோள் துணித்த மைந்தா போற்றி
வெள்ளை ஏறேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கு மேலோர்க்கும் மேலா போற்றி
தெள்ளு நீர்க் கங்கைச் சடையா போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி.
8

பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்கும் தேவே போற்றி
திருமாலுக்கு ஆழி அளித்தா போற்றி
சாவாமே காத்தென்னை ஆண்டா போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியா போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி.
9

பிரமன் தன் சிரமரிந்த பெரியோ போற்றி
பெண்ணுருவோடு ஆணுருவா நின்றா போற்றி
கரம் நான்கும் முக்கண்ணும் உடையா போற்றி
காதலிப்பார்க்கு ஆற்ற எளியா போற்றி
அருமருந்த தேவர்க்கு அரசே போற்றி
அன்று அரக்கன் ஐந்நான்கு தோளும் தாளும்
சிரம் நெரித்த சேவடியா போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி. 10

**இறைவி** : கமலாம்பிகை – **இறைவர்** : புற்றிடங்கொண்ட நாதர்

திருக்கயிலை திருநாவுக்கரசர்
போற்றித் திருத்தாண்டகம் **6** ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றா போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டா போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தா போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தா போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனா போற்றி
காற்றாகி எங்கும் கலந்தா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

பிச்சாடல் பேயோடு உகந்தா போற்றி
பிறவியறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தா போற்றி
மருவி என் சிந்தை புகுந்தா போற்றி
பொ ச்சார் புரமூன்றும் எ தா போற்றி
போகாது என் சிந்தை புகுந்தா போற்றி
கச்சாக நாகம் அசைத்தா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

மருவார் புரமூன்றும் எ தா போற்றி
மருவி என் சிந்தை புகுந்தா போற்றி
உருவாகி என்னைப் படைத்தா போற்றி
உள்ளாவி வாங்கி ஒளித்தா போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவா போற்றி
கருவாகி ஓடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 3

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்து என்றன் சிந்தை புகுந்தா போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலா நிமிர்ந்தா போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனா நின்றா போற்றி
கானத் தீ ஆடல் உகந்தா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 4

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலா நிமிர்ந்தா போற்றி
பேராகி எங்கும் பரந்தா போற்றி
பெயராது என் சிந்தை புகுந்தா போற்றி
நீராவி ஆன நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையும் இல்லா போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

சில்லுருவா சென்று திரண்டா போற்றி
தேவரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தா போற்றி
போகாது என் சிந்தை புகுந்தா போற்றி
பல்லுயிரா ப் பார்தோறும் நின்றா போற்றி
பற்றி உலகை விடாதா போற்றி
கல்லுயிரா நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6

பண்ணின் இசையாகி நின்றா போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பா போற்றி
எண்ணும் எழுத்தும் சொல் ஆனா போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி

விண்ணும் நிலனும் தீ ஆனா போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றா போற்றி
கண்ணின் மணியாகி நின்றா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

இமையாது உயிராது இருந்தா போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாகம் ஆகத் தணைத்தா போற்றி
ஊழி ஏழான ஒருவா போற்றி
அமையா வரு நஞ்சம் ஆர்ந்தா போற்றி
ஆதி புராணனா நின்றா போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

மூவா பிறவா இறவா போற்றி
முன்னமே தோன்றி முளைத்தா போற்றி
தேவாதி தேவர் தொழும் தேவே போற்றி
சென்றேறி எங்கும் பரந்தா போற்றி
ஆவா அடியேனுக்கு எல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவா கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 9

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகலம் உடையா போற்றி
அடியும் முடியும் இகலி போற்றி
அங்கொன்று அறியாமை நின்றா போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தா போற்றி
கோயிலா என் சிந்தை கொண்டா போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 10

உண்ணாது உறங்காது இருந்தா போற்றி
ஓதாதே வேதம் உணர்ந்தா போற்றி
எண்ணா இலங்கைக் கோன் தன்னைப் போற்றி
இறை விரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணாரிசையின் சொல் கேட்டா போற்றி
பண்டே என் சிந்தை புகுந்தா போற்றி
கண்ணா உலகுக்கு நின்றா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 11

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலை
போற்றித் திருத்தாண்டகம்

திருநாவுக்கரசர்
**6** ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பொறையுடைய பூமி நீரானா போற்றி
பூதப்படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சின் இடையா போற்றி
நீங்காது என்னுள்ளத்து இருந்தா போற்றி
மறையுடைய வேதம் விரித்தா போற்றி
வானோர் வணங்கப் படுவா போற்றி
கறையுடைய கண்டமுடையா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

முன்பாகி நின்ற முதலே போற்றி
மூவாத மேனி முக்கண்ணா போற்றி
அன்பாகி நின்றார்க்கு அணியா போற்றி
ஆறேறு சென்னிச் சடையா போற்றி

என்பாக எங்கும் அணிந்தா போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
கண்பாவி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

மாலையெழுந்த மதியே போற்றி
மன்னி என் சிந்தை இருந்தா போற்றி
மேலை வினைகள் அறுப்பா போற்றி
மேலாடு திங்கள் முடியா போற்றி
ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி
அடியார்கட்கு ஆரமுதமானா போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 3

உடலின் வினைகள் அறுப்பா போற்றி
ஒள்ளெரி வீசும் பிரானே போற்றி
படருஞ் சடைமேல் மதியா போற்றி
பல்கணக் கூத்தப் பிரானே போற்றி
சுடரில் திகழ்கின்ற சோதி போற்றி
தோன்றி என் உள்ளத்திருந்தா போற்றி
கடலில் ஒளியாய முத்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4

மைசேர்ந்த கண்டம் உடையா போற்றி
மாலுக்கும் ஓராழி ஈந்தா போற்றி
பொ சேர்ந்த சிந்தை புகாதா போற்றி
போகாது என் உள்ளத்து இருந்தா போற்றி
மெ சேரப் பால் வெண்ணீறாடி போற்றி
மிக்கார்கள் ஏத்தும் விளக்கே போற்றி
கைசேர் அனலேந்தி யாடீ போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

ஆறேறு சென்னி முடியா போற்றி
அடியார்கட்கு ஆரமுதா நின்றா போற்றி
நீறேறு மேனி உடையா போற்றி
நீங்காது என்னுள்ளத்து இருந்தா போற்றி
கூறேறும் அங்கை மழுவா போற்றி
கொள்ளுங் கிழமை ஏழானா போற்றி
காறேறு கண்ட மிடற்றா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6

அண்டம் ஏழன்று கடந்தா போற்றி
ஆதி புராணனா நின்றா போற்றி
பண்டை வினைகள் அறுப்பா போற்றி
பாரோர் விண்ணேத்தப் படுவா போற்றி
தொண்டர் பரவும் இடத்தா போற்றி
தொழில் நோக்கி ஆளுஞ் சுடரே போற்றி
கண்டம் கறுக்கவும் வல்லா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

பெருகி யலைக்கின்ற ஆறே போற்றி
பேரா நோ பேர விடுப்பா போற்றி
உருகி நினைவார்தம் உள்ளா போற்றி
ஊனந் தவிர்க்கும் பிரானே போற்றி
அருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி
யாரும் இகழப்படாதா போற்றி
கருகிப் பொழிந்தோடு நீரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

செ ய மலர்மேலோன் கண்ணன் போற்றித்
தேடி உணராமை நின்றா போற்றி
பொ யா நஞ்சுண்ட பொறையே போற்றி
பொருளாக என்னை ஆட்கொண்டா போற்றி

மெ  யாக ஆனஞ்சு உகந்தா  போற்றி
மிக்கார்கள் ஏத்தும் குணத்தா  போற்றி
கையானை மெ  த்தோல் உரித்தா  போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 9

மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி
மேலாடு புரமூன்றும் எ  தா  போற்றி
சீலத்தான் தென்னிலங்கை மன்னன் போற்றிச்
சிலையெடுக்க வாயலற வைத்தா  போற்றி
கோலத்தாற் குறைவில்லான் தன்னை அன்று
கொடிதாகக் கா  ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையுங் கா  ந்தா  போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 10

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலை — திருநாவுக்கரசர்
போற்றித் திருத்தாண்டகம் — **6** ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பாட்டான நல்ல தொடையா  போற்றி
பரிசை அறியாமை நின்றா  போற்றி
சூட்டான திங்கள் முடியா  போற்றி
தூமாலை மத்தம் அணிந்தா  போற்றி
ஆட்டானது அஞ்சும் அமர்ந்தா  போற்றி
அடங்கார் புரமெரிய நக்கா  போற்றி
காட்டானை மெ  த்தோல் உரித்தா  போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

அதிரா வினைகள் அறுப்பா போற்றி
ஆல நிழற்கீழ் அமர்ந்தா போற்றி
சதுரா சதுரக் குழையா போற்றி
சாம்பர் மெ பூசுந் தலைவா போற்றி
எதிரா உலகம் அமைப்பா போற்றி
என்றும் மீளா அருள் செ வா போற்றி
கதிரார் கதிருக்கோர் கண்ணே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

செ யா கரியா வெளியா போற்றி
செல்லாத செல்வம் உடையா போற்றி
ஐயா பெரியா சிறியா போற்றி
ஆகாச வண்ணம் உடையா போற்றி
வெ யா தணியா அணியா போற்றி
வேளாத வேள்வி உடையா போற்றி
கையார் தழலார் விடங்கா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 3

ஆட்சி உலகை உடையா போற்றி
அடியார்க்கு அமுதெலாம் ஈவா போற்றி
சூட்சி சிறிதும் இலாதா போற்றி
சூழ்ந்த கடல் நஞ்சம் உண்டா போற்றி
மாட்சி பெரிதும் உடையா போற்றி
மன்னி என் சிந்தை மகிழ்ந்தா போற்றி
காட்சி பெரிதும் அரியா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4

முன்னியா நின்ற முதல்வா போற்றி
மூவாத மேனியுடையா போற்றி
என்னியா எந்தை பிரானே போற்றி
ஏழின் இசையே உகப்பா போற்றி

மன்னிய மங்கை மணாளா போற்றி
மந்திரமும் தந்திரமும் ஆனா போற்றி
கன்னியார் கங்கைத் தலைவா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

உரியா உலகினுக்கு எல்லாம் போற்றி
உணர்வென்னும் ஊர்வது உடையா போற்றி
எரியாய தெ வச் சுடரே போற்றி
யேசுமா முண்டி உடையா போற்றி
அரியா அமரர்கட்கெல்லாம் போற்றி
அறிவே அடக்கமுடையா போற்றி
கரியானுக்கு ஆழி அன்றீந்தா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6


எண்மேலும் எண்ணம் உடையா போற்றி
ஏறரிய வேறுங் குணத்தா போற்றி
பண்மேலே பாவித்து இருந்தா போற்றி
பண்ணொடி யாழ் வீணை பயின்றா போற்றி
விண்மேலும் மேலும் நிமிர்ந்தா போற்றி
மேலார்கள் மேலார்கள் மேலா போற்றி
கண்மேலுங் கண் ஒன்றுடையா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

முடியார் சடையின் மதியா போற்றி
முழு நீறு சண்ணித்த மூர்த்தி போற்றி
துடியார் இடை உமையாள் பங்கா போற்றி
சோதித்தார் காணாமை நின்றா போற்றி
அடியார் அடிமை அறிவா போற்றி
அமரர் பதியாள வைத்தா போற்றி
கடியார் புரமூன்றும் எ தா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

போற்றிசைத்து உன்னடி பரவ நின்றா போற்றி
புண்ணியனே நண்ணலரியா போற்றி
ஏற்றிசைக்கும் வான்மேல் இருந்தா போற்றி
எண்ணாயிர நூறு பேரா போற்றி
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான்முகற்கும் மாற்கும் அரியா போற்றி
காற்றிசைக்கும் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 9

திருச்சிற்றம்பலம்

*குறிப்பு : இப்பதிகத்தில் 10 ஆம் செ யுள் கிடைத்தில.*





# அடியார்களை வழிபாடு செ தல்

நமச்சிவாய வாழ்க..... நாதன் தாள் வாழ்க என்று எப்போதும் வாழ்த்திக் கொண்டு இருப்பவர்கள் சிவனடியார்கள். அவர்கள் ஆரம் கண்டிகை, ஆடையும் கந்தையே, பாரம் ஈசன் பணி அலது ஒன்றிலர் கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டாத வீரமுடையவர்கள்.

நம்முடைய அருளாளர்கள் அனைவருமே அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியா என்றே இறைவனிடத்து வேண்டியிருக்கிறார்கள். அதனாலேயே ஔவை மூதாட்டியும் **"தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிது"** என்று அருளியிருக்கிறார். அத்தகைய சிவனடியார்களைப் போற்றி அவர்களோடு கலந்திருந்து தொண்டு செ தலே சிவஞான பூசையாகும்.

**" நற்றாங்கதி அடைவோம் எனில் கெடுவீர் ஓடி வம்மின் தெற்றார் சடைமுடியான் மன்னு திருப்பெருந்துறை இறைசீர் கற்று ஆங்கு அவன் கழல் பேணிணரொடும் கூடுமின் கலந்தே"** என்பது திருவாசகம்.

திருத்தொண்டத்தொகை சுந்தரமூர்த்தி சுவாமிகள்
பண் : கொல்லிகௌவாணம் 7 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெ ப்பொருளுக்கு அடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற்கு அடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்
ஆ ரன் ஆ ரில் அம்மானுக்கு ஆளே. 1

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற்கு அடியேன்
ஏனாதி நாதன்தன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கு அடியேன்
கடவூரில் கலயன்தன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ்சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயற்கு அடியேன்
ஆ ரன் ஆ ரில் அம்மானுக்கு ஆளே. 2

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவாற்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெ ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு அடியேன்
ஆ ரன் ஆ ரில் அம்மானுக்கு ஆளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கரையன் தன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற்கு அடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆ ரன் ஆ ரில் அம்மானுக்கு ஆளே. 4

வம்பறா வரிவண்டு மணம் நாற மலரும்
மதுமலர் நற்கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டம் மிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆ ரன் ஆ ரில் அம்மானுக்கு ஆளே. 5

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல் எறிந்த சாக்கியற்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க்கு அடியேன்
கார்கொண்ட கொடைக் கழறிற்றறிவார்க்கும் அடியேன்
கடற் காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆ ரன் ஆ ரில் அம்மானுக்கு ஆளே. 6

பொ யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற் கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற்கு அடியேன்
மெ யடியான் நரசிங்க முனையரையற்கு அடியேன்
விரிதிரை சூழ் கடல்நாகை அதிபத்தற்கு அடியேன்

கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆ ரன் ஆ ரில் அம்மானுக்கு ஆளே. 7

கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவாற்கு அடியேன்
ஆ ரன் ஆ ரில் அம்மானுக்கு ஆளே. 8

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆ ரன் ஆ ரில் அம்மானுக்கு ஆளே. 9

பத்தரா ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவா ர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆ ரன் ஆ ரில் அம்மானுக்கு ஆளே. 10

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனா உலகாண்ட செங்கணார்க்கு அடியேன்
திருநீலகண்டத்துப் பாணனார்க்கு அடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமை கேட்டுவப்பார்
ஆ ரில் அம்மானுக்கு அன்பர் ஆவாரே. 11

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : கமலாம்பிகை – **இறைவர்** : புற்றிடங்கொண்ட நாதர்



**தெ வச் சேக்கிழார் பெருமான் அடியார்களின் சிந்தை பிரியாத திருத்தாண்டகம் என இப்பதிகத்தைப் போற்றி அருளுகிறார்.**

தில்லை — திருநாவுக்கரசர்

பண் : பெரிய திருத்தாண்டகம் — **6** ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழ் ஒளியைத் தேவர்கள் தம் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

கற்றானைக் கங்கை வார்சடையான் தன்னைக்
காவிரி சூழ் வலஞ்சுழியும் கருதினானை
அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள்செ வானை
ஆ ரும் புகுவானை அறிந்தோம் அன்றே
மற்று ஆரும் தன் ஒப்பார் இல்லாதானை
வானவர்கள் எப்பொழுதும் வணங்கி ஏத்தப்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

கருமானின் உரி அதளே உடையா வீக்கிக்
கனைகழல்கள் கலந்து ஒலிப்ப அனல் கை ஏந்தி
வரு மானத் திரள்தோள்கள் மட்டித்து ஆட
வளர்மதியம் சடைக்கு அணிந்து மான் நேர் நோக்கி
அரு மான வாள்முகத்தாள் அமர்ந்து காண
அமரர்கணம் முடி வணங்க ஆடுகின்ற
பெருமானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

அருந்தவர்கள் தொழுது ஏத்தும் அப்பன் தன்னை
அமரர்கள் தம் பெருமானை அரனை மூவா
மருந்து அமரர்க்கு அருள்புரிந்த மைந்தன் தன்னை
மறிகடலும் குலவரையும் மண்ணும் விண்ணும்
திருந்து ஒளிய தாரகையும் திசைகள் எட்டும்
திரி சுடர்கள் ஓர் இரண்டும் பிறவுமாய
பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல் ஞாலத்து அகத்துள் தோன்றி
வரும் துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான் புலன்கள் அகத்து அடக்கி மடவாரோடும்
பொருந்து அணைமேல் வரும் பயனைப் போக மாற்றிப்
பொது நீக்கித் தனை நினைய வல்லோர்க்கு என்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

கரும்பு அமரும் மொழி மடவாள் பங்கன் தன்னைக்
கன வயிரக்குன்று அனைய காட்சியானை
அரும்பு அமரும் பூங்கொன்றைத்தாரான் தன்னை
அருமறையோடு ஆறு அங்கம் ஆயினானைச்
சுரும்பு அமரும் கடிபொழில்கள் சூழ் தென்ஆ ர்ச்
சுடர்க்கொழுந்தைத் துளக்கு இல்லா விளக்கை மிக்க
பெரும் பொருளைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.


வரும் பயனை எழுநரம்பின் ஓசையானை
வரை சிலையா வானவர்கள் முயன்ற வாளி
அரும் பயம் செ அவுணர் புரம் எரியக் கோத்த
அம்மானை அலைகடல் நஞ்சு அயின்றான் தன்னைச்

சுரும்பு அமரும் குழல் மடவார் கடைக்கண் நோக்கில்
துளங்காத சிந்தையரா த் துறந்தோர் உள்ளப்
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

கார்ஆனை ஈர்உரிவைப் போர்வையானைக்
காமரு பூங் கச்சி ஏகம்பன் தன்னை
ஆரேனும் அடியவர்கட்கு அணியான் தன்னை
அமரர்களுக்கு அறிவு அரிய அளவு இலானைப்
பாரோரும் விண்ணோரும் பணிய நட்டம்
பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனை எண்ணில்
பேரானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

முற்றாத பால்மதியம் சூடினானை
மூஉலகம் தானாய முதல்வன்தன்னைச்
செற்றார்கள் புரம்மூன்றும் செற்றான்தன்னைத்
திகழ் ஒளியை மரகதத்தைத் தேனைப் பாலைக்
குற்றாலத்து அமர்ந்து உறையும் குழகன் தன்னைக்
கூத்து ஆடவல்லானைக் கோனை ஞானம்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

கார் ஒளிய திருமேனிச் செங்கண் மாலும்
கடிக்கமலத்து இருந்தவனும் காணா வண்ணம்
சீர் ஒளிய தழல்பிழம்பா நின்ற தொல்லைத்
திகழ் ஒளியைச் சிந்தைதனை மயக்கம் தீர்க்கும்
ஏர் ஒளியை இரு நிலனும் விசும்பும் விண்ணும்
ஏழ்உலகும் கடந்து அண்டத்து அப்பால் நின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.



# *வீடு பேறு*

**பிறப்பு என்னும் பேதமை நீங்க சிறப்பென்னும் செம்பொருள் ( சிவபெருமான் ) காண்பது அறிவு** என்றார் வள்ளுவப் பெருந்தகை. மேலும் பொருள் அல்லவற்றைப் பொருளாக எண்ணாமல் சிவனாரை வாழ்முதலாகிய பொருளாகக் கொள்ள வேண்டும். அவ்வாறு எண்ணுபவர்க்கே இருள்நீங்கி இன்பம் பயக்கும்.

**கற்றீண்டு மெ ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்றீண்டு வாரா நெறி.** – என்பது வள்ளுவம். இங்கு கற்றல் என்பது திருமுறைகளை பலகாலும் பயின்றல் என்பதாகும். இதனால் யான் எனது எனும் செருக்கு நீங்கி வானோர்க்கும் மேலான வீடுபேற்றை அடையலாம்.

அறம் பொருள் இன்பம் வீடு என்பது சைவ நெறி. திருவருட் துணையுடன் அறம் செ து பொருள் ஈட்டி, இன்பம் அடைந்த நாம் சிவனாரின் திருவடி மலரின் கீழ் இருந்து சிவானந்தத்தை நுகருதல் வீடு பேறாகும்.

திரு நல்லூர்ப் பெருமணம் திருஞானசம்பந்தர்
பண் : அந்தாளிக் குறிஞ்சி 3 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டு மெ யா த் தில
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேய நம்பானே. 1

தருமணல் ஓதஞ்சேர் தண்கடல் நித்திலம்
பருமணலாக் கொண்டு பாவை நல்லார்கள்
வருமணங் கூட்டி மணஞ்செயும் நல்லூர்ப்
பெருமணத் தான் பெண் ஓர் பாகம் கொண்டானே. 2

அன்புறு சிந்தையர் ஆகி அடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமணம் மேவி நின்று
இன்புறும் எந்தை இணையடி ஏத்துவார்
துன்புறுவார் அல்லர் தொண்டு செ வாரே. 3

வல்லியந் தோலுடை யார்ப்பது போர்ப்பது
கொல்லியல் வேழத்து உரி விரி கோவணம்
நல்லிய லார் தொழு நல்லூர்ப் பெருமணம்
புல்கிய வாழ்க்கை எம் புண்ணியனார்க்கே. 4

ஏறுகந் தீரிடு காட்டெரி யாடிவெண்
நீறுகந் தீர் நிரையார் விரி தேன் கொன்றை
நாறுகந்தீர் திரு நல்லூர்ப் பெருமணம்
வேறுகந்தீர் உமை கூறுகந்தீரே. 5

சிட்டப் பட்டார்க்கு எளியான் செங்கண் வேட்டுவப்
பட்டங் கட்டுஞ் சென்னியான் பதியாவது
நட்டக் கொட்டாட்டறா நல்லூர்ப் பெருமணத்து
இட்டப்பட்டால் ஒத்திரால் எம் பிரானிரே. 6

மேகத்த கண்டன் எண் தோளன் வெண்ணீற்று உமை
பாகத்தன் பா புலித் தோலொடு பந்தித்த
நாகத்தன் நல்லூர்ப் பெருமணத் தான் நல்ல
போகத்தன் யோகத்தையே புரிந்தானே. 7

தக்கிருந் தீரன்று தாளால் அரக்கனை
உக்கிருந் தொல்க உயர்வரைக் கீழிட்டு
நக்கிருந் தீரின்று நல்லூர்ப் பெருமணம்
புக்கிருந்தீர் எமைப் போக்கருளீரே. 8

ஏலும் தண்தாமரையானும் இயல்புடை
மாலும் தம் மாண்பு அறிகின்றிலர் மாமறை
நாலும் தம் பாட்டென்பர் நல்லூர்ப் பெருமணம்
போலும் தங் கோயில் புரிசடையார்க்கே. 9

ஆதர் அமணொடு சாக்கியர் தாஞ் சொல்லும்
பேதமை கேட்டுப் பிணக்குறுவீர் வம்மின்
நாதனை நல்லூர்ப் பெருமணம் மேவிய
வேதன தாள் தொழ வீடெளிதாமே. 10

நறும்பொழில் காழியுள் ஞானசம்பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
உறும் பொருளால் சொன்ன ஒண்தமிழ் வல்லார்க்கு
அறும் பழி பாவம் அவலம் இலரே. 11

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : வெண்ணீற்று உமை நங்கை – **இறைவர்** : சிவலோகத் தியாகேசர்

திருப்புகலூர் திருநாவுக்கரசர்
திருத்தாண்டகம் 6 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கை தொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தா
ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 1

அங்கமே பூண்டா அனல் ஆடினா
ஆதிரையா ஆல்நிழலா ஆனேறு ஊர்ந்தா
பங்கமொன்றில்லாத படர் சடையினா
பாம்பொடு திங்கள் பகைதீர்த்து ஆண்டா
சங்கை ஒன்றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே. 2

பையரவக் கச்சையா பால் வெண்ணீற்றா
பளிக்குக் குழையினா பண்ணார் இன்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகங் கொண்டா
மான்மறி கை ஏந்தினா வஞ்சக் கள்வர்
ஐவரையும் என் மேல் தர அறுத்தா
அவர் வேண்டுங் காரியமிங்கு ஆவதில்லை
பொ யுரையாது உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 3

தெருளாதார் மூவெயிலும் தீயில் வேவச்
 சிலை வளைத்துச் செங்கணையால் செற்ற தேவே
மருளாதார் தம் மனத்தில் வாட்டம் தீர்ப்பா
 மருந்தா ப் பிணி தீர்ப்பா வானோர்க்கு என்றும்
அருளாகி ஆதியா வேதமாகி
 அலர்மேலான் நீர்மேலான் ஆ ந்துங் காணாப்
பொருளாவா உன்னடிக்கே போதுகின்றேன்
 பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 4

நீரேறு செஞ்சடைமேல் நிலா வெண்திங்கள்
 நீங்காமை வைத்துகந்த நீதியானே
பாரேறு படுதலையில் பலிகொள்வானே
 பண்ட நங்கற் கா ந்தானே பாவநாசா
காரேறு முகிலனைய கண்டத்தானே
 கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே உன்னடிக்கே போதுகின்றேன்
 பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 5

விரிசடையா வேதியனே வேத கீதா
 விரிபொழில் சூழ் வெண்காட்டா மீயச் சூரா
திரிபுரங்கள் எரிசெ த தேவ தேவே
 திருவா ர்த் திருமூலட்டானம் மேயா
மருவினியார் மனத்துளா மாகாளத்தா
 வலஞ்சுழியா மாமறைக்காட்டு எந்தா என்றும்
புரிசடையா உன்னடிக்கே போதுகின்றேன்
 பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 6

தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாம்
 திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறை பாடி நட்டம் ஆடி
 நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்

காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேரா
கழுக்குன்றத்து உச்சியா கடவுளே நின்
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 7

நெ யாடி நின்மலனே நீல கண்டா
நிறைவுடையா மறைவல்லா நீதியானே
மையாடு கண்மடவாள் பாகத்தானே
மான் தோல் உடையா மகிழ்ந்து நின்றா
கொ யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியேன் நானிட்டுக் கூறி நின்று
பொ யாத சேவடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 8

துன்னஞ்சேர் கோவணத்தா தூய நீற்றா
துதைந்திலங்கு வெண்மழுவாள் கையிலேந்தித்
தன்னனையுந் தண்மதியும் பாம்பும் நீரும்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மையானே
அன்னநடை மடவாள் பாகத்தானே
அக்காரம் பூண்டானே ஆதியானே
பொன்னங் கழலடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 9

ஒருவரையும் அல்லாது உணராது உள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத்து உள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தா க்கு இல்லேன் ஏலக்
கருவரை சூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர் மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 10

**இறைவி** : கருந்தார் குழலி – **இறைவர்** : அக்னிபுரீஸ்வரர்

திரு நொடித்தான் மலை சுந்தரமூர்த்தி நாயனார்
பண் : பஞ்சமம் 7 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தானெனை முன் படைத்தான் அது அறிந்து தன் பொன்னடிக்கே
நான் என பாடல் அந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர் கொள்ள மத்த யானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறு செ தான் நொடித்தான் மலை உத்தமனே. 1

ஆனை உரித்த பகை அடியேனொடு மீளக்கொலோ
ஊனை உயிர்வெருட்டி ஒள்ளி யானை நினைந்திருந்தேன்
வானை மதித்து அமரர் வலஞ் செ தெனை ஏறவைக்க
ஆனை அருள்புரிந்தான் நொடித்தான் மலை உத்தமனே. 2

மந்திரம் ஒன்றறியேன் மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசே செயும் தொண்டன் எனை
அந்தர மால் விசும்பில் அழகானை அருள்புரிந்தது
உந் தரமோ நெஞ்சமே நொடித்தான் மலை உத்தமனே. 3

வாழ்வை உகந்த நெஞ்சே மடவார் தங்கள் வல்வினைப்பட்டு
ஆழும் உகந்த என்னை அது மாற்றி அமரர் எல்லாம்
சூழ அருள்புரிந்து தொண்டனேன் பரம் அல்லதொரு
வேழம் அருள்புரிந்தான் நொடித்தான் மலை உத்தமனே. 4

மண்ணுலகில் பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன் இன்று கண்டொழிந்தேன்
விண்ணுலகத் தவர்கள் விரும்ப வெள்ளை யானையின் மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான் மலை உத்தமனே. 5

அஞ்சினை ஒன்றி நின்று அலர் கொண்டடி சேர்வறியா
வஞ்சனை என்மனமே வைகி வான நன்னாடர் முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்துத் தொண்டனேன் பரமல்லதொரு
வெஞ்சின ஆனை தந்தான் நொடித்தான் மலை உத்தமனே. 6

நிலைகெட விண் அதிர நிலம் எங்கும் அதிர்ந்தசைய
மலையிடை யானை ஏறி வழியே வருவேன் எதிரே
அலைகடலால் அரையன் அலர் கொண்டு முன் வந்திறைஞ்ச
உலையணையாத வண்ணம் நொடித்தான் மலை உத்தமனே. 7

அரவொலி ஆகமங்கள் அறிவார் அறி தோத்திரங்கள்
விரவிய வேத ஒலி விண்ணெலாம் வந்து எதிர்ந்து இசைப்ப
வரமலி வாணன் வந்து வழி தந்தெனக்கு ஏறுவதோர்
சிரமலி யானை தந்தான் நொடித்தான் மலை உத்தமனே. 8

இந்திரன் மால் பிரமன் எழிலார் மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத்த யானை அருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவன் ஆர் என எம்பெருமான்
நந்தமர் ஊரன் என்றான் நொடித்தான் மலை உத்தமனே. 9

ஊழி தோறூழி முற்றும் உயர் பொன் நொடித்தான் மலையைச்
சூழிசை இன்கரும்பின் சுவை நாவல ஊரன் சொன்ன
ஏழிசை இன்தமிழால் இசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா அஞ்சையப்பர்க்கு அறிவிப்பதே. 10

திருச்சிற்றம்பலம்



அச்சோப் பதிகம் மாணிக்கவாசகர்
தில்லையில் அருளியது 8 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே. 1

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன் தன் கூத்தை எனக்கு
அறியும் வண்ணம் அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே. 2

பொ யெல்லாம் மெ யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்ட பிரான் தன் கழலே சேரும் வண்ணம்
ஐயன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே. 3

மண்ணதனில் பிறந்தெ த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட்டு என்னையும் தன்
சுண்ண வெண்ணீறு அணிவித்துத் தூ நெறியே சேரும் வண்ணம்
அண்ணல் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே. 4

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன் உன் அருள்பெற்றேன்
உ ஞ்சேன் நான் உடையானே அடியேனை வருக என்று
அஞ்சேல் என்று அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே. 5

வெந்து விழும் உடற்பிறவி மெ யென்று வினைபெருக்கிக்
கொந்து குழல் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத்து எனையாண்டு பரிசற என் துரிசுமறுத்து
அந்தம் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே. 6

தையலார் மையலிலே தாழ்ந்து விழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உ யுநெறி காட்டுவித்திட்டு ஓங்காரத் துட்பொருளை
ஐயன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே. 7

சாதல் பிறப்பென்னும் தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின் மிக் கணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொரு கூறுடைய பிரான் தன்கழலே சேரும் வண்ணம்
ஆதியெனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே. 8

செம்மை நலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மை மலம் அறுவித்து முதலாய முதல்வன் தான்
நம்மையும் ஓர் பொருளாக்கி நா சிவிகை ஏற்றுவித்த
அம்மை எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே. 9

திருச்சிற்றம்பலம்

**இறைவி** : சிவகாம சுந்தரி அம்மை
**இறைவர்** : ஆனந்தமா நடராசாப் பெருமான்



# பன்னிரு திருமுறைகளையும் அருளிய 27 அருளாளர்களின் திருமுறைத் தொகுப்பு

( ஆசிரியருக்கு ஒரு பாடல் )

## திருஞானசம்பந்தர்

எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்கு
இங்கே என்று அருள் புரியும் எம்பெருமான் எருதேறிக்
கொங்கேயும் மலர்ச்சோலைக் குளிர் பிரமபுரத்துறையும்
சங்கேயொத்து ஒளிர் மேனிச் சங்கரன் தன் தன்மைகளே.

## திருநாவுக்கரசர்

தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும்
எழுதுங் கீழ் கணக்கு இன்னம்பர் ஈசனே.

## சுந்தரர்

பண்ணிடைத் தமிழ் ஒப்பா பழத்தினில் சுவையொப்பா
கண்ணிடை மணியொப்பா கடுவிருள் சுடரொப்பா
மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

## மாணிக்கவாசகர்

வணங்கத் தலை வைத்து வார்கழல் வா வாழ்த்த வைத்து
இணங்கத் தன் சீரடியார் கூட்டமும் வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடி நாம் பூவல்லி கொ யாமோ.

## திருமாளிகைத்தேவர்

நீறணி பவளக் குன்றமே ! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே ! யோக
வெள்ளமே ! மேருவில் வீரா !
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா !
அம்பொன்செ அம்பலத்து அரசே !
ஏறணி கொடியெம் ஈசனே ! உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே.

## சேந்தனார்

திலக நுதல் உமை நங்கைக்கும்
திருவாவடுதுறை நம்பிக்கும்
குலக அடியவர்க்கு என்னையாட்
கொடுத்தாண்டு கொண்ட குணக்கடல்
அலதொன்று அறிகின்றிலேம் எனும்
அணியும் வெண்ணீறு அஞ்செழுத்து அலால்
வலதொன்றிலள் இதற்கு என் செ கேன் !
வயலந்தண் சாந்தையர் வேந்தனே !

## கருவூர்த் தேவர்

தத்தையங் கனையார் தங்கள் மேல் வைத்த
தயாவை நூறாயிரங் கூறிட்டு
அத்திலங்கு ஒரு கூறு உன்கண் வைத்தவர்க்கு
அமருலகு அளிக்கும் நின் பெருமை
பித்தனென்று ஒருகால் பேசுவரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செ யும்
கைத்தலம் அடியேன் சென்னி வைத்த கங்கை
கொண்ட சோளேச்சரத்தானே !

## பூந்துருத்தி நம்பி காடநம்பி

அகலோக மெல்லாம் அடியவர்கள் தற்சூழப்
புகலோக முண்டென்று புகுமிடம் நீ தேடாதே
புவலோக நெறிபடைத்த புண்ணியங்கள் நண்ணிய சீர்ச்
சிவலோகம் ஆவதுந் தில்லைச் சிற்றம்பலமே.

## கண்டராதித்தர்

நெடியானோடு நான்முகனும் வானவரும் நெருங்கி
முடியான் முடிகள் மோதி உக்க முழுமணியின் திரளை
அடியார் அலகினால் திரட்டும் அணிதில்லை அம்பலத்துக்
கடியார் கொன்றை மாலையானைக் காண்பதும் என்றுகொலோ !

## வேணாட்டடிகள்

நின்று நினைந்து இருந்து கிடந்து எழுந்து தொழும் தொழும்பனேன்
ஒன்றி ஒருகால் நினையாது இருந்தாலும் இருக்கவொட்டாஃ
கன்று பிரி கற்றாப் போல் கதறுவித்தி வரவு நில்லாஃ
நன்றிதுவோ திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே.

## திருவாலி யமுதனார்

பவளமால் வரையைப் பனிபடர்ந்து
அனையதோர் படரொளி தரு திருநீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்று பொற் குழல்திருச் சடையும்
திவளமாளிகை சூழ்தரு தில்லையுள்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும்
என் மனம் தழல் மெழுகு ஒக்கின்றதே.

## புருடோத்தம நம்பி

ஆவியின் பரம் என்றன் ஆதரவும் அருவினையேனை விட்டு அம்ம அம்ம !
பாவிவன் மனமிது பையவே போஃப் பனிமதிச் சடையான் பாலதாலோ
நீவியும் நெகிழ்ச்சியும் நிறையழிவும் நெஞ்சமும் தஞ்சமிலா மையாலே
ஆவியின் வருத்தம் இதாரறிவார் ? அம்பலத்து அருள்நடம் ஆடுவானே !.

## சேதிராயர்

அயர்வுற்று அஞ்சலி கூப்பி அந்தோ ! எனை
உயவுன் கொன்றையந்தார் அருளாஃ எனும்
செயலுற்றார் மதில் தில்லையுளீர் ! இவண்
மயலுற்றாள் என்றன் மாதிவளே.

## திருமூலர்

பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்று அணுகாப் பசு பாசம்
பதியணுகில் பசு பாசம் நிலாவே.

## திரு ஆலவாயுடையார்

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில் பொழில் ஆலவாயில்
மன்னிய சிவன் யான் மொழி தரு மாற்றம்
பருவக் கொண் மூப்படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வர விடுப்பதுவே.

## காரைக்கால் அம்மையார்

தலையாய ஐந்தினையும் சாதித்துத் தாழ்ந்து
தலையாயின உணர்ந்தோர் காண்பர் – தலையாய
அண்டத்தான் ஆதிரையான் ஆலாலம் உண்டு இருண்ட
கண்டத்தான் செம்பொற் கழல்.

## ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

குந்தி நடந்து குனிந்தொரு கை கோல் ஊன்றி
நொந்து இருமி ஏங்கி நுரைத்தேறி – வந்து உந்தி
ஐயாறு வாயாறு பாயா முன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை.

## சேரமான் பெருமாள் நாயனார்

பொன் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
 மேனி பொலிந்திலங்கும்
மின் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
 வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
 மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
 ஆகிய ஈசனுக்கே.

## நக்கீர தேவ நாயனார்

பாசத்தை விட்டு நின் பாதத்தின் கீழே என்
நேசத்தை வைக்க நினை கண்டாஃ – பாசத்தை
நீக்குமா வல்ல கயிலாயா நீ என்னைக்
காக்குமாறு இத்தனையே காண்.

## கல்லாட தேவ நாயனார்

பரிவின் தன்மை உருவு கொண்டு அனையவன்
போழ்வார் போர்த்த காழகச் செருப்பினன்
குருதி புலராச் சுரிகை எஃகம்
அரையில் கட்டிய உடைதோல் கச்சையன்
தோல்நெடும் பையிற் குறுமயிர் திணித்து

வாரில் வீக்கிய வரிக்கைக் கட்டியன்
உழுவைக் கூனுகிர் கேழல் வெண்மருப்பு
மாறுபடத் தொடுத்த மாலை உத்தரியன்
நீலப் பீலி நெற்றி சூழ்ந்த
கானக் குஞ்சிக் கவடி புல்லினன்

முடுகு நாறு குடிலை ஆக்கையன்
வேங்கை வென்று வாகை சூடிய
சங்கரன் தன் இனத் தலைவன் ஓங்கிய
வில்லும் அம்பும் நல்லன தாங்கி
ஏற்றுக் கல்வனங் காற்றில் இயங்கிக்

கணையில் வீழ்த்துக் கருமா அறுத்துக்
கோலின் ஏற்றிக் கொழுந்தீக் காஃச்சி
நாவில் வைத்த நாட் போனகமும்
தன் தலைச் சொருகிய தண் பள்ளித் தாமமும்
வாஃ கலசத்து மஞ்சன நீரும்

கொண்டு கானப் பேருறை கண்ணுதல்
முடியில் பூசை அடியால் நீக்கி
நீங்காக் குணத்துக்
கோசரிக்கு அன்று அவன் நேசங் காட்ட
முக்கண் அப்பனுக்கு ஒருகணில் உதிரம்

தக்கிணத்திடை இழிதர அக்கணம்
அழுது விழுந்து தொழுது எழுந்து அரற்றிப்
புன்மருந்து ஆற்றப் போகாது என்று
தன்னை மருந்து என்று மலர்க்கண் அப்ப
ஒழிந்தது மற்றை ஒண்திரு நயனம்

பொழிந்த கண்ணீர்க் கலுழி பொங்க
அற்றது என்று மற்று அக் கண்ணையும்
பகழித் தலையால் அகழி ஆண்டகை
ஒரு கையாலும் இருகை பிடித்து
ஒல்லை நம் புண் ஒழிந்தது பாராஃ

நல்லை நல்லை எனப்பெறும்
திருவேட்டுவர் தம் திருவடி கைதொழக்
கரு வேட்டு உழல் வினைக் காரியங் கெடுமே.

## *கபில தேவ நாயனார்*

கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தட் சடைமேல் – மணங்கொண்ட
தாதகத்த தேன்முரலுங் கொன்றையான் தந்தளித்த
போதகத்தின் தாள் பணியப் போம்.

## *பரண தேவ நாயனார்*

சிவனந்தஞ் செல்கதிக்கு ஓர் கண் சேர்வதாக்கும்
சிவனந்தஞ் செல்கதிக்கு ஓர் கண்ணாம் – சிவனந்தம்
சேரும் உருவுடையீர் செங்கா அட்டங்குடி மேல்
சேரும் உருவுடையீர் செல்.

## *இளம் பெருமான் அடிகள்*

இடர்தரு தீவினைக் கெள்கி நைவார்க்கு நின் ஈரடியின்
புடைதரு தாமரைப் போது கொலாஞ் சரண் போழருவிப்
படர்தரு கொம்பைப் பவள வண்ணாபரு மாதை முயங்
கடைதரு செஞ்சுடர்க் கற்றையொக்குஞ் சடை அந்தணனே.

## *அதிரா அடிகள்*

நிலந்துளங்க மேருத் துளங்க நெடுவான்
தலந்துளங்கச் சப்பாணி கொட்டும் – கலந்துளங்கொள்
காமாரி ஈன்ற கருங்கைக் கடதடத்து
மாமாரி ஈன்ற மணி.

## *பட்டினத்துப் பிள்ளையார்*

ஆதரித்த மாலும் அறிந்திலன் என்றஃதறிந்தே
காதலித்த நாயேற்குங் காட்டுமே – போதகத்தோற்கு
அம்பலத்தான் நீள் நாக கங்கணத்தான் தென்புலியூர்
அம்பலத்தான் செம்பொன் அடி.

## *நம்பியாண்டர் நம்பி*

இரவும் பகலும் நின் பாதத்து அலர் என் வழிமுழுதும்
பரவும் பரிசே அருளு கண்டாஃ இந்தப் பாரகத்தே
விரவும் பரமத கோளரியே குடவெள்வளைகள்
தரளஞ் சொரியுங் கடல்புடை சூழ்ந்த தராஃ மன்னனே.

## *சேக்கிழார்*

செஃவினையும் செஃவானும் அதன் பயனும் கொடுப்பானும்
மெஃவகையால் நான்காகும் விதித்த பொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக்கு இல்லை என
உஃவகையால் பொருள் சிவன் என்று அருளாலே உணர்ந்து அறிந்தார்.

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் திருஞானசம்பந்தர்
பண் : நட்டபாடை 1 ஆம் திருமுறை

தோடுடைய செவியன் விடை ஏறி ஓர் தூ வெண்மதி சூடி
காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரால் முனைநாள் பணிந்து ஏத்த அருள்செஃத
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே.

திரு ஆலவாஃ திருஞானசம்பந்தர்
பண் : காந்தாரம் 2 ஆம் திருமுறை

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர்வாஃ உமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே.

திரு ஆலவாஃ திருஞானசம்பந்தர்
பண் : புறநீர்மை 3 ஆம் திருமுறை

மங்கையர்க்கு அரசி வளவர்கோன் பாவை வரி வளைக் கைம் மடமானி
பங்கயச்செல்வி பாண்டிமா தேவி பணி செஃது நாள்தொறும் பரவப்
பொங்கு அழல்உருவன் பூதநாயகன் நால் வேதமும் பொருள்களும் அருளி
அம் கயல்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாஃ ஆவதும் இதுவே.

திரு அதிகை வீரட்டானம் திருநாவுக்கரசர்
பண் : கொல்லி 4 ஆம் திருமுறை

கூற்று ஆயினவாறு விலக்ககிலீர்
கொடுமைபல செஃதன நான் அறியேன்
ஏற்றாஃ அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே.

பொது திருநாவுக்கரசர்
தனித் திருக்குறுந்தொகை 5 ஆம் திருமுறை

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மா மலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங் காலமே.

திரு ஆலவாஃ திருநாவுக்கரசர்
திருத்தாண்டகம் 6 ஆம் திருமுறை

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானை கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை ஏற்றான் தன்னைச்
சுடர்திங்கட் சடையானை தொடர்ந்து நின்ற என்
தாயானைத் தவமாய தன்மையானைத்
தலையாய தேவாதி தேவர்க்கு என்றும்
சேயானைத் தென்கூடல் திரு ஆலவாஃ
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

திரு வெண்ணெஃநல்லூர் சுந்தரமூர்த்தி நாயனார்
பண் : இந்தளம் 7 ஆம் திருமுறை

பித்தா பிறைசூடீ பெருமானே அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை
வைத்தாஃ பெண்ணைத் தென்பால் வெண்ணெஃநல்லூர்
அருள் துறையுள்
அத்தா உனக்கு ஆளாஃ இனி அல்லேன் எனல் ஆமே.

திருப்பெருந்துறை
மாணிக்கவாசகர்
திருச்சதகம்
8 ஆம் திருமுறை

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்
விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி
சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே.

திருக்கோவையார்
மாணிக்கவாசகர்
பாங்கற் கூட்டம்
8 ஆம் திருமுறை

சிறைவான் புனல்தில்லை சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிக் கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ அன்றி ஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென் கொலாம் புகுந்து எய்தியதே.

தில்லை
சேந்தனார்
பண் : பஞ்சமம்
9 ஆம் திருமுறை ( திருவிசைப்பா )

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

தில்லை | சேந்தனார்
பண் : பஞ்சமம் | **9** ஆம் திருமுறை ( திருப்பல்லாண்டு )

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள் வஞ்சகர் போஃ அகல
பொன்னின் செஃ மண்டபத்துள்ளே புகுந்து புவனி யெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன் அடியோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

திருமந்திரம் | திருமூலர்
அன்புடைமை | **10** ஆம் திருமுறை

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாஃ அமர்ந்திருந்தாரே.

அற்புதத் திருவந்தாதி | காரைக்கால் அம்மையார்
**11** ஆம் திருமுறை

இடர் களையாரேனும் எமக்கு இரங்காரேனும்
படரும் நெறி பணியாரேனும் – சுடர் உருவில்
என்பறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு
அன்பு அறாது என் நெஞ்சு அவர்க்கு.

திருத்தொண்டர் புராணம் | தெஃவச் சேக்கிழார்
நடராசர் துதி | **12** ஆம் திருமுறை

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்



## வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

வையம் நீடுக மாமழை மன்னுக
மெஃவிரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறிதான் தழைத்தோங்குக
தெஃவ வெண் திருநீறு சிறக்கவே.

வான்முகில் வழாது பெஃக மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செஃக குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்.

திருச்சிற்றம்பலம்

# எமது திருக்கூட்டத்தின் அரும்பணிகள்

எங்கள் திருக்கூட்டத்தின் சார்பாக **ஐங்கரப் பெருமான் வேள்வி, திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு, நாள் வழிபாடு, அறுபத்து மூவர் குருபூசை வழிபாடு, அர்த்தசாம வழிபாடு, பிரதோச வழிபாடு, வார வழிபாடு, உழவாரப் பணி, திருவாசகம் முற்றும் ஓதுதல் முதலிய வழிபாடுகளை திருவருளால் திருநெறிய தமிழால்** செஃது வருகின்றோம். மேலும்,

மக்கள் வாழ்க்கைத் தொடர்பான கால்கோள் விழா, புதுமனை புகுதல், அறுபது, எண்பது அகவை வழிபாடு, திருமணம், வளைகாப்பு, குழந்தைக்கு பெயர் சூட்டுதல், காதணி விழா, எழுத்தறிவித்தல், நீத்தார் கடன் முதலியவற்றைத் தெஃவ ஒண்தீந்தமிழ் நெறிப்படி அவ்வவருக்கு ஏற்றபடி நடத்த ஆவல் கொண்டு முறைப்படி பலகாலும் செஃது வருகிறோம்.

எந்த ஒரு விழாவிலும் செஃபப்படும் வழிபாட்டில் சொல்லும் மந்திரமும் கேட்பவர்களுக்கும் தெரிய வேண்டும், புரிய வேண்டும், அப்பொழுதுதான் அதன் பயனை அடைய முடியும். தமிழர் நிகழ்வுகளில் தமிழ்ப்பாடல்கள் தாம் இடம்பெற வேண்டும் என்பதில் இருவேறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது, இருக்கக் கூடாது. பன்னிரு திருமுறைகளும் நமது பரம்பரைச் சொத்துக்கள். அவற்றை நடைமுறைப்படுத்த அன்போடு அழைக்கின்றோம்.

நமது திருமுறைகள் முதலையுண்ட பாலகனை மீட்டுத் தந்திருக்கிறது, எலும்பை பெண்ணாக மாற்றியிருக்கிறது, ஆண் பனையை பெண் பனையாக மாற்றியிருக்கிறது, வாழ்வியலுக்கு வேண்டிய பொன்னையும் பெண்ணையும் தந்திருக்கிறது. தேவார, திருவாசக திருமுறைகளால் பெறமுடியாதது என்று எதுவுமே இல்லை, **பன்னிரு திருமுறைகளால் பெறமுடியாத ஒன்றை வேறு எந்தவகையிலும் பெறமுடியாது என்பது திண்ணம்.**

*நாளும் இறைபணியில்,*

**சிவனடியார் திருக்கூட்டம் அறக்கட்டளை,** பவானி.

திருச்சிற்றம்பலம்

# நூல் கிடைக்கும் இடங்கள்

**சிவனடியார் திருக்கூட்டம் அறக்கட்டளை**
483, காவேரி வீதி, கூடுதுறை,
பவானி – 638 301. ஈரோடு மாவட்டம்.
அலைபேசி : 94437 – 36238, 96297 – 13353,
99763 – 17761.

**சிவ. பி. பிரியா**
அலைபேசி : 99652 – 29869

**வள்ளலார் புத்தக நிலையம்,**
அருள்மிகு சங்கமேசுவரர் திருக்கோயில், பவானி.

**சிவ. செ. சரவணக்குமார், ஈரோடு.**
அலைபேசி : 99655 – 70979

**சிவ. பா. கௌரிசங்கரன், ஈரோடு.**
அலைபேசி : 98429 – 12767.

**சிவ. ஏகலைவன், பாலக்கோடு, தருமபுரி.**
அலைபேசி : 97918 – 69859

**சைவ சித்தாந்தப் பேரவை, வேலூர்.**
அலைபேசி : 94436 – 26092.

**சிவ. சே. க. சேகர், தஞ்சாவூர்.**
அலைபேசி : 99447 – 00404 , 85267 – 93657

**திருநாவுக்கரசு சமய சமுதாய அறக்கட்டளை, எடப்பாடி.**
அலைபேசி : 98425 – 10562.

# நூல் கிடைக்கும் இடங்கள்

**சிவ. வை. நாகராசன். ஈரோடு + திருச்செங்கோடு**
அலைபேசி : 98431 – 42359

**சிவ. சு. கதிர்வேல், கோவை.**
அலைபேசி : 98427 – 96599

**சிவ. சுரேசு, கோவை.**
அலைபேசி : 99653 – 57888

**சிவ. பி. கே. பழனிசாமி, பாப்பம்பட்டி, கோவை.**
அலைபேசி : 99760 – 83084

**சிவம் பெட்டிகோட்ஸ், சேலம்**
அலைபேசி : 94433 – 65090

**சிவ. சுப்பிரமணியம், வண்டியூர், மதுரை**
அலைபேசி : 99444 – 59684

**சிவ. இரா. குமரேசன், சென்னை.**
அலைபேசி : 99520 – 85647

**சிவ. குமரன், சென்னை**
அலைபேசி : 98408 – 19439

**சிவ. திருஞானசம்பந்தன், ஓசூர்.**
அலைபேசி : 94432 – 24283

**சிவ. முருகன், பெங்களூர்.**
அலைபேசி : 98451 – 24927